146

வாடாமலர்

VADA MALAR ★ டிசம்பர் 1949 6 அணா

சங்கீத சபைத் தலைவர் :—''பாகவதர்வாள்! என்ன ....இப்படி ஒரேயடியா உதிர்த்துத் தள்ளிட்டயளே, இன்னிக்கு கச்சேரியிலே!.........''

பாகவதர் :—''ஹி.. ஹி...ஹி ! ஒரே பிர்க்காவா உதிர்த்துட்டனே, அதைச் சொல்றயளா ?''

சபைத் தலைவர் :—''அட, அதைச் சொல்லலைங்காணும்; ஒரே அபஸ்வரமான்னு உதிர்த்துப் பிட்டேள்......உமக்கு ஒரு 'சான்ஸ்' கொடுக்கப் போக நம்ம தலை உருளுகிறதுங்காணும்........''

எல்லா ஊர்களிலும் விற்பனை ஏஜண்டுகள் தேவை

பாலர்மணி : மாம்பலம் : சென்னை—17.

இந்தியாவின் தலைசிறந்த
பட்டணம் பொடி

காலையில் எழுந்தவுடன் சுறுசுறுப்புடனிருக்க
ஒரு சிட்டிக்கை

உடல் சுத்தி செய்து உண்டி அருந்தி உறுதியுடன்
உழைப்பிலிறங்க. ஒரு சிட்டிக்கை

பகல் போஜனத்திற்குப்பின் பரவசமடைய
ஒரு சிட்டிக்கை

மனோகரமான மாலை வேளையில் மனநிம்மதியுட
னிருக்க ஒரு சிட்டிக்கை

பெண்டு பிள்ளைகளுடன் உண்டு களித்து
உறங்கப்போகுமுன் ஒரு சிட்டிக்கை

T.A.S. ரத்தினம்
பட்டணம் பொடி

T.A.S. ரத்தினம் பிரதர்ஸ், தபால்பெட்டி 1151, வண்ணாரப் பேட்டை, மதராஸ்.



தங்கம் வைர நகை வியாபாரம்

கே. ஆர். அண்டு சன்ஸ்

பெரிய கடை வீதி கோயமுத்தூர்

தந்தி BULLION   KR சீல்   டெலிபோன் 226

Prices now down
to BASIC LEVEL...

SUPER BLEND
COFFEE POWDER

Rs. 2-4-0 per Pound

Retail Branches:
285, CHINA BAZAAR ROAD
MADRAS.
71, PONDY BAZAAR
T. NAGAR.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-3-9-50
16 JAN 19
MADRAS

வாடா மலர்

பொருளடக்கம்

“ பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே ”

மலர் 1 டிஸம்பர் 1949 இதழ் 3

தமிழ்மொழியின் தனிச் சிறப்பு
ஆஸ்தான கவிஞர் 4
வழியும் வாழ்த்தும்
டாக்டர் மு. வரதராசன் 6
சர்க்கரைத் திருடர்கள்
கலியுகக் கவிராயர் 10
நம் போர்ப்படைகள் ... 12
சங்கீத மேடை *படங்கள்* 17
நட்சத்திர மண்டலம் *படங்கள்* 21
மின்னல் கொடியாள்
ரவீந்திரநாத் டாகூர் 25
என் அலங்காரம் *சுந்தா* 36
அதிர்ஷ்ட நம்பர் பரிசு ... 41
சலனச் சித்தம் *இராமப் பிரேமா* 42
மாரன்கணை *சுவாமி* 46
சந்திப்பின் பலன் *பாலசுந்தரி* 52
நாளைய தினம் *முகுந்தன்* 60
யார் அந்தப் பாபி? 71
ஏ. கே. பட்டுசாமி
மகிழந்தோப்பு மோகினி *ஸ்ரீஜனி* 80
மித்திரபேதம் *பாலர் மலர்* 85

வாடாமலரில் வெளியாகும் கதை கட்டுரைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனையே.

‘வாசகன்’ எழுதும்

தென்னிந்தியப்
பத்திரிகைகள்

என்னும்
கட்டுரை அடுத்த இதழில்
வெளியாகும்.

தமிழ் மொழியின் தனிச் சிறப்பு

ஆஸ்தான கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

அனாதியான ஆண்டவனைப் போல் தமிழ்மொழியும் ஆதி அந்தம் அறிய முடியாத பெருமையுள்ள புராதனமொழியாகும். அழிவில்லாத ஜீவ தத்துவம் நிறைந் துள்ளதால் 'என்றுமுள தென்றமிழ்' என்று கம்பன் பாடியிருப்பதில் வியப்பில்லை. பல்லாயிரம் ஆண்டுகள் சென்றும், இன்னும் இளமையும் வளமையும் குறையாத எழிலுடையதாக இருப்பதனால் 'கன்னித் தமிழ்' என்று கற்றவர்கள் பாராட்டுகிறார்கள். கல்வி யறிவும் கவிதைச் சிறப்பும் கலை யறிவும் மிகுந்துள்ள காரணத்தால் அதைப் படிக்கிற எவரும் இன்பமே அடைகிறார்கள். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்' என்று மகாகவி பாரதியார் பரவசத்துடன் பாடினார். உலகத்திலுள்ள எல்லா மனிதர்களும் ஒரே கடவுளின் மக்கள் என்னும் உண்மையை நெடுங்காலத்துக்கு முன்னாலிருந்தே உணர்ந்து 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற எண்ணத்தை நம்முள் நிலைபெறச் செய்தது தமிழ் மொழியே. மதவெறி, நிறவெறி, மொழி வெறி முதலிய வெறுப் புணர்ச்சிகளை முற்றிலும் விலக்கி விட்டுச் சிங்களம், புட்பகம், சாவகம் முதலிய தீவுகளிலும், எகிப்து, இத்தாலி முதலிய நாடுகளிலும் சென்று பல நாட்டு மக்களோடும் உறவு கொண்டு வாணிபம் நடத்திப் பரிசு பெற்று வந்த பண்புகளில் நம்மைப் பழக்கி வைத்த பெருமை தமிழ் மொழியையே சேரும். இந்தச் சிறப்புகளெல்லாம் தமிழ் நம்முடைய தாய் மொழி என்பதற்காகச் சொல்லப்படும் தற்புகழ்ச்சிகள் அல்ல. எல்லா மொழிக்கும் அதனதன் சிறப்புகள் இருக்கலாம். அவரவர்கள் தாய் மொழியே அவரவர்களுக்குச் சிறந்ததாகவும் தோன்றும். ஆனாலும் தமிழ் மொழிக்கே உள்ள தனிச் சிறப்புகளை மற்றவர்கள் மதிக்கா விட்டாலும் நாம் மறந்துவிடக் கூடாது அல்லவா?

* * *

மேல்நாட்டு மொழிகள் விஞ்ஞான வளர்ச்சியையும் அரசியல் வித்தியாசங்களையும் அதிகமாக விவரிக்கின்றன. பல சாஸ்திரங்களுக்கும் இருப்பிடமாகிய வடமொழி ஆன்மஞானத்தையும் தெய்வ சக்தியையும் கர்மங்களின் பலாபலன்களையும் பிறப்பு இறப்பின் தொடர்ச்சிகளையுமே அதிகமாகப் பேசுகின்றது. அமெரிக்க இலக்கியங்கள் விஞ்ஞான வித்தையைப் பெருக்குகின்றன. ஜெர்மனி இலக்கியங்கள் போர் வீரத்தையும் படைச் செருக்கையுமே மிகுதியாகப் பாராட்டுகின்றன. பிரெஞ்சு இலக்கியங்கள் மனித வாழ்க்கைக்கு வேண்டிய சுகபோக சாதனங்களையே அதிகமாகச் சுட்டிக் காட்டுகின்றன.

விஞ்ஞான அறிவும், அரசியல் நுணுக்கமும், ஆன்ம ஞானமும், தெய்வ நம்பிக்கையும், பொருளாதார பலமும், போர் வீரமும், படைச் செருக்கும், சுகபோக சாதனங்களும் ஆகிய இவை

அனைத்தும் மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவிஷயங்களே. ஆனால் இவற்றுள் எதுவும் தனியாக உலக வாழ்க்கைக்கு உதவாது. இவை அனைத்தும் ஏறத்தாழவாவது சேர்ந்திருக்கும் இடத்தில் தான் மக்கள் மனித வாழ்க்கை நடத்த முடியும். அதற்காக மேற்சொன்ன அத்தனை விஷயங்களையும் சேர்த்து, ஒவ்வொரு விஷயத்தையும் வைக்க வேண்டிய இடத்தில் வைத்துச், சொல்லவேண்டிய முறையில் சொல்லி அறிவுறுத்துகின்ற ஒரு இலக்கியம் தமிழ் மொழியில் தான் உண்டு. அந்த இலக்கியம் தான் திருக்குறள். திருக்குறள் எந்தக் காலத்துக்கும் பொருத்தமாக, மானிடவர்க்கம் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய எல்லா அறிவுகளும் அறங்களும் அடங்கியது. தமிழ் மொழியின் தனிச்சிறப்புக்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

• • •

வேற்றுமைகள் தான் உலகத்தின் இயல்பு. வேற்றுமைகள் இல்லையானால் உலகம் இல்லை. எண்ணிறந்த இந்த வேற்றுமைகள் யாவும் ஒரே சக்தியின் வெவ்வேறு தோற்றங்களாகும். 'மாப்பழம்' என்றால் ஒரு வகைப் பழத்தைக் குறிக்கிறது. ஆனால் மாம்பழத்தில் எத்தனையோ வகைகள் இருக்கின்றன. ஒவ்வொரு வகைக்கும் உருவமும், நிறமும், மணமும், சுவையும் வெவ்வேறாக இருக்கின்றன. அதைப் போலவே உலகத்திலுள்ள தாவர ஜங்கமப் பொருள்கள் எல்லாவற்றிலும் இந்த இன வேற்றுமைகள் இருக்கின்றன. இந்த வித்தியாசங்களை மாற்றிவிட்டால் உலகத்தில் இன்பமில்லை. உலகம் முழுவதும் ஒரே ஜடம் ஆகிவிடும். ஆதலால் இந்த இன வேற்றுமைகளை மாச்சரியங்களுக்கு இடங்கொடுக்காமல் ரஸிக்க வேண்டுமே யல்லாமல் அழிக்க முயலக் கூடாது.

மற்ற எல்லாப் பொருள்களிலும் இனவேற்றுமை இருப்பதைப் போல மனிதர்களுக்குள்ளும் இனவேற்றுமை உண்டு.

வசிக்கின்ற இடத்தின் சீதோஷ்ணங்களாலும், நீர்வள நிலவள நிலைமைகளாலும், உணவு, உடை, முதலிய வித்தியாசங்களாலும், இவற்றைச் சேர்ந்த பழக்க வழக்கங்களாலும் கல்வியினாலும், கலைகளினாலும், மொழியினாலும் வெவ்வேறு நாட்டின் மக்கள் வெவ்வேறு இனங்களாக இருந்து வருவது வெளிப்படை. அப்படிப்பட்ட இனங்களில் தமிழ் இனம் ஒரு தனித் தொகுதி. இந்தத் தமிழ் இனம் மிக மிகப் பழைமையானது. அதன் சரித்திர ஆரம்பம் எப்போது என்று எவராலும் கணிக்க முடியாது. தொன்று தொட்டு இந்தத் தமிழ் இனம் மிகச் சிறந்த கல்வியையும் கலைகளையும் உலகத்துக்கு உதவியிருக்கிறது. சித்திரம், சிற்பம், சங்கீதம், நடனம், நாடகம், கவிதை, இசைக் கருவிகள் இவற்றில் தமிழ் இனம் என்றும் தலைசிறந்து விளங்கி வந்திருக்கிறது. பண்டைய தமிழ் இனம் கண்டறிந்த இல்லற ஒழுக்கம், குடிமுறை, அரசியல் முறை, வரிமுறை, வாணிபமுறை, சமுதாய ஒத்துழைப்பு, சமதர்மப் பங்கீடு முதலியவற்றுக்கு இணையான ஏற்பாடுகள் வேறு எந்த நாட்டிலும் எந்தச் சமூகத்திலும் இன்றளவும் இருந்ததில்லை.

வழியும் வாழ்த்தும்

டாக்டர் மு. வரதராசன்

நாடாளும் தலைவனாகவே ஒருவன் விளங்கினாலும் அவன் வீடாளும் அன்பனாக வாழ வேண்டும். வீட்டு வாழ்க்கையில் அன்பைக் காணாத ஒருவன் நாட்டில் அமைதி காண முடியாது. குடும்பத்தில் செம்மைப்படாதவன் பொது வாழ்க்கையைச் சீர்ப்படுத்தி விட முடியாது. "வீட்டில் உள்ள பழக்கமே நாட்டில் உண்டாம்" என்று பாரதியார் பாடினார். இது குடிமக்களுக்குப் பொருந்துவது போல், குடிகளின் தலைவர்களுக்கும் பொருந்தும். இதை உணர்ந்தே இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் ஒரு புலவர் அரசன் ஒருவனை வாழ்த்தும்போது, "உனக்கு இனிய இல்வாழ்க்கை அமைய வேண்டும்" என்று வாழ்த்தினார்.

இதை அவர் வெளிப்படையாகச் சொல்லிவிடவில்லை. கவிச்சுவையில் களிப்புற்ற புலவராகையால் நயம் பெறக் கூறியிருக்கிறார்.

"அரசே! நீ சினம் மிக்க வேந்தன். போர்க்களத்தில் சீறி எழுந்து போர் பல செய்து பழகிய உன் மனத்தில் சினம் தோன்றுவது இயற்கை. ஆனால், அந்தச் சினம் உன் குடும்ப வாழ்க்கையில் தோன்றாமலிருக்க வேண்டும். உன் மேல் காதல் கொண்ட உன் துணைவியர் சில வேளைகளில் அன்பு காட்டாமல் வெறுப்பையும் காட்டக் கூடும். அந்த வெறுப்பின் அடிப்படையில் அன்பு வாழ்வதை மறக்காதே. நீ உடனே சினம் கொண்டு எதிர்க்காதே. தவிர, குடும்ப வாழ்க்கையில் துணைவியருக்கே சினம் கொள்ளும் உரிமை உள்ளது. இங்கே உனக்குக் கடமை மட்டுமே இருக்கிறது. ஆகையால், அந்தத் துணைவியர் ஊடல் கொண்டு உன்னை நோக்கும்போது அவர்களின் முகத்திற்கு எதிரே உனக்குச் சினம் தோன்று

மலிருக்க வேண்டும். நீ வீரன் என்பதை அப்போது மறந்து விட வேண்டும். காதலன் என்பதை உன் நினைவில் கொள்ள வேண்டும்'' என்னும் கருத்தை உணர்த்தி வாழ்த்தினர். இவ்வளவு விரிவாகப் பல சொற்களால் சொல்வது பாட்டு அல்ல; ஆகையால் "உன் அன்பான துணைவியரின் ஊடல் முகத்திற்கு எதிரே உன் சினம் தணிவதாக'' என்று வாழ்த்தினர்.

நாடாளும் கடமையைக் குறித்துப் புலவர் பாடும்போது, "உன் ஆட்சி முறையை வெறுத்தும் எதிர்த்தும் தீங்கு செய்யும் பகைவர்களை இரக்கமில்லாமல் ஒழிப்பாயாக'' என்று குறித்தார். அதையும் அந்தக் காலத்து அரசியல் முறையை ஒட்டிக் குறிப்பிட்டார். அக்காலத்தில் பகைவர் என்றால், பெரும்பாலும் பிற நாட்டு அரசரும் அவரைச் சார்ந்தவர்களுமாகவே இருப்பார்கள். ஆகையால் அவர்களை ஒழிப்பதற்கோ ஒறுப்பதற்கோ வழி ஒன்றே; அதாவது அவர்கள்மேல் படையெடுத்துப் போர் செய்வதே ஆகும். அவ்வாறு போர் செய்து வெற்றி பெற்ற பின் இரக்கம் தோன்றக் கூடும். இரக்கத்திற்கு இடம் கொடுத்தால், பகைவர்கள் அடங்கியிருந்து பிறகு காலம் வாய்த்தபோது மறுபடியும் எதிர்த்துத் தீமை செய்வார்கள். ஆகையால் இரக்கம் இல்லாமல் அவர்களுடைய வளமான வாழ்க்கையைப் பாழ்படுத்துவது அக்காலத்து அரசர்க்குக் கடமையாக இருந்தது. இக்காலத்தில் கடமைகளும் முறைகளும் பல துறையிலும் மாறி வந்திருப்பதைப் போலவே போர்த்துறையிலும் மாறி வந்திருக்கிறது. ஆயினும், புலவருடைய கருத்தை உணர வேண்டுபானால், பழங்காலத்து வரலாற்றுக் கண்கொண்டு காண வேண்டும். அக்காலத்தில் பகைவரை வென்ற பின், அவர்களுடைய நாட்டைத் தீவைத்துக் கொளுத்துவது ஒரு கடமையாக இருந்தது. தன் நாட்டின் நன்மையைக் கருதி வென்ற அரசன் இரக்கம் இல்லாமல் இந்த அழிவு



வேலை செய்வது வழக்கமாக இருந்தது. இந்த அழிவு வேலையைச் செய்யத் தயங்கக் கூடாது என்றுதான் புலவர் வாழ்த்தில் குறிப்பிட்டுள்ளார். "அரசசே! நீ உன் பகைவரின் நாட்டைத் தீக்கு இரையாக்கி எரிக்கும்போது, அந்தப் புகையின் வெப்பத்தால் நீ அணிந்துள்ள மாலை வாடுவதாக" என்று கூறியிருக்கிறார்.

சமய நூல் கற்றுணர்ந்த நல்ல அறிஞர்களின் மனம் ஆற்றல் மிகுந்த மனம். அவர்கள் தூய வாழ்க்கை வாழும் பெரியோர்கள். ஆகையால் அவர்களுடைய வாழ்த்துக்கு உரியவனாக விளங்க வேண்டும் என்று நாடாளும் தலைவன் விரும்ப வேண்டும். அவர்களிடம் அவன் வணக்கத்தோடு நடந்து கொள்ள வேண்டும். "நாட்டிலுள்ள மக்களுக்கெல்லாம் தலைவனாக விளங்கும் நாம் பிறரை வணங்குவதா?" என்ற செருக்கான எண்ணத்திற்கு இடம் கொடுக்கக் கூடும். நல்லறிஞர்களின் தூயநெஞ்சம் தன் பெருமையை விட உயர்ந்தது என உணர வேண்டும். தான் சட்டங்களால், ஆணைகளால் செய்யக் கூடியவற்றை விட மிகுதியாக அறிஞர்களின் தூய எண்ணங்களும் சொற்களும் செய்ய முடியும் என்று நம்ப வேண்டும். ஆகையால், அவர்களை வணங்கி வாழ்த்துப் பெறுவது அரசனது கடமை என்னும் கருத்தை, "அரசர் பெருமானே! முனிவர்கள் வாழ்த்தியருளும் கைக்கு எதிரே உன் தலை வணங்குவதாக" என்று குறிப்பிடுகிறார்.

மற்றொன்றையும் புலவர் அறிவுறுத்தியுள்ளார். எல்லோருடைய வாழ்க்கையிலும் அடிப்படையில் ஓர் உண்மை விளங்குகிறது. இந்த நிலவுலகத்தின் இயக்கத்திற்கும் பிறவற்றிற்கும் காரணமாகப் பல சக்திகள் இருப்பது போல உயிர்களின் பிறப்புக்கும் வாழ்வுக்கும் மறைவுக்கும் அடிப்படைக் காரணமாக ஒரு சக்தி இருக்கிறது. அதையே அறம் என்று சொல்வார்கள். அறத்தின் நெறியில்நடந்தால் உயிர்கள் இன்பமுறும்; தவறினால் துன்பமுறும். இவ்வளவு அடிப்படையாக இருந்து உயிர்களைக் காக்கும் அந்த அறத்தையே கடவுள் என்று உருவகப் படுத்தி, அதை மதித்து வழிபடும் முறைக்கு உரியதாக நிலையங்களையும் ஏற்படுத்தினார்கள். உருவங்களும் பெயர்களும் இடங்களும் அமைத்தது என்? மனத்தைத் திருத்துவதற்கே. ஆகையால், கோயில் என்னும் அந்த இடத்தில், சிவன் முதலிய உருவங்களையும் பெயர்களையும் தாங்கியுள்ள அந்தக் கடவுளை வணங்கச் செல்ல வேண்டும். அப்படி அரசன் செல்லும்போது, தன் நிழலில் உலகம் வாழ்வதாக நினைத்துப் பிடிக்கும் அரச குடையைத் தாழ்த்த வேண்டும்; "அறத்தின் நிழலில் நானும் வாழ்கிறேன்" என்ற உண்மையை அரசன் நினைப்பதற்கு அது அறிகுறியாகும். இதையே புலவர், "அரசே! உன் கொற்றக் குடை கோயிலை வலம் வரும்போது தாழ்வதாக" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"கோயில் வலம் வரும்போது குடை தாழ்க; முனிவரின் வாழ்த்தின் எதிரே தலை வணங்குக; பகைவர் நாட்டை அழிப்ப

தால் யாலே வாடுக ; உன் காதலியரின் ஊடலுக்கு முன் சினம் தணிக'' என்று நான்கையும் குறிப்பிட்ட பின், புலவர், "நீ நீடுழி வாழ்க!'' என்று வாழ்த்தியுள்ளார். அந்த வாழ்த்தையும் நயம்பட்க் கூறியுள்ளார்.

சூரியன் தோன்றி மறைவதால் நாட்கள் பிறந்து கழிவதாக அறிகிறோம். சந்திரன் வளர்ந்து தேய்வதால், மாதங்கள் தோன்றிக் கழிவதாக அறிகிறோம். காலத்தை நாட்களாகவும் மாதங்களாகவும் கழித்துக் காட்டும் சூரிய சந்திரரோ என்றும் உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். "குடிமக்களின் வாழ்க்கையைக் காக்கும் உன்னுடைய வாழ்வும் சூரியனைப் போலவும் சந்திரனைப் போலவும் நிலைபெற வேண்டும்'' என்று புலவர் வாழ்த்தும் வாழ்த்து மிகச் சிறந்து விளங்குகிறது.

இவ்வாறு வாழ்த்தியவர் காரிகிழார் என்னும் பழம் புலவர். வாழ்த்தைப் பெற்ற அரசன் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பவன். பாட்டின் பகுதி வருமாறு :—

பணியியர் அத்தைநின் குடையே முனிவர்
முக்கண் செல்வர் நகர்வலம் செயற்கே;
இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே;
வாடுக இறைவநின் கண்ணி ஒன்னார்
நாடுசுடு கமழ்புகை எறித்த லானே;
செலியியர் அத்தைநின் வெகுளி வாலிழை
மங்கையர் துனித்த வாள்முகத்து எதிரே;...
...தண்கதிர் மதியம் போலவும் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெருமநீ நிலமிசை யானே.

(புறநானூறு—6)

[பணியியர்-பணியட்டும். அத்தை-அசை. நகர்-கோயில். இறைஞ்சுக-வணங்கட்டும். கண்ணி-மாலை. துனித்த-ஊடல்கொண்ட, நிலமிசையான்-நிலவுலகின்மேல். மன்னிய-நிலைபெறுக.]

சாவி எழுதிய

வத்ஸலையின் வாழ்க்கை

வெளி வந்து விட்டது

காந்தி மகாத்மாவின் நவகாளி யாத்திரையின்போது நிகழ்ந்த ஒரு சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது.

விலை ரூபாய் 1

வாடாமலர்—மாம்பலம். சென்னை. 17.

சர்க்கரைத்

அண்ணா வாடா தம்பி வாடா
அருமை மகனே வாடா
கண்ணே வாடா மணியே வாடா
கற்கண்டே வாடா!

கற்கண் டென்றதும் சர்க்கரைக் கஷ்டம்
கவனம் வருகுதடா
பற்பல சூழ்ச்சிகள் பண்ணிப் பதர்கள்
பணத்தைச் சுருட்டுதடா!

சர்க்கரைத் திருடரின் சண்டித் தனங்கள்
சந்தி சிரிக்குதடா
சர்க்கார் செல்லம் கொடுத்து அவர்கள்
சக்தியை வளர்க்குதடா!



அந்நிய நாட்டுச் சர்க்கரைக் கிங்கே
அதிக வரிகளடா
இந்திய சர்க்கரை மில்கள் தழைக்க
இயற்றினர் சட்டமடா!

திருடர்கள்!

என்ன செய்தும் இங்கு சர்க்கரைக்கு
இன்னும் பஞ்சமடா
சின்ன புத்தி படைத்த 'சிண்டிகேட்'
சில்லறை வேலையடா!

தட்டிக் கேட்க ஆளில் லாத
தம்பிகள் இவர்களடா
பெட்டிப் பாம்பாய் இவர்களை யடக்கப்
பேசிப் பயனிலைடா!

அயலூர் சர்க்கரை வந்தால் இவர்கள்
ஆட்டம் குறையுமடா
பயனும் விலையும் பஞ்சமும் தொலையும்
பணமும் மிச்சமடா!

உள்ளூர் சர்க்கரை மில்கள் இதனால்
ஊனம் அடைந்தாலும்
கள்ள மார்க்கெட் கயவர்கள் தொல்லை
கடிதில் தீருமடா!

—கலியுகக் கவிராயர்



நம் போர்ப் படைகள்

ஒரு தோட்டத்துக்குள் பற்பல செடிகளும், பலவித மரங்களும் வளர்கின்றன. மா, பலா, வாழை, தென்னை கமுகு, இவ்வளவும் சேர்ந்து அழகிய தோப்பாகக் காட்சி அளிக்கின்றன. இத்தனை அழகிய மரங்களுக்கும், கொடிகளுக்கும் பாதுகாப்பாகத் தோப்பைச் சுற்றிலும் கருவேல மரங்களும், முட் புதர்களும் பயிராகின்றன. தோப்புக்கு மத்தியிலும் முளைத்து வளர்கின்றன.

தோப்பின் வளமைக்கும் பாதுகாப்புக்கும் சுற்றிலுமுள்ள முள் வேலி மரங்கள் இன்றியமையாத அம்சமாகி விடுகின்றன.

தோப்பின் பாதுகாப்புக்கு முள் வேலி மரங்கள் எத்தனை அவசியமோ, அதைப்போல் ஒரு தேசத்தின் பாதுகாப்புக்கு இராணுவப் படைகள் அவசியமாகும்.

தேசப் பொது மக்கள் தோப்பு மரங்களைப் போலவும், போர்ப் படை வீரர்கள் முள் வேலி மரங்களைப் போலவும் வாழ வேண்டும்.

இந்திய வீரர்கள் சாதாரண முள் வேலி மரங்கள் அல்ல. வயிரம் பாய்ந்த திடமான வேலமரங்களைப் போன்றவர்கள். வீரத்திலும் தீரத்திலும் நிகரற்று விளங்குபவர்கள். அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள். நமது சேனை வீரர்களின் பராக்கிரமம் கடந்த மகா யுத்தத்தின் மூலம் நன்கு வெளியாயிற்று. சமீபத்தில் காஷ்மீரமும், ஹைதராபாத்தும் நமது இராணுவத்தினரின் திறமைக்கு உரை கல்லாக விளங்கின.

ஒரு தேசம் சுதந்திரம் பெறுவதற்கு இராணுவத்தின் உதவி தேவையில்லை. ஆனால் பெற்ற சுதந்திரத்தைக் காக்க இராணுவம் அவசியம் தேவை. இந்தியா தேசம் காந்தி மகாத்மாவின் சாத்வீகப் போராட்டத்தின் மூலமும், நம் அரும் பெரும் தலைவர்களின் தியாகத்தினாலும் சுதந்திரம் பெற்றது. சுதந்திரப் போராட்ட சமயத்தில் இராணுவத்துக்கும் நமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாமலிருந்தது. தியாகத்தினால் பெற்ற சுதந்திர இந்தியாவை நாம் இப்போது இராணுவத்தினர் கையில் பத்திரமாக ஒப்படைத்திருக்கிறோம்.

சுதந்திர இந்தியாவில் தோப்பு வேறு, முள் வேலி வேறு என்ற வித்தியாசம் போய் விட்டது.

தேசத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள நம்முடைய வீரர்களைப் பற்றின விவரங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டாமா? போர்ப் படைகள் எத்தனை விதம், அவை எங்கெங்கே இருக்கின்றன, நமது வீரர்கள் அணிந்து கொள்ளும் சின்னம் என்ன, அவர்களுடைய சம்பளம் என்ன—இத்தகைய விவரங்களை நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா?

'இதை யெல்லாம் நாம் யாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது? இதற்காக எந்தப் போர்முனைக்குப் போவது?' என்று கேட்கிறீர்களோ? நல்லது; நாம் எங்கேயும் போக வேண்டாம், தெரிந்து கொள்ளும் ஆசைமட்டும் இருந்தால் போதுமானது.

நம் இநதிய சைன்யத்தின் பிரதான அதிகாரிகளில் ஒருவராய் விளங்கும் லெப்டினண்ட் கர்னல் ஏ. என். எஸ். மூர்த்தி அவர்கள் நம் போர்ப் படைகளைப்பற்றிய சகல விவரங்களும் அடங்கிய ஓர் அருமையான புத்தகமாக எழுதி யிருக்கிறார்.

போர் வீரர்கள் என்றால் யார்? அவர்களில் எத்தனை வருப்பு? அவர்களுடைய வேலை, சம்பளம் முதலிய எல்லா விவரங்களையும் சாங்கோ

ஸ்டார் பிரசுரத்தாரின் "நம் போர்ப் படைகள்" என்னும் புத்தகத்தின் வெளியீட்டு விழா.

மேற்படி விழாவுக்கு மேஜர் ஜெனரல் ருத்ரா தலைமை வகித்தார். ஸ்டார் பிரசுரம் நிர்வாகி திரு செல்லப்பன் விழாவுக்குத் தலைவர்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளைப் படிக்கிறார். கல்வி மந்திரி மாதவ மேனன், தினமணி ஆசிரியர் ஸ்ரீ ஏ. என். சிவராமன், ஸ்ரீ சிவஞான கிராமணியார், ஸ்ரீ எஸ். வையாபுரிப் பிள்ளை முதலியவர்களை மேலே உள்ள படத்தில் காணலாம்.

பாங்கமாகவும் சகலருக்கும் புரியும் முறையில் தெள்ளத் தெளிந்த சுலபமான தமிழிலும் எழுதி யிருக்கிறார். இந்த அழகிய போர்ப் படை நூலை திருவல்லிக்கேணி ஸ்டார் பிரசுரத்தார் மிக அழகிய முறையில் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள்.

போர்ப் படை என்றாலே ஏதோ துப்பாக்கி வெடிகளும், பீரங்கிச் சத்தங்களும் நிறைந்த பயங்கரமான விஷயமா யிருக்குமோ என்று எண்ணி பயப்பட வேண்டியதில்லை. புஸ்தகத்தைக் கையிலெடுக்கும் போதே மிருதுவாகவும் வழ வழப்பாகவும் இருக்கிறது. மேலட்டையில் காணப்படும் டாங்கியும், பீரங்கியும், துப்பாக்கியும் 'தொட்டுப் பாருங்கள்' என்று கொஞ்சி அழைக்கின்றன. உள்ளே புரட்டினாலோ, நமது தளபதிகளும், ஜெனரல்களும், சேனைத் தலைவர்களும் நமக்கு சுமுகமாகப் பேட்டி அளிக்கிறார்கள். சேனா வீரர்களின் பற்பல வர்ணச்சின்னங்களின் படங்களைப் பார்க்கும்போது அவற்றை அணிந்து கொள்வதற்காகவாவது போர்ப் படையில் சேர்ந்து விடலாமா என்று ஆசை அடித்துக் கொள்கிறது. வீரர்களின் சம்பளத்தொகை ஆயிரம் மூவாயிரம் என்று அச்சிட்டிருப்பதைப் பார்க்கும் போது கண்டிப்பாய் போர்ப் படையில் சேர்ந்து விட வேண்டியது தான் என்று துணிந்து விடுகிறோம். ஆனால், ஆனால்—இது என்ன அக்கிரமம்? மூவாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கினாலும் மிச்சம் பிடிக்க முடியாது போலிருக்கிறதே! எங்கேயாவது நாம் பிரயாணம் செய்தால் நம் சொந்தச் செலவிலேயே செய்ய வேண்டுமாம்! அதுவும் நம் அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக முதல் வகுப்பு வண்டிகளிலேயே பிரயாணம் செய்ய வேண்டுமாம்? இப்படி யெல்லாம் நிபந்தனைகள் போட்டிருக்கிறார்கள்.

கடைசியில் இராணுவ சேவை என்பதும் தேச சேவை தான்போலும்!

ஆம்; இந்தப் புத்தகம் முழுவதும் படித்து முடித்ததும் நாம் இராணுவ விவரங்களை அறிந்து கொள்வதோடு இராணுவ சேவைக்கு அடிப்படையான அம்சம் தேசபக்தி என்பதையும் ஐயமறத் தெரிந்து கொள்கிறோம்.

“நம் போர்ப் படைகள்” என்னும் இச் சிறந்த நூலை வெளியிட்டுள்ள ஸ்டார் பிரசுரத்தார் தமிழ் மக்களுக்கு ஓர் ஒப்பற்ற சேவையைச் செய்திருக்கிறார்கள். அன்று ராஜாஜி மண்டபத்தில் மேற்படி புத்தகத்தின் வெளியீட்டு விழா நடந்தது. விழாவுக்கு மேஜர் ஜெனரல் ருத்ரா அவர்கள் தலைமை வகித்தார். கல்வி மந்திரி கனம் மாதவ மேனன் அவர்கள் பேசியபோது * “நம் போர்ப் படைகள்” என்ற புத்தகத்தின் தலைப்பை வெகுவாகப் பாராட்டியதுடன் சுதந்திர இந்தியாவில் நாமும் நம்முடைய போர் வீரர்களும் ஒன்றே என்பதை அறிவுறுத்தினார்.

பின்னர் பேசிய தினமணி ஆசிரியர் ஸ்ரீ. ஏ. என். சிவராமன் அவர்கள் தம்முடைய மேல் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின் போது நம்முடைய போர் வீரர்களில் சிலரைத் தாம் சந்தித்த விவரங்களைக் கூறி 'ஸாப்பர்ஸ்' என்னும் தென்னிந்திய வீரர்களின் திறமையைப் பாராட்டினார். கடைசியாகப் பேசிய தமிழ்வீரர் திரு ம.பொ. சிவஞான கிராமணியார் பழந் தமிழ் மக்களின் வீரத்தை எடுத்துக் கூறியதோடு தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருக்குறளிலிருந்து 'படைமாட்சி'ப் பகுதியும், கம்ப ராமாயண யுத்த காண்டமும் பிற பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டுப் போர் முனைகளில் வழங்கப் பட

* ஆசிரியர்: லெப்டினண்ட் கர்னல் ஏ. என். எஸ். மூர்த்தி, விலை ரூபாய் மூன்று. கிடைக்குமிடம்: ஸ்டார் பிரசுரம், பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

வேண்டு மென்று முரசொலி போன்ற முழக்கம் செய்தார்.

விழாவுக்குத் தமிழறிஞர் ஸ்ரீ எஸ். வையாபுரிப்பிள்ளை, ஸ்ரீ அழகப்பச் செட்டியார் போன்ற பிரமுகர்களும், எழுத்தாளர்கள், பிரசுரகர்த்தர்கள் அடங்கிய பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தனர். வெளியீட்டையும், வெளியீட்டு விழாவையும் பாராட்டி கவர்னர் ஜெனரல் ராஜாஜி, தபால் இலாகா மந்திரி ரபி அகமத் கித்வாய், முதலியவர்களிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

இத்தகைய சிறந்த புத்தகத்தை வெளிக் கொண்டு வந்த ஸ்டார் பிரசுரத்துக்குத் தமிழ் மக்களின் சார்பாக நன்றி செலுத்துகிறோம்.

மதிப்புரை

நேயர்களுக்குத் தோன்றும் இஷ்டமான புஸ்தகங்களை வாங்கிப் படித்து விமரிசனம் எழுதி அனுப்பலாம். பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படும் விமரிசனங்களுக்கு மட்டும் பத்து ரூபாய் பரிசு அளிக்கப்படும்.

வரப்பெற்றோம்

பேசும் குரல்: தமிழ் சினிமா மாதப் பத்திரிகை. ஆசிரியர்: வலம்புரி சோமநாதன். விலை அணா எட்டு. விலாசம்: 289, எஸ்பிளனேட், சென்னை-1.

நினைவு: ஆசிரியர்: நாகர்கோயில் கே. மகாதேவன், விலை ரூ. 2-0-0. கிடைக்குமிடம்: பேசும்படம் காரியாலயம், 180, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை,

தமிழா தூங்காதே: ஆசிரியர்: ஆயன். விலை அணா 0-10-0, கிடைக்குமிடம்: இன்ப நிலையம், 48, பாளையப்பன் தெரு, ஏழுகிணறு, சென்னை.

மூன்றுவது இளவரசன்: சிறுவர் கதைப் புத்தகம். ஆசிரியர்: நாரா. நாச்சியப்பன். விலை அணா இரண்டு. கிடைக்குமிடம்: கலைப் பிரசுரம், தேவகோட்டை.

சாரநாத்: சிறுவர் கதைப் புத்தகம். ஆசிரியர்: அரு. வீரப்பன், விலை அணா இரண்டு. கிடைக்குமிடம்: கலைப் பிரசுரம் தேவகோட்டை.

என் கடன் களிப்பூட்டுதல்: கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் வானொலிப் பேச்சு. விலை அணா ஒன்று. கிடைக்குமிடம்: கலைப் பிரசுரம், ராமநகர், தேவகோட்டை.

தயாராகிறது

குண்டூசி கேலண்டர் 1950

★

ஆறு பிரபல சினிமா நக்ஷத்திரங்களின் அழகிய வர்ணப் படங்கள் - உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் அச்சிடப் பெற்றது. மொத்தம் ஆறு தாள்கள் கொண்டது.

உங்கள் ஊர் 'குண்டூசி' ஏஜண்டுகளிடம் மட்டுமே கிடைக்கும்

சைஸ் 14" × 9"

விலை அணா 8

★

[12 அணா அனுப்புவோருக்கு ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பி வைக்கப்படும். சாதாரண தபாலில் அனுப்பி வைக்கப்படமாட்டாது.]

குண்டூசி காரியாலயம்
25, கிடங்குத் தெரு :: சென்னை-1

THAT *Fulfils* YOUR NEEDS IN PRINTING

முயற்சி வீணாவதைத் தடுக்கலாம்

அழகாக அச்சடிப்பது ஒரு தனிக் கலை. அதற்கு நிண்ட நாள் அநுபவம் அவசியம். நானாவித அச்சு வேலைகளிலும், சிறந்த பிளாக்குகள் தயாரிப்பதிலும் எங்களுக்குள்ள பரந்த அநுபவத்தை உபயோகித்துக்கொண்டு, உங்கள் முயற்சி வீணாவதைத் தடுக்கலாம்.

EFFICIENT MANAGEMENT

EXCELLENT PRINTING

PHONE 4037

COMMERCIAL PRINTING & PUBLISHING HOUSE..
(PRINTERS & BLOCKMAKERS)
46, ARMENIAN ST... MADRAS

Post Box No. 1569.

Telegrams : "PRINTHOUSE"

மகாராஜபுரம்



ஜி. என். பி.

மதுரை மணி



அரியக்குடி



வைஜயந்தி - வாழ்க்கை

வாழ்க்கையில் பல வகை உண்டு. அவற்றில் சினிமா வாழ்க்கையும் ஒன்று. சமயத்தில் ஆரம்பமாகப் போகும் "வாழ்க்கை" என்னும் தமிழ்ப் படத்தில் நம்முடைய சமூக வாழ்க்கை அப்படியே சித்திரிக்கப்பட்டிருக்கிறதாம். வாழ்க்கையில் முக்கிய கதாபாத்திரமாகத் தோன்றி அபாரமாக நடித்திருக்கிறாராம் வைஜயந்தி மாலா என்னும்-இளம் நக்ஷத்திரம். வைஜயந்திமாலா இதுவரையில் நாட்டிய வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார். இப்போதுதான் முதன் முதலாக சினிமா வாழ்க்கையில் புகுந்திருக்கிறார். சினிமாவில் புதிய முகம் வேண்டும் என்று கேட்கும் ரஸிகர்களுக்கும், நாட்டிய விருந்தை எதிர்பார்க்கும் ரஸிகர்களுக்கும் 'வாழ்க்கை' பரிபூர்ண திருப்தி அளிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

கெம்பராஜ் - ராஜவிக்கிரமா

பொங்கல் பண்டிகைக்கும் பூசனிக்காய்க்கும் சம்பந்தம் உண்டல்லவா? பொங்கல் பண்டிகை சமயத்தில் வெளியாகப் போகும் 'ராஜவிக்கிரமா' படத்திலும் பூசனிக்காய்க்கு சம்பந்தம் உண்டாம்! அரசன் ராஜவிக்கிரமன் ஏழை யாசகருக்கு பூசனிக்காயை வெகுமதியாகக் கொடுக்கிறார். பூசனிக்காய்க்குள்ளே இருந்த விலையுயர்ந்த பொருள்களை அறியாத ஏழை யாசகன் அரசனை ஏசுகிறான். ஏழை யாசகனுக்கு ஏழரை நாட்டுச் சனியன் பூசனிக்காய்க்குள் இருந்து வேலை செய்கிறான்! ஸ்ரீ கெம்பராஜ் என்னும் புதிய நட்சத்திர முதலாளி நடிகர் இப்படத்தில் ராஜவிக்கிரமனாகத் தோன்றுகிறார்!

'ராஜவிக்கிரமா' என்றால் என்னவோ ஏதோ என்று திகைக்க வேண்டாம். பழைய விக்கிரமாதித்தன் கதையிலுள்ள ஒரு சுவாரஸ்யமான பகுதியையே டாக்கியாகத் தயாரிக்கிறார்கள். விக்கிரமாதித்த அரசரே ராஜவிக்கிரமாவாக மாறியிருக்கிறார்!



காமினி - ராஜம்மா

ராஜம்மா என்பதிலும் ராஜவிக்கிரமா என்று உச்சரிப்பதிலும் இயற்கையான சப்தப் பொருத்தம் அமைந்திருக்கிறதல்லவா ? இந்த விசேஷ ஒற்றுமையை எண்ணித்தானோ என்னவோ, ராஜவிக்கிரமனைக் காதலிக்கும் பெண்ணாக ஸ்ரீமதி ராஜம்மாவைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். காமினி வேஷத்தில் தோன்றும் ஸ்ரீமதி ராஜம்மா இந்தப் படத்தில் பிரமாதமாக நடித்து அபாரமாக அழுதிருக்கிறாராம், இவ்வளவும் ராஜவிக்கிரமனை மணக்கும் பொருட்டுத்தான். ஆனால் சனி யாரை விட்டான்? காமினியின் காதலுக்கு இடையூறாக சனி பகவான் குறுக்கே வேலை செய்கிறாராம். 'குமாஸ்தாவின் பெண்'ணாகவும், 'வேலைக்காரி'யாகவும் எளிய உடையில் தோன்றி பிரசித்தி பெற்ற நட்சத்திரமாக ஜொலிக்கும் ஸ்ரீமதி ராஜம்மா இந்தப் படத்தில் ஒரு தனவந்தரின் மகளாகத் தோன்றி நகை நட்டுகளுடன் ஜொலிப்பாராம்!



சஹஸ்ரநாமம் - திரௌபதி

சஹஸ்ரநாமம் ஒரு படத்தில் தோன்றுகிறார் என்றால் அந்தப் படம் அமர்க்களமாய்த்தான் இருக்கும். கண்களை உருட்டிக் கொண்டோ, தலைமயிரை பிய்த்துக் கொண்டோதான் தோன்றுவார். ஸ்ரீ ஏவி. எம். அவர்கள் தயாரித்துள்ள வாழ்க்கை படத்திலும் இத்தகைய உணர்ச்சிகளை வெளிக்காட்ட வேண்டிய சந்தர்ப்பங்கள் அவருக்கு இருக்குமென்று தோன்றுகிறது. கையில் குழந்தையுடன் பரிதாபக் கோலத்தில் காட்சி தருபவர்தான் ஸ்ரீமதி திரௌபதி. கணவன்—மனைவி—குழந்தை என்றாலே உண்மையான வாழ்க்கை ஆரம்பமாகி விடுகிறதல்லவா? எனவே, வாழ்க்கையில் இந்தக் காட்சி ஒரு முக்கிய கட்டமாயிருக்குமென்பதில் என்ன சந்தேகம்?

மின்னல் கொடியாள்

மூலம்: கவி ரவீந்திரநாத் டாகூர்

மொழிபெயர்ப்பு: “பார்த்தன்”

மூரடனிடமிருந்து நான் பிடுங்கி வந்த டயரியையும் கைப் பையையும் வாங்கிக் கொண்ட அசிரா ‘அதிர்ஷ்ட வசமாகத் தாங்கள்?’...என்று இழுத்தாள்.

“என் விஷயமிருக்கட்டும்; ஒரு விதத்தில் அவன் தங்களிடமிருந்து அபகரித்துக் கொண்டு போனதும் நல்லதாகவே போயிற்று...” என்றேன்.

“அப்படி என்றால்?......”

“அவன் செய்த சகாயத்தால் அல்லவா தங்களோடு எனக்குப் பேசும் சந்தர்ப்பம் கிட்டியது? இத்தனை நாட்களாக எனக்குப் பேசச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லையே!......”

“இல்லை; அவன் திருடனில்லை; அவன் என் வேலைக்காரன்!”

அசிரா புடவைத் தலைப்பால் தன் முத்து வரிசைப் பற்களை மறைத்துக் கொண்டு ‘கல கல’ வென நகைத்தாள். ஆஹா! அந்தச் சிரிப்பு எவ்வளவு மதுரமாயிருந்தது!

“இந்தச் சம்பவம் நிஜமானதாகவேயிருந்தால் இன்னும் தமாஷாயிருக்குமல்லவா!...” என்றாள்.

“யாருக்குத் தமாஷ்?...”

“யாரிடம் திருடன் வந்தானோ அவளுக்குத்தான்! இம்மாதிரி சம்பவத்தை நான் எதோ ஒரு கதையில் கூடப் படித்திருக்கிறேன்.”

“அப்படியா? அந்தக் கதையில், திருடனைப் பிடித்துக் கொடுத்தவனுக்கு என்ன வெகுமதி கிடைக்கிறது?”

“கதா நாயகி அவனை வீட்டுக்கு அழைத்துப் போய் தேநீர் உபசாரம் செய்கிறாள்!...”

“இந்தப் பொய்த் திருடனைப் பிடித்துக் கெடுத்தவனுக்கு ஒன்றும் கிடைக்காதா?......”

“அவருக்குத் தான் வேறு எதுவும் தேவையில்லையே!...... ஒரே ஒரு வார்த்தை பேசினால் போதும் என்று தானே வந்தார்? ஒன்று, இரண்டு, மூன்று எத்தனையோ வார்த்தைகளுக்கு மேல் அவருக்குக் கிடைத்து விட்டனவே!...”

"இந்த எண்ணிக்கை இத்துடனேயே முடிந்துவிடுமா என்ன?"

"ஏன் முடிந்து போகும்?"

"பேஷ்! நல்லது; தாங்களாகவே முதன் முதலாக என்னோடு பேசுவதாயிருந்தால் என்ன பேசியிருப்பீர்கள்?"

"வழியோடு ஒழுங்காகப் போகாமல் இங்கு மங்கும் குனிந்து மண்ணாங்கட்டியையும் கூழாங் கல்லையும் பொறுக்குகிறீர்களே!........ இன்னும் சிறு பிள்ளைத்தனம் விடவில்லையா என்று கேட்டிருப்பேன்!"

"அப்படியானால் இதுவரை அப்படி ஏன் கேட்கவில்லை?"

"என்னப்பா! B. M. கருப்பையாப் பிள்ளை இருக்காரா வீட்டிலே?"

"உஸ்ஸ்.........பி. எம்னு சொல்லாதீங்க. எஜமான் கோவிச்சுக்குவார்".

"எனக்குப் பயமாயிருந்தது!"

"பயமா? என்னிடமா?"......

"தாத்தா சொல்லியிருக்கிறார்; தாங்கள் பெரிய அறிஞராம். சீமையிலிருந்து வரும் ஏதோ ஒரு பத்திரிகையில் வெளியாகியிருந்த தங்கள் கட்டுரை ஒன்றைக் கூடப் படித்துக் காட்டினார்."

"அப்படிச் சொல்லுங்கள்; என் கட்டுரையையும் படிக்கக் கேட்டிருக்கிறீர்களா!"

"ஆமாம்! என்ன செய்வது? அதையும் தான் கேட்க நேர்ந்தது!"

"அப்படியானால் அது உங்களுக்கு நன்றாகப் புரியும் என்று சொல்லுங்கள்!"

"அப்படி ஒன்றுமில்லை; தாத்தா எதையும் புரிந்து கொண்டு விடுவார். ஆண்களை விடப் பெண்கள் பகுத்தறிவுள்ளவர்கள் என்பது தாத்தாவின் முடிவு. இதன் காரணமாக நான் படும் அவதி கொஞ்ச நஞ்சமல்ல.

"என் தாத்தா பெண்களிடம் காட்டும் கருணைக்கு எல்லையே இல்லை. பாட்டி உயிரோடிருக்கும்போது பெரிய பெரிய தத்வங்களைப் பற்றித் தாத்தா பேச ஆரம்பித்தால் உடனே அவள் அவர் வாயை மூடி விடுவாள். அதனால் தான் பெண்களின் புத்தி கூர்மைமையைப் பற்றி அவர் பாட்டியிடம் பிரத்யட்சமாக எதுவும் அறிய முடியவில்லை. அவரை நான் நிராசையடையச் செய்ய மாட்டேன். அவர் எதைப் பற்றிப் பிரசங்கம் செய்தாலும் 'தலை எழுத்தே' என்று அவர் மனச் சாந்திக்காகக் கேட்டுக் கொண்டிருப்பேன். அவரிடம் எத்தனையோ விஷயங்களைக் கேட்டி

ருக்கிறேன். ஆனால் ஒன்றும் புரிந்து கொள்ளவில்லை. இனியும் எவ்வளவோ கேட்கப் போகிறேன். ஒன்றும் புரிந்து கொள்ளவும் முடியாது !''

ஆறும் அத்தியாயம்

பாட்டனும் பேத்தியும்

அசிராவின் கண்களில் கள்ளங் கபடமற்ற பேதைப் பெண்ணின் குறு குறுப்பையும், உலக மனத்தையும் அடிமைகொள்ளும் அழகையும், உள்ளத்தைப் பிரதிபலிக்கும் உற்சாகத்தையும் கண்டேன். இவ் வழகியின் இனிய குரல் மூலம் வெளி வரும் கதைகளும் குட்டிக் கதைகளும் இப்படியே நீண்டு கொண்டே போகாதா என்று கூட எனக்கொரு அர்த்தமற்ற ஆசை தோன்றியது.

ஆதவன் மேற் கடலில் குதித்த வேகத்தில் மேலெழுந்த நீர்த் திவிலை போல் தேக்கு மரத்தின் உச்சாணியில் ஒரு நட்சத்திரம் மின்னிற்று. கிராமப் பெண்கள் விறகுக் கட்டுகளுடன் வீடுநோக்கிச் சென்றார்கள். ஆரத்தியிலிருந்து அவர்கள் பாடுவது காற்றலையில் மிதந்து வந்தது.

இந்தச் சமயத்தில் அசிராவுக்கு அழைப்பு வந்து விட்டது. "குழந்தாய்! நீ எங்கேயம்மா இருக்கிறாய்? இருட்டி விட்டதே...காலம் கெட்டுக் கிடக்கிறது'' என்றது ஒரு குரல். "ஆமாம் தாத்தா! காலம் ரொம்ப ரொம்பக் கெட்டுப் போச்சு! அதற்காகத்தான் நான் ஒரு ரட்சகரைத் தேடிப் பிடித்திருக்கிறேன்;'' இதோ பாருங்கள்.

ஆசிரியர் கண்ணில் பட்டதுமே நான் விரைந்து சென்று வணங்கினேன். அவர் சிறிது திடுக்கிட்டார். "என்னை நவீன மாதவ ஸேன குப்தன் என்பார்கள்'' என்று நானே ஆசிரியரிடம் அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

கிழவரின் முகம் மலர்ந்தது. "என்ன! தாங்கள்தானா டாக்டர் ஸேன குப்தர் என்பது? தாங்கள் ரொம்பச் சின்னப் பிள்ளையாயிற்றே!''

"ஆமாம்! பச்சைக் குழந்தைதான்; இப்போது தானே முப்பத்தேழு வயது நிறைகிறது!''

மறுபடியும் அசிராவின் நகையொலியைக் கேட்டேன். வெண் முத்துப் போன்ற பல் வரிசையையும் கண்டேன். இந்தத் தடவை அந்த மதுரத்வனி என் இதயத்தில் சித்தார் தந்தியை மீட்டினாற் போல் இன்ப நாதத்தைக் கிளப்பிற்று.

அசிரா சொன்னாள்: "எங்கள் தாத்தாவுக்கு இந்த உலகத்திலுள்ள அத்தனை பேரும் பச்சைக் குழந்தைகள் தான். இவர் நான் எல்லோருக்குமே அகர் வாலா!'' ஆசிரியக் கிழவர் என்னை நோக்கிச் சொன்னார்: "டாக்டர் ஸேன குப்த்! தங்களோடு பழக்கமேற்பட்டு விட்டது! இனி தாங்கள் எங்கள் வீட்டுக்கு வரத் தடை ஒன்று மில்லையே!''

அந்தக் குறும்புக்காரி குறுக்கிட்டாள்: "தாத்தா! நீ ஒன்றும் அவரைவெற்றிலை பாக்கு வைத்து அழைக்க வேண்டாம். அவரே வரத் தயாராகத்தான் காத்திருக்கிறார். நீ தேச கால தத்துவம் பற்றிப் பிரசங்கம் செய்வாய் என்று இவருக்கு நான் ஏற்கெனவே சொல்லி வைத்திருக்கிறேன்.''


ஐஸ் கிரீம்
ஐஸ் கிரீம்
ரஸாத்

'வந்தது அனர்த்தம்! எப்பேர்ப்பட்ட குறும்பு செய்துவிட்டாள் இந்தப் பெண்!' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டேன்.

ஆசிரியர் ஒரேயடியாக உற்சாகத்தில் மூழ்கி "ஒரு வேளை உங்களுக்கு Time - Space விஷயமாக......" என்றார்.

"எனக்கு தேச கால தத்துவமும் தெரியாது; ஒரு மண்ணும் தெரியாது. மேலும் எனக்குப் புரிய வைக்க முயற்சிப்பதால் தங்கள் பொழுது தான் வீணாகும்!"

கிழவர் "அதனால் என்ன! நல்லது; இன்று ஒரு காரியம் செய்யுங்கள். இன்று எங்கள் வீட்டிலேயே சாப்பிடுங்கள்."

நான் சந்தோஷத்துடன் "இப்போதே புறப்படலாமே!" என்று சொல்ல வாயெடுத்தேன். ஆனால் அசிரா அதற்குள் "தெரியாமலா உன்னை நான் குழந்தைகளோடு சேர்த்துப் பேசுகிறேன்! உனக்குத் தோன்றிய போதெல்லாம் விருந்தாளியை அழைத்து என்னை என் இப்படித் திண்டாட வைக்கிறாய்? இந்த தண்டகாரண்ய வனத்தில் எனக்கு நல்ல சீமைக் காய் கறிக்கு எங்கே போவது? இந்த விருந்தாளி என்னசாமான்யமானவரா? சீமையில் நடக்கும் டின்னர் பார்ட்டிகளில் "ஸர்வம் பக்ஷயாமி" கோஷ்டியைச் சேர்ந்தவரல்லவா?" என்று ஒரு பெரிய போடு போட்டாள்.

"சரி; அப்படியானால் தங்களுக்கு எப்போது சௌகரியப்படும்?" என்று கிழவர் கேட்டார்.

"நாளைக்கே வேண்டுமானாலும் வரத் தயார்!" ஆனால் அசிரா தேவியை மறுபடியும் தர்ம சங்கடத்தில் சிக்க வைக்க நான் விரும்பவில்லை! நான் எங்கெங்கேயோ பயங்கரக் காடுகளிலும் இருண்ட குகைகளுக்குள்ளும் அலைந்து திரிய வேண்டியிருக்கிறது. கூடவே கைப்பையில் அவல், வாழைப் பழம், சீமைக் கத்தரிக்காய், நிலக்கடலை இப்படி ஏதாவது கொண்டு போகிறேன். நான் வரும்போது எனக்கு வேண்டியவற்றைக் கொண்டு வந்து விடுகிறேன். அதைப் பக்குவப் படுத்திப் பரிமாறும் சிரமத்தை மட்டும் அசிரா தேவி ஏற்றுக் கொண்டால் போதும். இதில் அவருக்குத் தடையொன்றுமில்லையே?"

"தாத்தா! இவர் சொல்லுவதை நீ அப்படியே நம்பி விடாதே! நீ வங்காளப் பத்திரிகையில் "உணவும் வைடமினும்" என்றொரு கட்டுரை எழுதவில்லையா? அதை இவர் படித்திருக்கிறார். உன்னைத் திருப்தி செய்விக்க வேண்டுமென்றே 'அவல், வாழைப்பழம்' என்று ஆரம்பித்து நீண்டதொரு ஜாபிதாவை ஒப்புவிக்கிறார்!"

"இதேதடா! இவள் இப்படி நம்மைத் திணற அடிக்கிறாளே!" என்று நான் சிந்தையிலாழ்ந்தேன். அந்த வங்காளப் பத்திரிகையை நான் படிக்கவேயில்லை. படித்திருந்தாலும் ஒரு நாளும் அந்த மாதிரிக் கட்டுரையுள்ள பக்கத்தைக் கவனித்துக் கூடப் பார்த்ததில்லை. ஆனால் இதை நான் எப்படி வெளியிடுவது? அதுவும் அவர் "சபாஷ்! நீங்கள் அதைப் படித்திருக்கிறீர்களா? பலே!" என்று கூறும்போது?

இப்படி நாங்கள் பேசிக் கொண்டே மெள்ள மெள்ள அவர்கள் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தோம். அப்போது எதிர்பாராத விதமாக அசிரா "ஏன்? நீங்கள் உங்கள் டோராவுக்குப் போக நாழியாக வில்லை?" என்று ஒரு கேள்வி கேட்டாள்.

ஏழாம் அத்தியாயம்

முதல் நாள் பேட்டி

அசிராவின் கேள்வி என் முகத்தில் அசட்டுக் களையை வர வழைத்திருக்கும். ஆனாலும் நான் சமாளித்தபடி "அதனாலென்ன! உங்களிருவரையும் வீட்டு வாசல் வரையில் கொண்டுவிட்டுச் செல்கிறேன்" என்றேன்.

"வீட்டில், எல்லாம் கண்டது கண்டபடி விழுந்திருக்கும். அப்புறம் தாங்கள் வங்காளிப் பெண்ணுக்கு வீட்டை ஒழுங்காக வைத்துக் கொள்ளத் தெரிய வில்லை என்று பரிகாசம் செய்வீர்கள்! நாளைக்கு வந்து பாருங்கள். எப்படி அழகாகச் சிங்காரித்து வைக்கிறேன்! பார்த்ததும் தங்கள் தர்ம பத்னியின் நினைவு வரவேண்டாமா?" என்றாள் அசிரா.

கிழவர் குறுக்கிட்டார். "டாக்டர் ஸார்! தாங்கள் எதும் விபரீதமாக எண்ணி விட வேண்டாம். அசிரா இன்று கொஞ்சம் அதிகப் பிரசங்கம் செய்கிறாள். உண்மையில் அவள் சுபாவம் இதுவல்ல; இங்கு மனித சஞ்சாரமே இல்லை அல்லவா? அதனால் அவள் எடுத்ததற்கெல்லாம் வம்பு வளர்த்து எனக்கு நல்ல பொழுது போக்காக இருந்து வருகிறாள். இப்படியே வழக்கமாகி விட்டது. அவள் வாய் மூடி மௌனியாயிருந்தால் என் மனம் 'திக் திக்'கென்று அடித்துக் கொள்ளுகிறது! ஏதாவது சிந்தை பிடுங்கித் தின்கிறது. அது இவளுக்குத் தெரியும். அதனால்தான் இப்படி மூச்சு விடாமல் பேசுகிறாள்! தாங்கள் இவளைத் தவறாக எண்ணி விடாதீர்கள்" என்று எச்சரித்தார்.

கிழவரின் கழுத்தில் கைகளை வளைத்துப் போட்டு என்னைக் குறும்பாகப் பார்த்தபடியே அசிரா சொன்னாள்: "அவர் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும், தாத்தா! என்னை யாரும் இகழவே கூடாதென்று நான் நினைக்கவில்லை!"

கிழவர் பெருமையுடன் சொன்னார்: "டாக்டர் ஸார்! என்பேத்தி எவ்வளவு சமர்த்தாகப் பேசுகிறாள் பாருங்கள்! இந்த மாதிரிப் பெண்ணை நான் எங்குமே பார்த்ததில்லை!"

"உன்னைப் போன்ற தாத்தாவை மட்டும் நான் பார்த்திருக்கிறேனோ?"

"குருதேவா! விடை பெறுமுன் ஒரு சிறிய வேண்டுகோள்" என்று நான் அவர்கள் சம்பாஷணைக்கு ஒரு முத்தாய்ப்பு வைத்தேன்.

"என்ன விஷயம்?"

"தாங்கள் என்னை "நீங்கள்" என்று சொல்லும்போதெல்லாம் என் மனதை என்னவோ செய்கிறது. தயவுசெய்து தாங்கள் இனி என்னை "நீ" என்று அழைத்தால் அந்த அழைப்பில் அன்பின் ஆழத்தை உணர்ந்து மகிழ்வேன். இந்த வீட்டில் என்னை 'நீ' என்று அழைக்கும் விஷயத்தில் தங்கள் பேத்தி கூட உதவி செய்ய வேண்டும்."

"அம்மாடி! என்னால் முடியாது! நான் ஒரு சாதாரணமான பெண். ஒரேயடியாக நான் என் அந்தஸ்தை அவ்வளவு தூரம் உயர்த்திக் கொள்ள மாட்டேன். தாங்கள் பெரிய மனுஷ்யர்; கொஞ்ச நாள் பொறுங்கள். உங்கள் பட்டதாரி வேஷத்தை என்னால் மறக்க முடிகிறதா பார்க்கிறேன்! முடிந்தால் பின்பு எல்லாம் சகஜமாய்ப் போய் விடும். ஆனால் தாத்தா விஷயம் தனி. அவர் இப்போதே வேண்டுமானாலும் அப்படி அழைக்கலாம். இல்லையா தாத்தா? எங்கே சொல் பார்க்கலாம்!—'நாளைக்கு நீ விருந்துக்கு வந்து சேரு; என் பேத்தி ஞாபக மறதியாகவோ வேண்டுமென்றோ மீன் குழம்பில் உப்பைக் கொஞ்சம் அதிகமாகப் போட்டு விட்டால் தயவு செய்து மன்னித்து விடு. அது மட்டுமல்ல; 'பேஷ்! குழம்பு ரொம்பப் பிரமாதம்' என்றும் சொல்லு!"

ஆசிரியக் கிழவர் அன்போடு என் தோளில் கை வைத்தபடி சொன்னார்: "அப்பா! நீ கொஞ்ச காலம் முன்பே என் பேத்தியைப் பார்க்க முடியாமல் போய் விட்டதே! உண்மையில் அவள் எவ்வளவு நாணுகிற பெண் தெரியுமா? பாவம்! இன்று அவள் பேசுவது தன் கடமை என்று எண்ணியே பேசுகிறாள். பலவந்தமாகப் பேசுவதால் பேச்சு அதிகமாகி விடுகிறது."

"பார்த்தீர்களா, டாக்டர் ஸார்! தாத்தா என்னை நாசூக்காகப் பழித்துக் காட்டுகிறார். அவர் வெளிப்படையாகவே உன் அதிகப் பிரசங்கித் தனத்தை இனிச் சகிக்க முடியாது" என்று சொல்லி யிருக்கலாம். ஆகையால் தாங்கள் தான் எனக்காகப் பரிந்து பேச வேண்டும்."

"தங்கள் எதிரில் பரிந்து பேச மாட்டேன்."

"பேசினால் விஷயம் ரொம்ப 'ஸீரிய'ஸாகப் போய் விடுமா?"

"என் மனோ நிலை தங்களுக்குத் தெரியாதா!"

"அப்படியானால் சரி! தாங்கள் தங்களுடைய கூடாரத்துக்குப் போங்கள்."

"ஒரு விஷயம் மறந்து விட்டதே! நாளை உங்கள் வீட்டில் எனக்கு எதற்காக விருந்து தெரியுமல்லவா?"

"தெரியாதே!"



"என்னங்க, உங்கள் கடை நொடிச்சிப் போயிட்டுதாமே! ஏன்? பாக்கிப் பணத்தையெல்லாம் பயில்வான் போட்டு வசூல் செஞ்சிங்களே, எப்படி நொடிச்சுது...?"

"அதை ஏன் கேக்கறீங்க போங்க... அந்தப் பணத்தை பயில்வான் கிட்டேயிருந்து வசூல் பண்ண முடியாமல் போயிடுச்சுங்க!"

"எனக்குப் புதிதாக ஒரு நாம காரணம் செய்வதற்காகத்தான்: நாளை முதல் "நவீன் மாதவன்" என்ற பெயரோடு ஒட்டிக்கொண்டிருக்கும் 'டாக்டர் ஸேனகுப்தா' என்ற வால்போய்விடும்."

"அப்படியா சேதி? நாமகரணம் என்கிறீர்களே! நாம கர்த்தனம் (கத்தரிப்பு) என்றல்லவா சொல்ல வேண்டும்?"

"சரி! அப்படியே தான் வைத்துக் கொள்ளுங்களேன்!"

இத்தோடு மகத்தான முதல் நாள் பேட்டி முடிவடைந்தது.

* * *

முதுமையில் எவ்வளவு அமைதியான அழகு! எவ்வளவு சாந்த சொரூபம்? கிழவரின் இரு கண்களும் அருள் வடிவமாக ஆசீர்வாதம்செய்பவை போலிருக்கின்றன! கையில் 'பாலிஷ்' செய்யப் பட்டதொரு தடி. கழுத்து வரை போர்த்தி யிருக்கும் துப்பட்டி. பொறுக்கியெடுத்த நல்ல மில் வேஷ்டி! 'தொள தொள' வென்றிருக்கும் பட்டுச் சட்டை. வெளுத்த தலைமயிர். ஆனல் அதையும் சிரமப் பட்டுச் சிங்காரித்திருக்கிறுர்கள். இந்த உடுப்பையும் வேஷத்தையும் பார்த்தால் பகலில் இவருக்கு அலங்காரம் செய்வதை விட பேத்திக்கு வேறு எந்த வேலையும் இல்லை என்று தெரிந்தது. இப்படி அவள் அதிகமாகக் கொஞ்சிச் சீராட்டுவதை அவர் அவளுடைய சந்துஷ்டிக்காகவே சகித்துக் கொண்டிருக்கிறுர் போலும்!

நான என் விஞ்ஞான ஆராய்ச்சியை ஒரு புறம் ஒதுக்கி விட்டு இவர்களைப் பற்றிய ஆராய்ச்சியிலேயே இறங்கினேன்.

அந்தக் கிழ ஆசிரியரின் பெயர் அகில்குமார் சர்க்கார். கேம்பிரிட்ஜ் யுனிவர்ஸிடி பி. எச். டி. பட்டதாரிகளுள் இவரும் ஒருவர். சில மாதங்களுக்கு முன்னுல் காலேஜ் பிரின்ஸிபால் பதவியை ராஜிஞமாச் செய்து விட்டு இந்தச் சமஸ்தானத்தைச் சேர்ந்ததொரு பாழடைந்த பங்களா வைத் தம் சொந்தச் செலவில் செப்பனிட்டு அதிலேயே குடியிருந்து வருகிறுர். இவரைப் பற்றிய சரித்திரக் குறிப்பு இவ்வளவேதான். மற்றவைகளை என் நண்பன் வங்கிம் எழுதிய கடிதத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

* * *

அசிராவோடு மனம் விட்டுப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. அன்று தனிகா நதிக் கரை யோரத்தில் எங்கள் வன போஜனம் நடை பெற்றது. கிழவரும் வந்திருந்தார். குழந்தைகள் கேட்பது போல் அவர் திடீரென்று "நவீன்! உனக்குக் கல்யாணமாகி விட்டதா?" என்று கேட்டு விட்டார்.

கேள்வி அர்த்தபுஷ்டியுள்ளதாக இருந்தது. இன்னெருவராயிருந்தால் அதை மனதை விட்டு வெளியே விடவே மாட்டார்.

"இல்லை! இதுவரை ஆகவில்லை!" என்றேன். அசிராவுக்கு எந்த விஷயமும் விலக்கல்ல. "தாத்தா! அவர் 'இதுவரை' என்று சொன்னதைக் கவனித்தாயா? இவர் முப்பத்தேழு வயதுக் குழந்தை என்பது இவர் வாக்கு

ஏய்,எய், இதென்னப்பா இது. நடு ரோட்டிலே சண்டை! நில்லு, நில்லு......
ஓய், கான்ஸ்டபிள்! இது சினிமாச் சண்டை ஓய்! ஷூட்டிங் முடியற சமயத்திலே வந்து கெடுத்துட்டீரே..!
?!?!

மகாகவி பாரதியார்

★

அமரகவி சுப்பிரமணிய பாரதியாரின் அழகிய இரு வர்ணப் படம். தமிழர்களின் இல்லத்தை அலங்கரிக்க வேண்டிய அவசியமான படம்.

★

தனிப் படம் விலை அணு	0-3-0
தபால் செலவு	0-2-0

ஏஜெண்டுகளுக்கு 25% கமிஷன் உண்டு.

வாடாமலர்

மாம்பலம் சென்னை - 17

மூலமாகவே வெளிப்பட்ட விஷயம். கணக்குப் போட்டுப் பார்த்ததில் இதற்குள் சுமார் ஏழெட்டுத் தடவையாவது இவருடைய தாயார் 'அப்பா, பிள்ளையாண்டானே! நம் வீட்டுக்கொரு நாட்டுப் பெண் வேண்டாமா?' என்று கேட்டிருக்க வேண்டும்.

இவர் என்ன பதில் சொல்லியிருப்பார் தெரியுமா? 'அம்மா! நாட்டுப் பெண் வேண்டுமென்று அவசரப் படுகிறாயே! அதற்கு முன் இரும்புப் பெட்டி நிறையப் பணம் இருக்க வேண்டாமா?' என்று கேட்டிருப்பார்!

அம்மா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மௌனமாயிருந்திருப்பாள்.

இதற்குப் பிறகு இவர் தேசிய இயக்கப் புரட்சி வாழ்வில் நடக்க வேண்டியதெல்லாம் நடந்து விட்டது. தூக்கு மேடை ஏறவேண்டிய தொன்றுதான் பாக்கி.

கடைசியில் இங்கே சமஸ்தானதிபதியிடம் நல்ல சம்பளத்தில் வேலை கிடைத்ததும் அம்மா பழைய பல்லவியைப் பாடியிருப்பாள். இவர் என்ன பதில் சொல்லியிருக்கப் போகிறார்?

'அம்மா! நானும் என் விஞ்ஞானமும் தேச நலனுக்காகப் பிழைத்திருக்க வேண்டும். அதனால் நான் விவாகமே செய்து கொள்ள மாட்டேன். தாய் நாட்டுக்காக நான் மண வாழ்வைத் தியாகம் செய்கிறேன்!' என்று கூறியிருப்பார்!

தன் ஆசையில் மண் விழுந்த தாயார் கண்ணைத் துடைத்துக் கொண்டு மௌனியாயிருப்பாள். இவருடைய முப்பத்

தேழு வருஷ வாழ்க்கையைக் கணக்கிட்டு இப்படியெல்லாம் நடந்திருக்குமென்று ஊகிக்கிறேன்'' என்றாள்.

இந்தக் குறும்புக்காரியினிடம் அவசரப்பட்டு எதையுமே சொல்லி விடக்கூடாது. சொன்னால் அனர்த்தம் தான்! கொஞ்ச நாள் முன்பு நிகழ்ந்த சம்பவம். பேச்சு வாக்கில் அவள் சொன்னாள்: ''இந்த நாட்டில் நீங்களெல்லாம் பெண்களை வெறும் மனைவிகளாக மட்டுமே அடைகிறீர்கள்! ஆனால் சீமையில் விஞ்ஞானக் கலையை உபாசிக்கிறவர்கள் தங்களுக்கு உபயோகமுள்ள 'லேடி'களையே அடைகிறார்கள். உதாரணமாக ஆசிரியர் வேலை பார்க்கும் ஒருவருக்கு அதே வேலை பார்க்கும் 'மேடம்' கிடைப்பாள். ஆமாம், நவீன் பாபு! தாங்கள் சீமையில் போய் அவ்வளவு காலம் இருந்தீர்களே! அங்கே தங்களுக்கு உபயோகமுள்ள பெண் யாருமே கிடைக்க வில்லையா?''

எனக்கு 'கேதரின்' என்பவளின் நினைவு உடனே வந்தது. லண்டனிலிருக்கும்போது என்னோடு அவள் விஞ்ஞானப் பயிற்சியில் ஈடுபட்டாள். அது மட்டுமல்ல. என் ஆராய்ச்சிப் புத்தகமொன்றில் என் பெயருடன் அவள் பெயரும் இணைந்திருக்கிறது. எனவே, நான் அசிராவிடம் உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று.

''அப்படியானால் தாங்கள் அவளை ஏன் கல்யாணம் செய்து கொள்ள வில்லை? அவள் சம்மதிக்க வில்லையா?'' என்று கேட்டாள் அசிரா.

மறுபடியும் நான் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது.

''இல்லை, இல்லை; முதலில் கல்யாணப் பேச்சை எடுத்தவளே அந்தப் பெண்மணி தான்!''

''அப்புறம்?''

''எனக்கு இந்தியாவில் வேலை. கல்யாணமென்றால் விஞ்ஞான ஆராய்ச்சியா என்ன? இஷ்டப்பட்ட இடத்திலெல்லாம் செய்யவோ—விடவோ!''

''அப்படியானால் காதலை நிறைவேற்றுவது தங்கள் போன்ற இலட்சியவாதிகளின் குறிக்கோள் இல்லை போலும். பெண்களின் வாழ்க்கை லட்சியம் மட்டும் ஏதாவதொரு ஆசாமியைச்சேர்ந்திருப்பது. உங்கள் லட்சியம் எந்த நபரையுமே சேராமல் பரவிப் பொதுப் படையாகவே இருப்பதாக்கும்!''

இந்தக் கேள்விக்குச் சட்டென்று என்னால் பதில் சொல்ல முடியவில்லை. நான் பதில் பேசாமலிருப்பதைப் பார்த்ததும் அசிரா துணிந்து தொடர்ந்து பேசினாள்.

''வங்காள இலக்கியத்தைத் தாங்கள் ஒருவேளை படிக்கிறதே இல்லையோ என்னவோ? 'கச்சனும் தேவயானியும்' என்றொரு கவிதை இருக்கிறது. அதில் இதே பிரச்னை விசாரணைக்கு வருகிறது. பெண்களின் விரதம் புருஷர்களைக் கட்டுப் படுத்துவது. புருஷர்களின் விரதமோ அந்தக் கட்டுத் தளையிலிருந்து விடுபட்டுப் பரலோகத்துக்கு வழி தேடுவது. கச்சன் கூட இப்படித் தான் தேவயானியின் வேண்டுகோளை நிராகரித்து வெளியேறினான்.'' தொடரும்.

எண் அலங்காரம்

சுந்தா

"எலி வாலின் சராசரி நீளம் ஐந்தேகால் அங்குலம். சர்வதேச வால் ஆராய்ச்சிக் கழகம் முப்பது தேசங்களில் மூன்று வருஷ காலமாய், ஆயிரக்கணக்கான எலி வால்களை அளந்து பார்த்து விட்டு, இந்த விவரத்தை அறிவித்திருக்கிறது."

இப்படி ஒரு செய்தி வெளியானால், அதுபற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால், இம்மாதிரியான கணக்கு விவரங்களைப் பத்திரிகைகள் வெளியிடுவது சகஜமாகி விட்டது. யானையின் சராசரி நிறை என்ன, ஒட்டைச் சிவங்கியின் சராசரி உயரம் என்ன, எருமைக்கடாவின் சராசரிப் பருமன் என்ன என்பதையெல்லாம் செய்திப் பத்திரிகைகள், பெரிய பெரிய அரசியல் நிகழ்ச்சிகளுக்கும் சர்வதேச விளைவுகளுக்கும் மத்தியில் கட்டம் கட்டிப் பிரசுரிக்கின்றன.

கொஞ்ச நாளைக்கு முன்னால், ஒரு பத்திரிகையில், கணிதப்படம் ஒன்று வெளியாகி இருந்தது.



சராசரி மனிதன் ஒருவனுடைய உடலில் காணும் பொருள்களிலிருந்து, எத்தனை எத்தனை தீக்குச்சிகள், மெழுகுவர்த்திகள், சோப்புகள், பித்தான்கள், ஆணிகள் முதலியவற்றைச் செய்யலாம் என்பது அதில் சித்திரிக்கப் பட்டிருந்தது.

சில கணக்கு விவரங்களை, தினசரி அம்சமாகவே பத்திரிகைகள் வெளியிடுகின்றன எந்த ஊரில் எத்தனை டிகிரி வெய்யில் அடித்தது, எந்த ஊரில் எத்தனை அங்குலம் மழை பெய்தது, எந்தப் பிரதேசத்தில் எத்தனை மைல் வேகத்தில் புயல் வீசிற்று, எந்த ஊரிலிருந்து எத்தனை ஆயிரம் மைல்களுக்கு அப்பால் எத்தரமான வேகத்தில் பூமி அதிர்ந்தது என்பன வெல்லாம் வானிலைப் பத்தியில் காண்கின்றன.

வர்த்தகப் பத்தியில், தோலாக் கணக்கில் தங்கமும், வெள்ளியும், அந்தர்க் கணக்கில் இரும்பும் பித்தளையும், பொதிக் கணக்கில் பருத்தியும் நூலும், மணங்குக் கணக்கில் தானிய வகையருக்களும் குவிந்து கிடக்கின்றன. மார்க்கெட் நிலவரங்களை எடுத்துச் சொல்வதற்கென்று வேடிக்கையானதொரு பரிபாஷை வளர்ந்து வந்திருக்கிறது. ஒரு துறைமுகத்தில் 'காளைகள்' ஓடிக் கொண்

டிருக்க, இன்னொரு துறைமுகத்தில் 'கரடிகள்' குட்டிக்கரணம் போடுகின்றன. வட்டகைக்குள் புகையிலைப் பொதிகள், பத்து சத விகித விலைக் குறைவுடன் புகுந்ததும், கிட்டங்கிகளில் கொட்டைப் பாக்கு எட்டிப் பார்க்கிறது. 'அலைமோதியா' கப்பல் பங்குகள் நாற்பதிலிருந்து ஒரேயடியாக முப்பத்தைந்துக்கு இறங்கியதால், இரும்பு துருவேறியும், சாயம் வெளுத்தும், வெல்லம் கரைந்தும் போகின்றன. ஏறி நின்ற ஏலக்காய் பத்துப் புள்ளி கீழே இறங்கியதைக் கண்டு ஜாதிக்காய் மயங்கியும், கிராம்பு கிரங்கியும் விழுகின்றன.

* * *

சாதாரணச் செய்திகளிலும் கூட இலக்க பாஷை அடிபடுகிறது. உதாரணமாக இதைப் பாருங்கள்: "ஆயிரங்கல்லூர் நூற்றாண்டு மண்டபத்தில், பத்தாயிரம் ஜனங்கள் கொண்ட பெருங் கூட்டம் ஒன்றில், திருவாளர் கண்ணாயிரம், இரண்டரை மணி நேரம் சொற்பொழிவு ஆற்றுகையில், மக்களின் வாழ்க்கைத்தரம் நூறு சத விகிதமாய் உயர வேண்டும் என்றும், அவ்வாறு உயருவதற்கு, ஜனத்தொகை ஐம்பது சத விகிதம் குறையவும் பொருள் உற்பத்தி ஐம்பது சத விகிதம் பெருகவும் வேண்டும் என்றும், ஜனத்தொகை குறைவது என்பது மரண விகிதம் அதிகரிப்பதால் அல்லாமல் ஜனன விகிதம் தணிவதாலேயே ஏற்பட வேண்டும் என்றும், அதாவது நம் நாட்டில் இப்போது ஒருமணி நேரத்துக்கு ஓராயிரம் குழந்தைகள் பிறப்பதற்குப் பதிலாக ஐந்நூறு குழந்தைகள்தான் பிறக்க வேண்டும் என்றும் கூறினார்."



விளம்பரங்களிலும் எண் அடுக்குகள் :

"இருபது வருஷ காலமாய், இருநூறு நிபுணர்கள் சேர்ந்து ஆராய்ச்சி நடத்தி, நானூறு மூலிகைகளிலிருந்து தயாரித்திருக்கும் இந்த மாமருந்து, சரீரத்திலிருக்கும் எண்ணூறு நரம்புகளுக்கும் எண்ணாயிரம் கஜம் நீளமுள்ள ரத்தக் குழாய்களுக்கும் புதுபலம் ஊட்டி, எண்பது வயதுக் கிழவனை இருபது வயது வாலிபனாக மாற்ற வல்லது."

இம்மாதிரியான மருந்து விளம்பரங்களைப் போலவே, ஸினிமா விளம்பரங்களும் இலக்கங்களை அள்ளி வீசுகின்றன. "கோடி உள்ளங்களைக் கொள்ளை கொண்ட கோமளாங்கி, இருபது லட்சம் ரூபாய்ச் செலவில் சிருஷ்டிக்கப் பட்டது. ஐந்நூறு நடிக நடிகைகள் ஐம்பது பெரிய நட்சத்திரங்கள்—பதினைந்து தேமதுரப் பாட்டுகள்—இதுவரை முப்பது ஊர்களில், முன்னூறு வாரங்களாக, முப்பது லட்சம் பேர் கண்டு களித்திருக்கிறார்கள்."

சர்க்காரும்கூட இத்தகைய விளம்பரங்களில் ஈடுபடுகிறது. ஒரு திட்டம் என்றால், அது எத்

தனை வருஷ திட்டம், அதற்கு எத்தனை கோடி ரூபாய் செலவாகும் என்பதைத் தெரிவிக்கிறார்கள். அது ஒரு அணைக்கட்டு திட்டமாக இருந்தால், உத்தேச அணையின் நீளத்தையும் அகலத்தையும், அதிலிருந்து வெட்டப்படவிருக்கும் கால்வாய்களின் நீளங்களையும், அதன் மூலம் பாசன வசதி பெறக் கூடிய நிலப்பரப்பின் அளவையும் அந்த நிலப் பரப்பில் விளையக் கூடிய உணவுப் பொருள்களின் நிறை மதிப்புக்களையும் தெரிவிக்கிறார்கள். அணைக்கட்டு திட்டத்தின் ஒரு பகுதியான மின்சார நிலையத்தின் மூலம், எத்தனை 'கிலோவாட்' சக்தி உற்பத்தியாகும் என்பதையும், அதை விநியோகிப்பதற்கென எத்தனை கம்பங்கள் நாட்டப்படும், எவ்வளவு நீளமான கம்பிகள் இழுக்கப்படும் என்பதையும் அறிவிக்கிறார்கள்.

அப்புறம் பட்ஜெட். அதில், மதிப்புத் தொகை, மதிப்பில்லாத் தொகை, மதிப்பு மீறிய தொகை என்றும், வசூலான தொகை, வசூலாகாத தொகை, வசூலாக முடியாத தொகை, வசூலிக்க வேண்டிய தொகை என்றும், இனம் இனமாக நெருங்கிக் கிடக்கின்றன. ஓரிடத்தில் வருமான வரி; இன்னோரிடத்தில் வரி வருமானம். ஓரிடத்தில் கடன் பத்திரங்கள்; இன்னோரிடத்தில் பத்திரக் கடன்கள். வட்டித் தொகைகள், வட்டத் தொகைகள், வெட்டுத் தொகைகள், வெட்டித் தொகைகள் என்று மற்றோரிடத்தில் நிறைந்து கிடக்கின்றன. அந்தந்த இனங்களுக்கு எதிரே, பத்தும், பதினைந்தும், இருபதுமாகத் தான் இருக்கின்றன. ஆனால் மேலே பார்த்தால், எல்லாம்

கோடிக்கணக்கில் என்று போட்டிருக்கிறது.

கோடிக் கணக்கில் வரவு செலவுகள் நடத்தி, ஜனங்களை ஆட்டி வைக்கும் சர்க்கார், தான் ஆட்டி வைக்கும் ஜனங்களின் தொகை என்ன என்பதை கணிக்காமல் விட்டு விடுமா என்ன? வீடு வீடாகப் புகுந்தும், சத்திரம் சாவடிகளைத் துருவியும், ஓடுகிற வண்டிகளில் ஏறியும் ஆட்களை எண்ணுகிறார்கள். இவ்வாறு ஜனசங்கியை எடுத்த பிறகு அதை ஆதாரமாகக் கொண்டு, எத்தனையோ சராசரிக் கணக்குகளைத் தயாரிக்கிறார்கள். சராசரி மனிதன் ஒருவன் இன்னின்னபடி இருப்பான் என்றும் கணித்துச் சொல்லுகிறார்கள்.

நல்ல வேளையாக, நான் ஒரு சராசரி மனிதன் அல்ல; சராசரி புள்ளிக்கு மேலானவனாகவே இருக்கிறேன். ஒரு சராசரி மனிதனாக நான் இருந்திருக்கும் பட்சத்தில், நான் இப்போதிருப்பது போல், இவ்வளவு உயரமும், பருமனுமாக இருந்திருக்க முடியாது; இப்போது கிடைக்கும் வருவாயில் பத்தில் ஒரு பங்கு கூடக் கிடைத்திருக்காது; இப்போது உண்ணும் உணவில் பாதி அளவு கூடக் கிடைத்திருக்காது; இப்போதுள்ள ஆரோக்கியமும் சுக சௌகரியங்களும் இவ்வளவாக இருந்திருக்காது. இதையெல்லாம் சொல்லுவானேன்? இத்தனை வயது வரை நான் உயிரோடு இருந்திருக்கவே முடியாது!

[இந்தக் கட்டுரைக்கு நூற்றுக்கு நூறு மார்க் தருகிறோம். —ஆசிரியர்.]



என்ன! என்ன!!
என்ன!!!...
..வசந்த ருதுவா!
என பரவசமடையச்
செய்யும்
மலர்ந்த மலர்களின்
மனதை மயக்கும்
மணம் கொண்டது.
உபயோகிக்க
உபயோகிக்க
உங்கள்
உள்ளம்
உவக்கும்
நீபா
ஹேர் ஆயில்
கங்கா ஒர்க்ஸ்
அடையார்
சென்னை.. 20.

வாடா மலர் அதிர்ஷ்ட நம்பர்
பரிசு ரூ. 200.

ஜனவரி மாதம் முதல் 'வாடாமலர்' பிரதிகள் எல்லாவற்றிலும் அதிர்ஷ்ட நம்பர்கள் அச்சிட்டிருக்கும். குறிப்பிட்ட ஒரு நம்பருக்கு ரூபாய் 100-பரிசும், மற்றொரு நம்பருக்கு ரூபாய் 50-பரிசும் இன்னும் ஐந்து நம்பர்களுக்கு ரூபாய் பத்து வீதமும் ஆக ஏழு நம்பர்களுக்குப் பரிசு அளிக்கப்படும். அதாவது நேயர்களிடமிருந்து குறிப்பிட்ட நம்பர்களுள்ள 'வாடா மலர்' பிரதிகளைத் திரும்ப அந்தந்தப் பரிசுக்குரிய விலைக்கு வாடாமலர் காரியாலயத்தாரால் வாங்கிக் கொள்ளப்படும்.

இந்த ஏழு அதிர்ஷ்ட நம்பர்களும் வாடாமலர் பிரதிகள் அச்சாகும் முன்பே பொறுக்கப்பட்டு ஸீல் வைத்த கவரில் ஏதாவதொரு பாங்கியில் ஒப்படைக்கப்படும். ஒவ்வொரு மாதமும் பிரதிகள் அனைத்தும் விற்பனையான பிறகு மேற்படி கவரைப் பாங்கியிலிருந்து எடுத்து வந்து அதனுள் உள்ள அதிர்ஷ்ட நம்பர்களைப் பிரிதோர் இதழில் பிரசுரிக்கப்படும்.

அதிர்ஷ்ட நம்பர்கள் வாடாமலரில் வெளியிடப்பட்ட பிறகு, நேயர்கள் தங்களிடம் அந்த எண் உள்ள பிரதி இருக்கின்றதா என்று கவனிக்க வேண்டும். இருக்குமானால், அதிர்ஷ்ட நம்பர் உள்ள பிரதியை, அப்போது குறிப்பிடப்படும் தவணைக்குள் தங்கள் முழு விலாஸத்துடன் ரிஜிஸ்தர் தபாலில் வாடாமலர் காரியாலயத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அப்படி அனுப்பப்படும் பத்திரிகைகள் முழு ரூபத்தில் ஏடுகள் கிழிந்து போகாமல் இருக்க வேண்டும். இவ்வாறு அனுப்பப் பெறும் பிரதிகள் உண்மையான அதிர்ஷ்ட நம்பர் உள்ள பிரதிகள் தானென்று நிர்ணயிக்கும் பொறுப்பு வாடா மலர் மானேஜரையே சேர்ந்தது.

அதிர்ஷ்ட நம்பர் உள்ள பிரதி யாருடைய விலாசத்தில் வாடாமலர் காரியாலயத்துக்கு அனுப்பப் பெறுகிறதோ அவருக்கே தான் பரிசு வழங்கப்படும். அவரே புஸ்தகத்துக்குச் சொந்தக்காரரா, அவர் அதை யாரிடமிருந்து பெற்றார், எவ்விதமாகப் பெற்றார் ஆகிய எந்தத் தகவலும் கவனிக்கப்படமாட்டாது. ஆகவே, புஸ்தகத்துக்குடையவர் தமது பிரதியை ஜாக்கிரதை செய்து கொள்வதில் விசேஷ சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசிமாகும்.

குறிப்பிடப்படும் தவணைக்குப் பிறகு, 'வாடாமலர்' காரியாலயத்தில் கிடைக்கும் பிரதிகள்—அவை அதிர்ஷ்ட எண்கள் உடையனவாக இருந்தாலும்—கவனிக்கப்படமாட்டா.

இதற்காக வாசகர்கள் விசேஷமாகச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. ஜனவரி மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் பிரதிகளை வாங்கி, அவற்றைப் படித்தவுடன் ஜாக்கிரதையாக வைத்திருக்க வேண்டும். ஏனென்றால் அவற்றில் ஒன்று, ரூ. 100-பரிசைக் கொண்டு வரக் கூடு மல்லவா?

சலனச்சித்தம்

"இராமப்பிரேமா"

அன்புள்ள வசந்தா!—இவ்வாறு நான் உன்னை அழைப்பது தவறுதான். ஆனால், பழகிப் போன தோஷம் இப்படிக் கூப்பிடுகிறேன். உன்னுடைய கடிதங்கள் எல்லாம் கிடைத்தன.

நான் உனக்குக் கடிதமே எழுத வில்லை என்று மிகவும் குறைப்படுகிறாய். உன் மேல் எனக்குக் கோபமோ, வருத்தமோ கிடையாது. எனக்கு வெறுப்பெல்லாம் என் மேலேயே தான்.

வசந்தா! நான் கேவலம் வேலைக்காரன். என் மீது நீ இத்தனை அன்பைச் செலுத்தியதும், செலுத்துவதும் தவறு. ஆனால், இயற்கையில் தவறல்ல.

புறத்தே தான் தவறு. உன்னிடம் மாசு கற்பித்து விட்டதாக எண்ணி விடாதே.

என்னை யோகி என்றும், பிரம்மசாரி என்றும் பரிகாசம் செய்கிறாய். ஆம்; அதே பாதையில் தான் என் வாழ் நாளைச் செலுத்த விரும்புகிறேன். ஆனால், பருவச் சுழல் ...?

நான் வேலையை விட்டு வெளியேறியது மன்றி ஊரை விட்டே ஏன் போய் விட்டாய் என்று கேட்கிறாய். அதற்கு நான் என்ன பதில் கூற முடியும்? என்னைப் பற்றிய உண்மை எதுவும் தெரிய வில்லையே என்கிறாய். ஆம்; என் உள்ளம் பெரும் புயலில் சிக்கிப் பரதவிக்கிறது. மனம் அடிக்கடி பாபத்திற்கு அடிமையாகும் படித் தூண்டுகிறது. அதனின்றும் விடுதலை வேண்டித் தான் தவங்கிடக்கிறேன்.

ஒருவன் அதர்மத்திலிருந்து தர்மத்திற்குச் சென்றால் ஆனந்தமும், அமைதியும் உண்டாகும். தர்மத்திலிருந்து அதர்மத்திற்குப் புகவிரும்பினாலோ உள்ளம் பெரும் புயலில் தாக்குண்டு சஞ்சல மடையும். இதை என் அநுபவத்தினால் சொல்கிறேன்.

ஏதோ ஒன்றும் புரியாதபடி எழுதிக் கொண்டு போகிறேனென்று எண்ணுவாய்! உன்னுடைய கடிதங்களுக்கு உண்மையான பதில் எழுத அச்சம். மனதில் தடுமாற்றம். நேரிலானால் விஷயத்தைச் சொல்லியிருக்க முடியாது. கடிதத்தில் தானே? எழுதி விருகிறேன்.

வசந்தா! உன் உள்ளத்தை நான் ஆராய்ச்சி செய்யவில்லை. உன்னுடன் பழகிய மட்டில் உன் வெள்ளை உள்ளத்தைத் தான் அறிந்திருக்கிறேன்.

என் குற்றங்களை மறப்பதோடு என்னையும் மறந்து விடும்படி மன்று டிக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் வீட்டில் வேலைக்கு வரும் போது சிறு பையனாகத் தான் வந் தேன். அதனால் தான் நம்மிடையே விசித்திரமான முறையில் 'அன்பு' வேர் ஊன்றியது. வெகு காலம் சாதா ரண மனிதனாகத் தான் வளர்ந்தேன். சினிமாவையும் நாடகத்தையும் பார் த்துவிட்டு யோகியாகிவிடப் பழகி வந் தேன். ஆனால் நாளடைவில் துன் பத்தை இன்பமாகக் கருதும் பாப புத்தி உண்டாகி விட்டது.

உள்ளத்துக்கும் உணர்ச்சிக்கும் பெரும் போர். ஒவ்வொரு சமயம் உள்ளம்வெற்றியடையும். அப்போது மனச் சாந்தியும், அமைதியும் உண் டாகும். சில சமயம் உணர்ச்சிக்கு வெற்றி. அது மனப் புயலைக் கிளப்பிக் குழப்பத்தை உண்டாக்கும். நான் சில சமயம் என் பாப உணர்ச்சி யைப் பாட்டாகப் பாடிக் கொண்டி ருப்பேன். நீயும் மெய்ம் மறந்து கேட் டுக் கொண்டிருப்பாய். 'இது யாருடைய பாட்டு? எந்த சினிமாவில்?' என்று நீ கேட் டதற்கு 'என் நண்பன் ஒரு வன் சாகித்யம். நான் பாடு கிறேன்' என்று பதில் சொன் னேனல்லவா? அது முழுப் பொய். சாகித்யம் என்னு டையதே.

மனித சமூகத்தின் உள்ளத் தில் 'அன்புக் கொடி வளர் ந்து ஊசலாடுகிறது. அது ஏதேனும் ஒரு மரத்தைப் பற்றி நிற்கிறது. என் உள்ளக் கொடி படரும் இடமின்றித் தவித்தது. ஆனால் எதிர்பாராத படி அது உன்பால் அடைக் கல மடைந்தது. அன்னையின் அன்பும், சகோதர வாஞ்சை யும் ஒருங்கே மிளிர்ந்து நின் றது உன்பால். ஆனால், என்ன பந்தமோ அதே உணர்ச்சி உன்னுள்ளத்திலும் உண்டாகி யிருக்கிறது. இது தான் 'தெய் வீகம்' என்பது போலும்! இந்த நிலை மையில் நான் என்னுடைய பல துய ரங்களை மறந்து இருந்தேன். அதே உள்ளம் நீடித்திருந்தால் நான் அமர வாழ்வை அடைந்திருப்பேன். ஆனால், விதி...?

சில சமயம் கடவுள் சிருஷ்டியின் மேல், இயற்கை உணர்ச்சித் தன்மை யின் மேல், எனக்குக்கோபம் பொங் குகிறது. மறுசமயம் அது அவன் விளையாட்டு என்று நானே சமா தானம் செய்து கொள்கிறேன்.

உன் கணவன் உன்னைச் சாடை யாகக் கண்டித்திருந்ததும், என் 'பத வி'த் தன்மையையும் மறந்து எனக்கு நீ பல வகைகளிலும் உபகாரங்களும் உபசாரங்களும் செய்திருக்கிறாய். கள்ள மற்ற உள்ளத்துடன் யோக வாழ்வை நாடி வந்த என் மனதில் அது நேர்மையற்ற உணர்ச்சியை ஊட்டி விட்டது. நீ உன் கணவனுடன் உல்லாசமாக இருக்கும் சமயங்களில் என் கண்கள் பார்த்துவிடும். அதனால் என் உள்ளத்தில் ஓர் ஏக்கம் பிறந் தது. அதன் போக்கு விபரீத நிலைமை



யில் தாண்டவமாடிக் கொண்டி ருந்தது.

அன்றொரு நாள் நீ கண்டெடுத்த பித்தளை மோதிரத்தை என் விரலில் போட்டு அழகு பார்த்தாயே, அன்று நீ பார்த்த பார்வை, அம்மம்மா! அந் தச்சமயம் அதைப் பற்றி என் உள் ளத்தில் எத்தனை சலனம் தெரியுமா?

அடே, நீ அதிர்ஷ்டசாலி! இனி மேல் உன்னுடைய யோகம் போக மாகி விடும், பிரம்மச்சரியம் ஓடி விடும், உன் அழகில்-இளமையில்-அவள் தன் உள்ளத்தைப பறி கொடுத்து விட்டாள். அவள் உன் கைப் பொம்மை இனி. அவள் இதய ராஜா நீ...!

சே. பாபி! என்ன நினைத்து விட் டாய்? சகோதரி போன்றவளிடம் இத்தகைய உணர்ச்சியா? அன்னைத் தன்மையாளிடம் அடுக்காத நினைப்பா? எஜமானனுக்கு துரோக மான சூழ்ச்சியா? அட பாபி! அவள் உன்னைத் தாய் போல் நேசிக் கிருள், நீ...? எரிக்கும் காமக் கண் களால் பார்ப்பது சரியா?...

சாந்தம்மிகுந்த என் நிலை சஞ்சலமே உருவாகி விட்டது. எவ்வளவோ சமா தானப் படுத்தியும் உள்ளம் கட்டுக்கு அடங்க வில்லை.



"அடடே! என்ன ஆமையாரே! முதுகு மேலே என்ன அது!"
"அதுவா, மேல் மாடி சும்மா மொட்டையா இருந்ததா? அதை வீணாக்குவானேன்னு ஒரு சின்ன 'ரூம்' போட்டு வைத்தேன்."

அன்றொருநாள் உன் புருஷர் 'டின்ன' ருக்குப் போய் விட்டார். நீ ரொம்ப சிக்கிரமே படுத்துத் தூங்கி விட்டாய். நான் வழக்கம் போல் 'பிளாஸ்'கில் வெந்நீரும் பாலும் வைப்பதற்கு மாடிக்கு வந்தேன். உன் கூந்தலில் செருகப் பட்டிருந்த மல்லிகையின் மணமும், சண்பகத்தின் சுகந்தமும் என்னை என்னவோ செய்தன. உன் பக்கத்தில் வந்து நின்று, குனிந்து அம் மலர்களின் மணத்தைக் களவாடிக் கொண்டிருந்தேன். என் சுவாசம் பட்டு மலர் இதழ்கள் மெல்ல அசைந் தன. உன் புன்னகை தவழும் வதன ஒளியும் வசீகர அங்க அமைப்பும் சேர்ந்து, அப்பப்பா, அன்று தான் காமத்தின் கொடுமையை உணர்ந் தேன். அதே நிலைமையில் எவ்வளவு நேரமோ! நீ திடுக்கிட்டு எழுந்தாய். நான் மிரண்டு வெளியே விரைந் தேன். நீ 'யாரது?' என்று கேட் டாய். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. கீழே ஓடிப் போய் விடலா மென்று எண்ணினேன். நான் அப்படிச் செய் திருந்தால் அப்போது என் மீது குற் றம் சாட்டப் படும். அதை எண்ணியே 'நான்தான்' என்றேன். 'யாரோ என் கிட்ட வந்த மாதிரி இருந்தது' என்றாய். நான் சமத்காரமாக 'கனவு வேறு காண ஆரம்பித்து விட்டாயா?' என்று சொல்லிக் கொண்டே வந்து விட்டேன். நீ அசட்டுச் சிரிப்புடன் படுத்துக் கொண்டாய். அந்தப் புன்ன கையின் அர்த்தம் என்ன?... மீண்டும் வெறி, பயம், உணர்ச்சி! இதற்குள் அவர் வந்து விட்டார்.

ஏற்கெனவே மனம் நொந்திருந்த நான் இச்சம்பவத்தால் மோதப் பட் டுக்காய மடைந்து விட்டேன். என் மீது எனக்குச்சந்தேகம் வலுக்க ஆரம் பித்தது. இந்நிலைமையில் நான் என்ன செய்ய முடியும்? அதனால் தான் வீட்டை விட்டு வெளியேறினேன்.

என் மீது கொஞ்ச நஞ்ச மிருந்த நம்பிக்கை அறவே போய் விட்டது. உள்ளூரிலேயே இருந்தால் என் உடல் தங்காது. உன்னை வந்து பார்க்

கும்படி வெறி தூண்டும். அது போன்ற சமயங்களில் என் உள்ளம் நிம்மதியை இழந்து கசடனை நடந்து கொண்டு விட்டால் ஆச்சர்யமில்லை அல்லவா? அதனால் தான் ஊரை விட்டே வந்து விட்டேன்.

• வசந்தா! பிரிவுக்குப் பின் மனதில் சிறிது 'பண்பு' உண்டாகியிருக்கிறது? அமைதியும் சாந்தமும் தலைதூக்கி நிற்க முயலுகிறது. பழைய தன்மையில் அன்புக் கொடியின் ஆசை வெறி ஒடுங்கி சகோதர வாஞ்சையும், தாயன்பும் துளிர் விட்டுப் பிரகாசிக்க ஆரம்பித்திருக்கிறது.

வசந்தா! உள்ளத்திலே சத்தியப் பண்பின் வசந்த மலர் அலர்ந்து வருகிறது. இப்படியே இருந்தால் நான் அமரனாகி விடுவேன். "யோகியாகி விடுவேன்.

முன்பு கதை கவிதைகளைப் படிக்கும் போது, எல்லாம் கவிஞனின் கூற்று, எழுத்தாளனின் கற்பனை, அறிவின் வன்மை என்றிருந்தேன். இப்போது உண்மை புலப் பட்டு விட்டது.

வசந்தா! உன்னையறியாமல் உன்னைச் சுற்றி நிகழ்ந்த என் வெறிப் பிழைக்கு மன்னிப்பாய் என நம்புகிறேன். என் பாபத்தை அறிந்த பின் என்னைத் தூற்றும் எண்ணம் உண்டாகக் கூடும். ஆனால் மறு முறையும் இக்கடிதத்தைப் படித்து விட்டு, சற்று நிதானமாகச் சிந்தித்துப் பார். என்னிடத்திலும் சரி, உன்னிடத்திலும் சரி, எவரிடத்திலுமே குற்றமில்லை என்பது விளங்கும்.

உன் புறக் கருத்து எவ்வாறாயினும் சரி; உன் அன்புக்குக் கட்டுப் பட்ட ஊழியச் சகோதரனுக்காகப் பச்சாத்தாபப்படு. நீ ஒரு தவறுடைய அண்ணனுக்கு அவன் தங்கை எப்படி பச்சாத்தாபத்துடன் நல்வாழ்வுக்காகப் பிரார்த்திப்பாளோ அப்படி எனக்காக நீ இறைவனிடம் என் சித்த சுத்திக்காக இறைஞ்சு. அது உன் கடமை. நம்மிடையே வளர்ந்த அன்பு சத்தியமுள்ளதாகுக.

"நான் பிரஸிடெண்ட் வெஜிடேபிள் ஹேர் ஆயிலை உபயோகித்திருக்கிறேன். அது கேசத்திற்கு ஆரோக்கியமளிக்கும் ஒரு சிறந்த கூந்தல் தைலம். என் அனுபவத்தில் கண்டேன். நல்ல கூந்தல் வளர்ச்சிக்கு அது உதவுவதுடன், தேகத்திற்கு குளுமையையும் அளிக்கிறது.

PRESIDENT VEGETABLE HAIR OIL

RATHOD TRADING Co
SOWCARPET - MADRAS.1

இலங்கைக்கும், மலாய் நாட்டுக்கும் ஏஜன்ஸிகளுக்கு மனுக்கள் கோரப்படுகின்றன.

மாரன் கணை

சுவாமி

கற்பகச்சோலையிலே பூங்குயில் ஒன்று இன்னிசை புரிந்து கொண்டிருந்தது. அமைதியான மாலை நேரம் அதற்கு இன்ப மூட்டியது போலும். தவழ்ந்து வரும் தென்றல் காற்றையும், இசைத்து வரும் கருங்குயிலின் கானத்தையும் ரசித்துக் கொண்டு மயில் ஒன்று வண்ணத் தோகையை விரித்தாடியது.

மாரன் மலர்க்கணையைக் கையிலேந்தி இயற்கை எழிலைக் கண்டு ரசித்த வண்ணம் மலர் மஞ்சத்திலே சாய்ந்து கொண்டிருந்தான். அடுத்தபடியாகத் தன் கணையை யார் மீது தொடுக்கலாம் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தது அவனது சிந்தனை.

“சிந்தனையின் முடிவு என்னவோ?”

மாரன் சிந்தனையைக் கலைத்துக் கொண்டு அவன் எதிரிலே வந்து நின்றாள் அழகுத் தெய்வம் ரதி.

மன்மதன் ரதியை அன்போடு நோக்கி விட்டு, புன்னகை புரிந்தான். பிறகு பெருமையுடன் சொல்வான். “மன்மதன் கையிலே மலர் பாணம் என்றால் அதன் முடிவு என்ன என்பது தெரியாதா கண்ணே! இல்லை, என்னுடைய மலர் பாணத்தின் மகிமை தான் உனக்குத் தெரியாதா? என் மலர் பாணம் எத்தனை பேரை இம்சை செய்கிறது தெரியுமா? எத்தனை பேரின் மனதை மாற்றிக் கலங்க வைக்கிறது தெரியுமா?”

ரதி ‘களுக்’ கென்று சிரித்து விட்டுச் சொன்னாள் :

“தங்கள் மலர் பாணம் மனிதனை மயக்கி ஆட்கொண்ட காலமெல்லாம் மேருமலையேறி விட்டது ஸ்வாமி! மனிதன் இப்போது யுத்தங்கள்—மஹா யுத்தங்கள் குண்டுகள்—அணுக்குண்டுகள் இவைகளுக்கெல்லாம் பயப்படாமல் உயிர்வாழ்கிறான். நீங்கள் என்னவோ உங்கள் மலர்பாணத்தைப் பற்றி பெருமையடித்துக் கொள்ளுகிறீர்கள் !”

மாரன் சற்றும் கோபம் கொள்ளவில்லை. இதழ்களில் புன்னகை தவழச் சொன்னான் :

“மனிதன் என்னதான் குண்டுகள், அணுக்குண்டுகளையெல்லாம் பார்த்துப் பழகி வெற்றி பெற்றிருந்தாலும் என் காமக்கணையைத் தடுத்து நின்று வெற்றி பெறுவதென்பது முடியாத காரியம். இதுவரையில் என் மலர்க்கணையை எதிர்த்து நின்றுவெற்றி பெற்றவர் பூலோகத்தில் ஒருவருமே கிடையாது......”

“அதுதான் இல்லை; மனிதனின் சித்தம் கல்லினும் கடினமானது. தன் மனதை அடக்கி ஆள முடி

யாத ஒரு சிலரே தங்கள் மலர் பாணத்தால் தாக்குண்டு போகிருர்கள். அதிலும் பெரும்பாலும் ஆண்கள் தான்! பெண்களின் மனதை மாற்றிக் காதல் கணையைப் பிரயோகிப்ப தென்பது வெறும் கனவுதான் ஸ்வாமி!''

• கொஞ்சும் மொழிகளுடன் பொடி வைத்து ஊதினுள் ரதி.

மன்மதன் இப்போது புருவத்தை நெறித்துக் கோபப் பொறி பறக்கும் கண்களை எட்டுத் திசையிலும் செலுத்தினன். பிறகு எங்கேயோ ஓரிடத்தில் நிலைத்து நின்றது அவன் கண்கள். மறுபடியும் அவன் முகத்திலே சாந்தம் நிலவியது. அவன் இதழ்கள் புன்னகை பூத்தன. பூலோகத்தில் ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினன் மன்மதன்.

''அதோ பார் ரதி! குழந்தை ஒன்றைக் கையிலேந்தி கொஞ்சிக் குலவிக் கொண்டிருக்கிருளே மாலதி, அவளைக் கேள், என் கணைகளைப் பற்றி. ஆம்; என் மலர்க் கணைகளின் மகிமையைப் பற்றி அவளைக் கேள். அவள் சொல்லுவாள். அடுக்கடுக்கான என் மலர் பாணத்தால் தாக்குண்ட அவளது வாழ்வின் விசித்திரத்தைப் பற்றிக் கேள்—சொல்லுவாள். என்னுடனேயே பழகிவிட்ட நீ என் கணைகளின் விசித்திரத்தைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. மாலதியைக் கேட்டாகிலும் தெரிந்து கொள்.''

ரதி ஆச்சரியத்தோடு பூலோகத்தை எட்டிப் பார்த்தாள். மாலதி குழந்தையைத் தொட்டிலில் போட்டுவிட்டுத் தன் கதையைச் சொல்லத் தொடங்கினுள்.

'கல்யாணம் என்னும் பிணைப்பால் • ஆண்களுக்கு அடிமையாகிச் சாவதை விட நித்தியத்திற்கும் கன்னியாகவே இருந்து காலம் கழிப்பதென்ற முடிவிலே ஆண்களைக் கண்ணால்கூடப் பாராமல் காலேஜ் படிப்பை ஒரு வழியாக முடித்தேன். எல்லோரும் என்ன வெல்லாமோ பயமுறுத்தினர்கள். காலேஜுக்குச் சென்ருல் காதல் பிறந்து விடும், பிறகு கல்யாணம் செய்து கொள்ள வேண்டு மென்று. ஆனல் என் வைராக்கியத்தை மாற்ற யாராலும் முடியவில்லை. ஆண்களின் விஷம் நிறைந்த கண்களில் படாமல் பி. ஏ. வரை படித்து முடித்துக் கொண்டேன்.

'சம்பாதித்துச் சோறு துணி வாங்கிக் கொடுக்க ஆண்களின் உதவியாவேண்டும்? பெண்களால் கூடச் சம்பாதித்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமென்று நிரூபித்துக் காட்ட உபாத்தியாயனித் தொழிலுக்குப் பயிற்சி பெற்றுக் கொண்டேன். என் அதிர்ஷ்டமோ என்னவோ தெரியவில்லை. பயிற்சி முடிந்ததும் உடனே வேலை கிடைத்தது. பிறகு என் பெருமைக்குச் சொல்லவா வேண்டும்?

'கடந்த ஐந்து வருடங்களில் என் மனம் மாருமல் லட்சியப் பாதையிலே வழுவாது சென்றது பற்றி எனக்கே ஒரு தனிவிதமான சந்தோஷம்; பெருமையுங் கூட. ஆசிரியை என்ற முறையில் வருங் காலப் பெண் திலகங்களின் வாழ்வின் லட்சியத்தைப்பற்றிபோதனை செய்தேன். சிலர் கேட்டார்கள். சிலர் கேட்காமல் சிரித்தார்கள். அது பற்றி எனக்கென்ன? என்

வாழ்வின் லட்சியம் ஈடேறிவிட்டதல்லவா?

'என் தோழியர்கள் பலருக்கு என் மீது, என் லட்சியத்தின் மீது, நம்பிக்கையில்லை. எப்படியும் கல்யாணம் செய்துகொள்ளத்தான் வேண்டும், ஆண்களுக்கு அடிமையாகத்தான் வேண்டும் என்று தத்துவம் பேசினார்கள். ஆமாம்; தோற்றுப்போனவர்கள் வேறு என்ன பேசுவார்கள்!

'காலம் ஓடியது. ஒருநாள் மாலை நேரம். பள்ளிக்கூடம் முடிந்ததும் உலாவும் பொருட்டு வெளியே சென்றேன். எங்கெல்லாமோ சுற்றிவிட்டு மூர்மார்க்கெட்டுக்குச் சென்றேன். அங்கேதான் என் வாழ்வின் தோல்விப் படலம் ஆரம்பமாயிற்று.

'புத்தகக் கடை ஒன்றில் நின்றுகொண்டு பழைய புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தேன். அப்போது முன் பின் எனக்குத் தெரியாத ஒருவர் வந்தார். நாகரிகமான ஆடை அணிந்திருந்தார். அவரைக் கண்டதும் என் உள்ளத்திலே ஏதோ ஒரு விதமான மாற்றம் ஏற்பட்டது. 'கண்டதும் காதல்' என்ற சித்தாந்தம் அப்போதுதான் எனக்குப் புலப்பட்டது. பெண் உள்ளத்தின் பலக்குறைவு அப்போது தான் எனக்குப் புரிந்தது. காமன் கணையின் வசீகரத்தன்மை அப்போது'தான்! எனக்குத் தெரிந்தது.

'என்னையும் அறியாமல் என் கண்கள் அவரையே நோக்கிக் கொண்டிருந்தன. என் கண்களைத் திருப்ப எவ்வளவோ முயன்று பார்த்தேன். ஆனால் முடிவில் தோல்விதான். நான்

தான் அவரைப் பார்த்தேனே தவிர அவர் என்னை ஒரு முறையாவது பார்க்கவில்லை. எதோ ஒரு புத்தகத்தைக் கையில் வாங்கிக் கொண்டு அவர் போய்விட்டார். நான் கையிலே யாதொரு சுமையும் இல்லாமல் வீடு திரும்பினேன். ஆனால் என் மனத்திலே மாத்திரம் எதோ ஒரு விதமான விவரிக்க முடியாத பளு வந்து அழுத்தியது.

'அவருடைய தரிசனமே என் மனதிற்கிசைந்ததா யிருந்தது. அலட்சியமான அவரது பார்வை என் மனதைக் குளிரச் செய்தது. என் மனதின் விசித்திர மாறுதலைக் கண்டு வெட்கிப் போனேன். எங்கு பார்த்தாலும் அவரது உருவமே என் கண்முன் தோன்றி ஏளனம் புரிவதுபோல் இருந்தது.

'கிட்டக் கூடியதா, அல்லதுகிட்டக் கூடாததா?' என்று கூட அப்போது நினைத்துப் பார்க்க முடியவில்லை. எவ்விதத்திலும் அவரை என் வருங்கால மன்னராகச் செய்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டேன்.

'சுழலில் சிக்கித் தவித்த மனதை எப்படியோ தேற்றிக் கொண்டு படுக்கைக்குச் சென்றேன். ஆனால் இரவுப் பொழுதைக் கழிப்பதுதான் என்னால் முடியாமல் போய்விட்டது. அமைதியான இரவும், குளுமையான நிலவும் காதல் வசமானவர்களுக்குச் சத்துரு போலும். பல விதங்களிலும் முயன்று அவரை மறக்க எண்ணினேன். ஆனால் தூக்கத்திலும் அவர் உருவம் என்னை விட்டகல மாட்டேன்

ஆஸ்த்மா அபாயத்தை

அனுபவ ஸம்மதமான மருந்தினால்தான் தடுக்கலாம்

தாற்காலிகமான குணத்தை சீக்கிரத்தில் கொடுக்கும் மருந்துகள் கடைசியில் வியாதியை முற்றவைக்கின்றன. பலவருஷ அனுபவத்தைக் கொண்டு தயாரித்த "புரோஹித் ஸ்வாஸஹரி" தான் சாஸ்திரீக முறையில் கைகண்ட ஔஷதமாக அனுமானிக்கப்பட்டிருக்கிறது.

புரோஹித் ஸ்வாஸஹரி ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தை கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நரம்புகளை பலப்படுத்தி ஆஸ்த்மாவிலிருந்தும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6, ரூ 10. பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி, [illegible]" விலாசத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

மதராஸ் ஸ்டாகிஸ்டுகள் : (1) அப்பா & கோ. சைனு பஜார் (2) ஜே. பலபாய் & கோ. 260, சைனு பஜார் ரோட் (3) தாதா & கோ. நைநியப் பநாயக்கன் தெரு.

மதுரை ஸ்டாகிஸ்டு : என். ஆர். [illegible] கெமிஸ்ட்.

புரோஹித ஸ்வாஸஹரி

என்று சத்தியாக்கிரகம்செய்தது. பிறகு தூக்கம் ஏது? ..

'நாட்கள் செல்லச் செல்ல என் மனம் ஏதோ ஒரு விதமான ஏக்கத்தில் சென்று உழன்றது. அடைய வேண்டிய ஒரு பொருளை இழந்து விட்டதுபோன்ற ஏக்கம் என்னை வந்து பிடித்தது. ஏக்கமும் துக்கமும் சேர்ந்து என் உடலைத் துரும்பாக்கின. பள்ளிக்கூடத்தில் சக உபாத்தியாயனிகளும், மாணவிகளும் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்வதே போதுமென்ருகி விட்டது.

'ஏன் இளைத்துப் போகிருய்? ஏன் சோர்ந்து காணப்படுகிருய்?' இவ்வித கேள்விகளுக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியாமல் தவித்தேன். போதாக்குறைக்கு என் வேலையில் ஏனே ஒருவிதமான வெறுப்பு. மனதில் விவரிக்கமுடியாத வகையில் சோர்வு குடிகொண்டிருந்தது. மனச் சோர்வுக்குக் காரணம் காண சிந்தனையை ஓட்டும்போது அங்கும் அவர்தான் குறுக்கிடுகிருர். அப்படியாளுல் என் சோர்வுக்குக் காரணம் அவர்தானு? ஆமாம்; நிச்சயமாக அவராகத் தான் இருக்க வேண்டும்.

'இதுவரையில் தனித்திருந்து வாழ்ந்தாலும் இப்போது தனிமையில் ஏனே ஒருவித வெறுப்பு. தனிமையை நாடி ஏகாந்தமாய்ச் சென்ற காலமெல்லாம் போய் விட்டது. இப்போது எனக்கு ஒரு துணை வேண்டியிருந்தது. எத்தனையோ தோழியர்கள் துணைக்கிருந்தும் போதவில்லை.

'என் வாழ்வோடுஒட்டி உழலக் கூடிய ஒரு துணைவனே தேவை. அதிலும் முன்பின் தெரியாத அந்த 'அனுமதேயத்தை'த்தான் மனம் நாடியது. காதலுக்குக் கண் இல்லை என்பார்களே அது வாஸ்தவம்தானு?

'என் காதலைப் பற்றியும் என் வருங்கால துணைவரைப் பற்றியும் என் அந்தரங்கத் தோழியரிடம் சொன்னேன். அவர்கள் சிரித்தார்கள். ஆமாம்; அவர்கள் சிரிக்காமல் என்ன செய்வார்கள்? மாரன் கணைகளைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? காதல் வாழ்வின் மயக்க நிலையைப்பற்றி அவர்கள் என்னத்தைக் கண்டார்கள்?

'என் தோழிகள் கேலி செய்ததை நான் பொருட்படுத்தவில்லை. ஏதோ ஒரு விதமான சக்திதான் பெற்றது என் மனம். எப்படியாவது விஷயத்தை என் அன்னைக்குத் தெரிவித்து விடுவதென்று தீர்மானித்தேன்.

'முதலில் வெட்கமாகத்தானிருந்தது. ஆனல் யாரிடம் வெட்கம்? என்னைப் பெற்றெடுத்துப்பாலூட்டிச் சீராட்டி ஆளாக்கிய என் அன்னையிடமா வெட்கம்? லஜ்ஜை வெட்கம் எல்லாம் விட்டு திடீரென்று புகுந்து கொண்ட காதல் மயக்கத்தைப் பற்றியும், மயக்கி விட்ட அந்த யௌவன புருஷரைப் பற்றியும் அன்னையிடம் தெரிவித்தேன்.

'அன்னையின் கேள்விகள் என்னைத் திடுக்கிடச் செய்தன. மாப்பிள்ளையின் குலம், கோத்திரம், படிப்பு, வேலை, குணம், இவைகளைப்பற்றி அவள் வரிசையாகக் கேட்டுக் கொண்டே போனுள். பெயர்கூடத் தெரியாத 'அவரை'ப் பற்றி எனக்கென்ன தெரியும்? ஒன்றும் தெரியாது. ஆனுல் அவ

ரைத்தான் மணம் செய்து கொள்ள வேண்டும் என்று தீர்மானமாகச் சொன்னேன். அன்னை சிரித்தாள். ஆனால் கேலி செய்யவில்லை. வரப்போகும் மாப்பிள்ளையைத் தான் பார்க்க வேண்டும் என்று கூறினாள்.

எக்கத்தின் மத்தியில் எத்தனையோ தடவை மூர்மார்க்கெட்டுக்குச் சென்றேன். ஆனால் அவரை ஒரு முறையாவது காண முடியவில்லை. கூட்டமான இடமெல்லாம் துருவிப் பார்த்தேன். ஆனாலும் தோல்விதான். இப்படியாக நாட்கள் மடிந்தன.

ஒரு நாள் நானும் என் அண்ணாவும் ஆங்கிலப்படம் ஒன்றைக் காணச் சென்றோம். சினிமாக் கொட்டகையில் 'அவர்' உட்கார்ந்திருந்தார்! என் அண்ணாவைக் கண்டதும் அவர் ஆர்வத்தின் மிகுதியால் கை தட்டி அழைத்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என் அண்ணா அவர் பக்கத்திலேயே போய் உட்கார்ந்து கொண்டான். இருவருமாகச் சேர்ந்து கொண்டு சளசளவென்று பேசினார்கள். இருவரும் ஒரே இடத்தில் உத்தியோகம் பார்க்கும் நண்பர்கள் என்னும் உண்மை எனக்குப் பிறகு தான் புரிந்தது!

பிறகு கேட்க வேண்டுமா?

குலம், கோத்திரம், படிப்பு, பிராயம், ஜாதகம் இத்யாதி விஷயங்களெல்லாம் பொருத்தமாகவே இருந்தன. சுப முகூர்த்தம் ஒன்றில் எனக்கும் ஸ்ரீமான் ராகவனுக்கும் திருமணம் நடந்தேறியது!

இப்போது, இதோ தொட்டிலில் தூங்கிக்கொண்டிருக்கிறாளே வனஜா, அவள் தான் எங்கள் காதல் விருட்சத்தின் கனி! ஆமாம் எங்கள் குழந்தை அவள் தான்.

ஆடவர் என்றாலே பிடிக்காமல் வெறுத்து வந்த நான் கடைசியாக ஆடவருக்கு அடிமையாகத்தான் வேண்டியிருந்தது. மனதை எவ்வளவு தான் அடக்க முயன்றாலும் காதல் பிறந்தவுடன் அதை அடக்கி ஆள முடியவில்லை. என் லட்சியத்தில் நான் தோல்வி அடைந்தாலும் இப்போது மிகவும் சந்தோஷமாக வாழ்கிறேன். அது ஒன்று போதாதா?''

* * *

“இப்போது என்ன சொல்கிறாய் ரதி?''

மன்மதன் ஏளனமாக ரதியைப் பார்த்துக் கேட்டான்.

ரதி பதில் ஒன்றும் சொல்லவில்லை. முகத்திலே தோல்வியின் சாயல் பிரதிபலித்தது. மௌனமாகத் தன் தோல்வியை ஏற்றுக் கொண்டாள் ரதி!

தலைமை ஆபீஸ்:
பாண்டிபஜார்
தியாகராயநகர் :: சென்னை.

சந்திப்பின் பலன்

பாலசுந்தரி

"நீ விவாகம் செய்துகொள்ள மாட்டேன் என்று கூறுவதற்குக் காரணம்?"

மௌனம்.

"பதில் சொல்லாமலிருந்தால் என்ன அர்த்தம்?" என்று கர்ஜித்தார் திவான் பகதூர் முருகேசம்.

"ஒரு மனைவி இறந்த பிறகு ஆண்கள் புனர் விவாகம் செய்து கொள்வது தவறென்பது என் அபிப்ராயம்" என்று சாந்தமாகப் பதில் கூறினர் சிவகுருநாதன்.

"ஓகோ!"

அந்தக் குரலில் தொனித்த ஏளனத்தை உணர்ந்த சிவகுரு தந்தையை ஒரு தடவை ஏறஇறங்கப் பார்த்தார்.

"சரி; இதுதான் உன் தீர்மானமா?"

"ஆமாம்."

"ஆமாம், என்ன ஆமாம்! படிக்க வைக்கவும், படித்தபின் வேலை பார்த்து வைக்கவும்தான் அப்பா வேண்டும். அப்புறம் பெரியவாள் வழியில் நான் நிற்கலாமோ? இந்தக் காலத்துப் பையன்களுக்கு நாலு எழுத்துப் படித்து விட்டால் ஆகாயத்திலிருந்து குதித்தவர்கள் போல் தான் எண்ணம். கையாலாகாதவன்கள்; போடா, இங்கே ஏன் நிற்கிருய்?" என்று கோபத்துடன் அறையை விட்டு வெளியே சென்ருர் முருகேசம்.

அவர் தலை மறைந்ததோ இல்லையோ, சிவகுருவின் தாயார் உள்ளே வந்து, 'என்னடாப்பா சமாசாரம்? இருந்தாலும் உனக்கு இவ்வளவு பிடிவாத குணம் வேண்டாம்' என்ருள்.

"பின் என்ன அம்மா? நான்தான் அப்போதே சொல்லி விட்டேனே கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று! ஆண்கள் மறு விவாகம் செய்து கொள்வது தவறு என்று அப்பாவிடம் ஆயிரம் தடவை சொல்லி விட்டேன். என்னை ஏன் மறுபடியும் மறுபடியும் தொந்தரவு படுத்த வேண்டும்? நான் என்ன சின்னக் குழந்தையா?" என்று கேட்டார் சிவகுரு.

மகன் குரலில் கடுமை குறைந்திருப்பதைக் கவனித்த அம்மாள் இதுதான் சமயம் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

"அப்படியெல்லாம் சொல்லலாமா சிவா? நாங்கள் உயிரோடிருக்கும் வரை நீ எங்களுக்குக் குழந்தைதானே? நீ இப்படித் தனியாகவே காலம் கழிப்பதை நான் எப்படிப் பார்த்துக் கொண்டிருப்பேன்? உனக்கு மணமாகி விட்டால் நான் நிம்மதியாகக் கண்ணை மூடுவேன். எனக்கு இருப்பதெல்லாம் நீ ஒருவன் தானே! ஊம்..." என்று புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

இம்மாதிரி விஷயங்களில், எப்போதும் சிவகுருவின் தாயாருடைய கைதான் ஓங்கி நிற்கும். யார் என்னத்தை அமர்க்களம் செய்தாலும் கடைசியில் வெற்றி அவளுக்குத்தான்.

"இதோ பார்; இந்தப் பொறுப்பை என்னிடம் விட்டு விடு. உனக்குப் பிடிக்காத பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லியா கட்டாயப்படுத்துகிறோம்? பெண் பிடிக்காவிட்டால் பிடிக்கவில்லை என்று சொல்லிவிடேன். அப்புறம் உன் அப்பா கொஞ்ச நாள் வரை வாயை மூடிக்கொண்டிருப்பார்" என்று தன் கடைசி அஸ்திரத்தைப் பிரயோகித்தாள்.

சிவகுருநாதன் மூளை தீவிரமாக வேலை செய்தது. கல்வி அறிவில்லாத அம்மாளுக்கு இவ்வளவு சாமர்த்தியம் இருந்தால் 'யூனிவர்ஸிடி' பரீட்சையில் முதலாவதாகத் தேறிய அவள் மகனுக்கு எவ்வளவு சாமர்த்தியம் இருக்கும்? ஆகவே அவர் ஒரு யுக்தி கண்டு பிடித்தார்.

"சரி, அம்மா; அப்படிக் கல்யாணம் செய்து கொள்வதானாலும், ஒரு நிபந்தனையின் பேரில் தான் செய்து கொள்வேன்" என்று உறுதியாகக் கூறினார்.

"என்ன?" என்று ஆவலுடன் கேட்டாள் அவன் தாயார்.

"பெண் பதினேழு பதினெட்டு வயதிற்குக் குறைந்தவளாக இருக்கக் கூடாது. குறைந்த பட்சம் அவள் 'இண்டர்மீடியட்'டாவது பாஸ் பண்ணியிருக்க வேண்டும்" என்றார் சிவகுரு.

அம்மாள் ஒரு நிமிஷம் பிரமித்தாள். 'இண்டர்மீடியட் பாஸ் பண்ணின பெண் எங்கே கிடைக்கப் போகிறாள்?' என்ற எண்ணமே அந்த பிரமிப்புக்குக் காரணம். ஆனாலும் இந்த மட்டில் பிள்ளை சம்மதித்தானே என்ற சந்தோஷத்தில் தன் உணர்ச்சிகளை வெளிக் காட்டாது "பூ! இவ்வளவுதானா? இதை முன்னே

சொல்லியிருக்கக் கூடாதா?'' என்று சமாளித்துக் கொண்டாள்.

• • •

சிவகுருநாதன் ஒரு எம். ஏ. பட்டதாரி. தாய் தந்தையருக்கு ஒரே பிள்ளை. ஆங்கிலம், தமிழ், ஹிந்தி ஆகிய மூன்று பாஷைகளிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர். ஆகையால், அவருக்குப் பெண் கொடுக்கக் கொழுத்த பணக்காரர்கள் முன் வந்ததில் ஆச்சரியமில்லை.

சிவகுரு ஓர் இலட்சிய வாதியுங் கூட. கணவன் இறந்தால், அவன் மனைவி மறு விவாகம் செய்து கொள்ளாம விருப்பதைப் போல், மனைவியை இழந்தவனும் புனர் விவாகம் செய்து கொள்ளக் கூடாது என்பது அவரது பிடிவாதமான கொள்கை. "மனைவியை இழந்த புருஷர்கள் விவாகம் செய்து கொள்ள விரும்பினல் கணவனை யிழந்த பெண்களை விவாகம் செய்து கொள்ளட்டுமே. இளம் பெண்களைக் கல்யாணம் செய்து கொண்டு இளைஞர்களின் உரிமையைப் பறித்துக் கொள்ள இவர்களுக்கு என்ன அதிகாரம்?'' என்று அவர் பலமுறை பொது மேடையில் வாதாடி யிருக்கிறார்.

திவான் பகதூர் முருகேசம் தம்முடைய மகன் அழகான பெண் வேண்டுமென்று விரும்புகிறான் என்று தவறாக நினைத்துக் கொண்டு பத்திரிகைகளில் பின் வரும் விளம்பரத்தைப் பிரசுரித்தார் :

" இருபத்திநாலு வயதுள்ள எம். ஏ. பட்டதாரி ஒருவருக்கு இண்டர் மீடியட் படித்த மணமகள் தேவை. பதினேழு, பதினெட்டு வயதுடைய வளாகவும், அழகாகவும், இருக்க வேண்டும்.''

சிவகுருவின் நண்பர்களனைவரும் இந்த விளம்பரத்தைச் சப்புக் கொட்டிக் கொண்டு படிக்கலானார்கள்.

அவர் ஆப்த நண்பன் ஒருவன், சிவகுருவின் முதுகில் ஓங்கி ஒரு 'ஷொட்டு' கொடுத்து விட்டு "குரு! நீ செய்தது ரொம்ப சரி. அப்பாவுக்கு ஒரே பிள்ளை. பணத்திற்கும் குறைவில்லை. அதுதான் நல்ல பிள்ளைக்கு அடையாளம்!'' என்றான்.

சிவகுருநாதன் "அதெல்லாம் ஒன்றுமில்லை. அப்பாவின் அதிருப்தியிலிருந்தும், கோபத்திலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்காகக் கலியாணம் செய்து கொள்வதாகச் சொல்லிச் சில கடினமான நிபந்தனைகளும் போட்டிருக்கிறேன்'' அவ்வளவுதான் என்றார்.

"இண்டர்மீடியட் படித்த பெண் கிடைத்து விட்டால் என்ன செய்வாய்?'' என்று கேட்டான் நண்பன்.

"அழகும் வயதும் இல்லையே என்பேன். அழகும் வயதும் இருந்தால், படிப்பு இல்லையே என்பேன். மூன்று அம்சங்களும் சேர்ந்த பெண் கிடைப்பது அவ்வளவு சுலபமான காரியமா?'' என்றார்.

நான்கைந்து நாட்களுக்குப் பிறகு, மற்றொரு சங்கடம் வந்து விட்டது. விவாக விளம்பரத்தின் விளைவாக, அவர் தகப்பனருக்கு போட்டோக்களும், கடிதங்களுமாக வந்து குவிய ஆரம்பித்தன. மூவாயிரம், நாலாயிரம் என்று

வரதட்சணை கொடுக்கப் பலர் போட்டிபோட்டுக்கொண்டு முன் வந்தார்கள். சில தந்தைமார், மாப்பிள்ளையை, விவாகத்திற்குப் பிறகு மேல்படிப்பிற்காக அயல் நாட்டிற்கு அனுப்பும் பொறுப்பை எற்றுக் கொள்ளவும் தயாராயிருந்தனர். முருகேசம், தம்முடைய பிள்ளை பார்வையிடும் பொருட்டுக் கடிதங்களையும், போட்டோக்களையும் மேஜை மீது வைத்து விட்டுச் செல்வார். சாயங்கிரம் அவர் மனைவி தம் மகனுக்கு ஒவ்வொரு பெண்ணையும் வர்ணித்துக் காட்டுவாள்.

ஒரு மாதத்திற்கு மேல் இதே போல் நடக்கவே சிவகுருநாதனுக்கு பயம் வந்து விட்டது. இந்தத் தொல்லைகளினின்றும் தப்பித்துக் கொள்ளும் பொருட்டு ஓர் உபாயம் கண்டு பிடித்தார். தம் தகப்பனாரை அணுகி நான் கைந்து நாட்கள் மாமா வீட்டுக்குப் போய்த் தங்கிவிட்டு வர உத்தரவு வாங்கிக் கொண்டார்.

சிவகுருவின் மாமா வட்டிக் கடை வைத்திருந்தார். எராளமான இலாபம். அவருக்குப் பெண்ணுமில்லை, பிள்ளையுமில்லை. சிவகுருவைத் தம்முடைய வீட்டிலேயே தங்கியிருக்கும்படிப் பல முறை கடிதம் எழுதியிருந்தார். எனவே, மாமா வீட்டில் முகாம் போட்டு விட்டுப் பத்துப் பதினைந்து நாட்கள் கழித்துத் தான் வீடு திரும்புவதென்ற உத்தேசத்துடன் பிரயாணமானார் சிவகுருநாதன்.

ஒரு வாரத்திற்குப் பிறகு சிவகுருவின் தந்தையிடமிருந்து ‘உடனே புறப்பட்டு வரவும்’ என்று ஒரு தந்தி கிடைத்தது.

சிவகுருவுக்கு எரிச்சலாக இருந்தது. ஆனால், ஒருவேளை அம்மாவுக்கு உடம்பு சரியில்லையோ? அல்லது கல்யாணம் நிச்சயம் செய்த பிறகு சாமர்த்தியமாகத் தந்தி கொடுத்திருக்கிறார்களோ ?'' என்று அவர் மனம் பலவிதமாக எண்ணி அல்லல் பட்டது. எதையும் எதிர்த்துப் போராடவேண்டுமென்ற துணிவுடன் ஊருக்குப் புறப்பட்டார்.

எப்பொழுதும் இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்யும் பழக்கமுள்ளவர் சிவகுரு. எனவே அன்றும் அவருக்கு ரயிலில் இடம் பிடிப்பது சிரமமாக இல்லை. 'கம்பார்ட்மெண்ட்'டுக்குள் நுழையும்போதே சிறிது தயங்கினர். முதன் முதலாக அவர் பார்வை அங்கிருந்த இளம் பெண்ணொருத்தியின் மீது விழுந்தது. அவளுக்கு அருகிலேயே காலை நீட்டிக் கொண்டு ஒரு யுவன் ஒரு பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான். கம்பார்ட்மெண்டில் வேறு ஒரு ஈ, காக்கை கிடையாது. சிவகுரு கதவைத் திறந்து கொண்டு வருவதைக் கண்டதும் இருவரும் அவரைக் கூர்ந்து கவனித்தார்கள். பிறகு முன்போலவே படிப்பதில் ஈடுபட்டார்கள் இருவரும்.

சிவகுரு மற்றோர் பெஞ்சியின் மீது படுக்கையை விரித்துவிட்டு ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து கொண்டார். பழக்காரனைக் கூப்பிட்டு ஆப்பிள் பழங்கள் வாங்கிக் கொண்டார். இதற்குள் வண்டியும் கிளம்பி விட்டது. ஸ்டேஷன் காட்சிகள் ஒவ்வொன்றாக மறையலாயின.

வெளியே காரிருள்; வண்டிக்குள் ஒரு ஊசி விழுந்தால் கேட்கும் போல் அவ்வளவு நிசப்தம். சிவகுருவுக்கு கம்பார்ட்மெண்டுக்குள்ளேயே அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருப்பது அநாகரிகமாகப் பட்டது. படிக்கலாமென்றால் புத்தகமொன்றும் கொண்டுவரவில்லை. கடைசியில் சட்டைப் பையிலிருந்த பேனாக் கத்தியை எடுத்துப் பழத்தைச் சீவ ஆரம்பித்தார். பழத் துண்டுகளை நிதானமாகப் பக்கத்திலிருந்த தன் மேல் சவுக்கத்தில் வைத்தார்.

இதற்குள் யுவன் எழுந்திருந்து சோம்பல் முறித்துக் கொண்டான். பத்திரிகையை ஒருபுறமாக எறிந்து விட்டு "என்ன செய்து கொண்டிருக்கிறாய், சிவகாமி!'' என்றான்.

"நீ வாங்கிக் கொடுத்த நாவலைத்தான் படித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றாள் யுவதி.

அந்தக் குரல் திடீரென்று கம்பார்ட்மெண்டுக்குள் யாரோ வீணையின் தந்திகளை மீட்டி விட்டது போல் தோன்றியது. சிவகுருவுக்கு. அவளுடைய அழகிய உருவம் அவர் மனதில் பதிந்து விட்டது. வயது பதினேழு, பதினெட்டுக்கு மேல் இராது. நடுத்தரமான உயரம். அவள் இளைஞனை நோக்கிப் புன்னகை புரியும் போது அவள் கன்னங்களில் விழுந்த சுழல் போன்ற குழியையும் சிவகுருநாதன் கவனிக்கத் தவறவில்லை.

சிவகுரு "நீங்கள் எதுவரை போகிறீர்கள் ?'' என்று மெதுவாக ஒரு கேள்வியைப் போட்டு வைத்தார் இளைஞனை பார்த்து.

அவன் ஏதோ ஒரு ஊரின் பெயரைச் சொன்னான். அது

அவர் காதில் சரியாக விழவில்லை. அவர் கவனம் யுவதியின் அழகை ஆராய்வதில் சென்றிருந்தது.

"தாங்கள் எதுவரை போகிறீர்களோ? தங்களுக்கு என்ன வேலை?" என்று கேட்டான் இளைஞன். சிவகுரு எல்லாவற்றுக்கும் விவரமாகப் பதில் கூறினர்.

"தங்களுடைய தகப்பனர் பெயர்?"

"முருகேசம் பிள்ளை."

யுவனின் முகம் கொஞ்சம் மாறுதலடைந்தது. யுவதி நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

"தாங்கள் அவருடைய மகன் தானே?"

"ஆமாம்; அவர் தங்களுக்குத் தெரிந்தவரா?"

ஏதோ ஆலோசிப்பவன் போல் "இல்...லை" என்று கூறினன் இளைஞன். பிறகு, "பத்திரிகையில் பல நாட்களாக அவர் விலாசத்துடன் உள்ள விவாக விளம்பரமொன்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். பெண் தேடுவது உங்களுக்காகத்தானே?" என்று கேட்டான்.

"அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்"

"தங்களைச் சந்தித்தது பற்றி ரொம்ப சந்தோஷம். என்னுடைய நண்பர் ஒருவர் தன் பெண்ணைத் தங்களுக்கு விவாகம் செய்து கொடுக்க விரும்புகிருர். அவர் எனக்கு மிகவும் ஆப்த நண்பர். இந்த சம்பந்தம் நிலைத்தால் நாம் இருவரும் எப்பொழுதுமே நண்பர்களாயிருக்கலாம்" என்று ஆர்வம் ததும்பும் குரலில் கூறினன் இளைஞன்.

"ஓகோ, அப்படியா? இந்த விவாக விளம்பரம் காரணமாக என் பெயர் பிரசித்தமாகி விட்டது போலிருக்கிறதே" என்ருர் சிவகுருநாதன்.

"ஏன் அப்படி?"

"நான் என்னத்தைச் சொல்ல? அந்த விளம்பரம் என் விருப்பத்திற்கு விரோதமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. நான் மறுபடி விவாகம் செய்து கொள்ளவே விரும்பவில்லை. என் தீர்மானம் என் நண்பர்கள் எல்லோருக்கும் தெரியும். ஆண்கள் புனர் விவாகம் செய்து கொள்வது தவறு என்பது என் அபிப்பிராயம்."

"அப்படியானல் மறுவிவாகம் செய்து கொள்ளும் விருப்பம் தங்களுக்கு இல்லையா?" என்று ஆவலுடன் கேட்டான் அவன்.

"ஒருக்காலும் இல்லை."

யுவன் சற்றே ஏமாற்றமடைந்தவன் போல் காணப்பட்டான். அப்புறம் அவன் அவருடன் பேசவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு "சிவகாமி!" என்று கூப்பிட்டான்.

யுவதி - கனவுலகினின்றும் விழித்தவள் போல் திடுக்கிட்டு 'என்ன அண்ணு?' என்ருள்.

இத்தனை நேரமும் அவள் ஜன்னலுக்கு அப்புறம் முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தாள்.

'பெயரில்தான் எவ்வளவு இனிமை! சிவகாமி! குணமும் அதேபோல் இனிதாக இருந்தால்?.........'என்று சிவகுருவின் மனம் பலவாறு எண்ணமிட்டது. அந்தப் பெண் தன் உள்ளத்தை எவ்வாறு கவர்ந்தாள் என்பதே அவருக்குப்



பெரிய புதிராக இருந்தது. அவர்களுடைய விலாசத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணினார். இரவு மணி பதினொன்றுக்கு மேல் ஆகிவிடவே எப்படியோ தூக்கக் கலக்கத்தில் மறந்து விட்டார். இதற்குள் இளைஞனும் யுவதியும் இறங்க வேண்டிய ஸ்டேஷன் வரவே அவ்விருவரும் இறங்கிப் போய் விட்டார்கள். சிவகுரு கண் விழித்துப் பார்த்த சமயம் அவர்களைக் காணவில்லை, தம்முடைய அறிவீனத்தைக் குறித்துப் பச்சாதாபப் படலானார்.

* * *

வீட்டிற்குச் சென்றதும் தன் தகப்பனார் தனக்காகப் பெண் பார்த்து வைத்திருக்கிறாரென்றும் விஷயம் முக்கால்வாசி முடிந்தாற் போல் தான் என்றும், தன் சம்மதத்தைக் கேட்பதற்காகத்தான் தந்தி கொடுத்துத் தன்னை வரவழைத்திருக்கிறார் என்றும் தாயார் மூலம் தெரிந்து கொண்டார்.

"இதோ பார்! இனிமேல் நீ எந்த விதத்திலும் 'முடியாது' என்ற பேச்சை மட்டும் எடுக்கக் கூடாது. தெரியுமா? இப்பொழுது வந்திருக்கும் வரன் எங்களுக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. வயது பதினேழு ஆகிறதாம். இந்த வருஷம் 'இண்டர் மீடியட்' எழுதப் போகிறாளாம். இரண்டே பெண்கள்தானாம். நன்றாகச் செய்வார்கள். நீ போன மூன்றாம் நாள்தான் பெண்ணின் தகப்பனார் கடிதம் எழுதினார். பெண் மூக்கும், முழியுமாக இருக்கிறாள்......" என்று கூறியவாறு எழுந்து சென்று, கையில் ஒரு

போட்டோவுடன் திரும்பி வந்தாள். போட்டோவை மகனிடம் காட்டி "இதோ நீயே பார்; இந்தப் பெண்ணையும் தட்டிக் கழித்தாயோ, அப்புறம், நான் காசியைப் பார்க்கப் போய்விடுவேன். அப்புறம் அப்பாவும், பிள்ளையும் எக்கேடு கெட்டுப் போங்கள். சொல்லி விட்டேன்" என்று மிரட்டிவிட்டுச் சென்றுள்.

"இதென்ன! தான் காண்பது கனவா? அல்லது பிரமையா? போட்டோவில் இருப்பவள் தான் ரயிலில் சந்தித்த பெண்ணல்லவா?" அவர் மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது.

"அம்மா!" என்று கூவினர் அவர்.

"என்னடா அப்பா?" என்று கூறிக்கொண்டே அவர் தாயார் திரும்பி வந்தாள். சிவகுருவின் முகத்தில் தோன்றிய ஆச்சரியத்தின் சாயையைக் கண்டு பிரமித்தாள்."

"பெண் பெயர் என்ன? என்று கேட்டார் சிவகுரு.

"சிவகாமி!" என்று பளிச் சென்று பதில் வந்தது.

"இந்தப் பெண்ணை நேற்றுத் தான் அம்மா பார்த்தேன்?"

"எங்கே?"

"இரயிலில் அம்மா; அந்தப் பெண்ணின் சகோதரன் கூட வந்திருந்தான். இடையில் எதோ ஒரு ஸ்டேஷனில் அண்ணனும் தங்கையுமாக இறங்கிப் போய் விட்டார்கள், அம்மா."

"உனக்குச் சம்மதம் தானே? பெண் வீட்டார் இந்த மாதக் கடைசிக்குள் முகூர்த்தம் வைக்க வேண்டும் என்கிருர்கள்; என்ன சொல்லுகிருய்?"

சிவகுருநாதனுக்கு ஆனந்தத்தால் தலைகால் புரியவில்லை. "உனக்குச் சம்மதமானல் சரி" என்று பதில் கூறி விட்டுச் சரேலென்று அறையை விட்டு வெளியில் சென்ருர்.

இந்தச் சமயம் 'போஸ்ட்!' என்ற குரலைக் கேட்டு விழுந்தடித்துக் கொண்டு வாசல் பக்கம் ஓடினர் சிவகுரு. சிவகுருவின் தந்தைக்குக் கடிதம் வந்திருந்தது. அது வருமாறு:—

"தங்கள் கடிதம் கிடைத்தது. என்ன செய்வது? 'நாம் ஒன்று நினைக்க தெய்வமொன்று நினைத்தது' என்பது இந்த விஷயத்தில் தான் பொருத்தமாக இருக்கிறது. தங்களிடம் நான் விஷயத்தை விளங்கக் கூறி விடுவதே நலமென நினைக்கிறேன். என் மகன் தன் தங்கையுடன் ஒரு கல்யாணத்திற்குப் போய்த் திரும்பி வந்துகொண்டிருந்த போது, அகஸ்மாத்தாக ரயிலில் தங்கள் மகனைப் பார்க்க நேர்ந்ததாம். பேச்சுவாக்கில், தங்கள் மகன் ஆண்கள் புனர் விவாகம் செய்து கொள்வது தவறென்று கருதுகிருரென்றும், அவர் விருப்பத்திற்கு விரோதமாகக் கல்யாணம் செய்து கொள்ளும்படிக் கட்டாயப் படுத்தப்படுகிருர் என்றும் தெரிய வந்ததாம். நிலைமை இந்த மாதிரி இருப்பதால் பிள்ளைக்கு விருப்பமில்லாமல் ஒரு பெண்ணை அவன் கழுத்தில் கட்டிக் கஷ்டப்படுத்துவது சரியல்ல. அதனல் பெண்ணுக்குப் பல கஷ்டங்கள் நேரிடலாம். எனவே, விவாகம் தடைப்பட்டதே மேலென்று நினைக்கிறேம். என்ன செய்வது? பிராப்தம் அவ்வளவு தான்!"

சிவகுருவுக்கு உலகமே சுழல்வது போலிருந்தது. அவர் கையிலிருந்த கடிதம் நழுவிக் கீழே விழுந்தது.

(ஹிந்திக் கதையைத் தழுவியது.)

நாளைய தினம்

"முகுந்தன்"

மூன்றும் அத்தியாயம்

தந்தி வந்தது

அன்று இரவு எட்டு மணி இருக்கும். பாலுவும் நானும் வீடு வந்து சேர்ந்தோம். என் மனதில் நிம்மதியே இல்லை; பித்துக் கொண்டவன் போல் இருந்தேன். அன்று சாயந்திரம் நடந்த நிகழ்ச்சிகளே திரும்பத் திரும்ப என் மனக் கண்முன் ஓடிக்கொண்டிருந்தன. எனக்குச் சாப்பாடு கூட வேண்டியிருக்கவில்லை. இருந்தாலும் பிறருடைய மனதில் ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டுவிடக் கூடாதே என்பதற்காகச் சாப்பிட்டேன். உட்கார்ந்தாலும் நின்றாலும் நடந்தாலும் ராட்டின ஊஞ்சலில் சுற்றுவது போலவே இருந்தது எனக்கு. 'மேனகா, மேனகா' என்று அந்த அழகான பெயரை எழுத்தெழுத்தாக என் உள்ளம் உச்சரித்துக் கொண்டிருந்தது. அவள் மயக்கம் தெளிந்து என்னைப் பார்த்த காட்சி—அந்த மருண்ட கண்கள்—காற்றில் பறந்து நெற்றியில் விழுந்திருந்த கேசப் பிரிகள்—அழிந்த குங்குமத் திலகம்—நழுவி விழுந்திருந்த மேலாடை இவ்வளவையும் நான் எப்படி மறக்க முடியும்?

ஒரு பெண் எவ்வளவுதான் அழகியாக இருந்தாலும் அவள் ஏதேனும் ஓர் உணர்ச்சியால் தூண்டப்படும் பொழுதுதான் அவளுடைய அழகை நாம் பூரணமாக அனுபவிக்க முடியும். அன்றோ அவளிடம் நான் ஓர் உணர்ச்சியை மட்டும் காணவில்லை; பயம், வெட்கம், ஆவல், ஆர்வம், ஆனந்தம்—இத்தனை உணர்ச்சிகளையும் கண்டேன். ஒவ்வொன்றும் ஒவ்வொரு அழகு; இவ்வளவையும் நான் மறுபடியும் கண்டு ஆனந்திக்க அவளை எத்தனை தடவை வேண்டுமானாலும் ராட்டினத் தொட்டிலில் ஏற்றி மயக்கமடையச் செய்யலாம் என்று தோன்றியது.

அன்றிரவு சாப்பிட்டு முடிந்ததும் சட்டைப் பையிலிருந்து நான் மெதுவாக என் 'டைரி'யை எடுத்தேன். அதைப் பிரித்து ஒரு பக்கத்தில் 'மேனகா' என்று எழுதினேன். ஒரு பெண்ணின் பெயரை என் குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்து கொண்டது அதுதான் முதல் தடவை. ஏன்? என் மனதிலும் பதிவு செய்து கொண்டது அதுதான் முதல் தடவை. வாழ்க்கையில் நான் இன்னும் எத்தனை பெண்களின் பெயரை என்னுடைய டைரியில் பதிவு செய்து கொள்ளப் போகிறேனோ?

டைரியில் பெயர்கள் இருக்கலாம்; மனதில் அவர்களுடைய நினைவு இருக்கலாம். ஆனால் வாழ்க்கையில்—கிரியாம்சையில் இறங்கும்போது அவைகளெல்லாம் என்னை எங்கு கொண்டு போய் விடுமோ?

டைரியில் சிறிய எழுத்தில் எழுதிய அந்தப் பெயரையே நான் நெடுநேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். மேனகாவின் அழகிய உருவம் அந்த எழுத்துக்களிடையே பலவித முக பாவங்களைக் காட்டி மறைந்தது போலிருந்தது எனக்கு!

டைரியை மூடி மறுபடியும் சட்டைப் பைக்குள் வைக்கப் போனேன். சட்டென்று எனக்கு விஜயாவின் ஞாபகம் வந்தது. என் டைரியில் எனக்கு அறிமுகமான ஒவ்வொருவருடைய பெயரையும் ஞாபகத்திற்காக எழுதி வைத்துக் கொண்டிருக்கிறேன். ஏன் விஜயாவின் பெயரையும் எழுதி வைக்கக் கூடாது?

மேனகா அழகியாக இருக்கலாம்; என்னை வசீகரித்தவளாக இருக்கலாம். ஆனால் விஜயாவும் அழகிதானே? அவள் என் மனதை வசீகரிக்காவிட்டாலும் பிரியத்தோடு பழகக் கூடிய நல்ல பெண்ணாகத்தானே அவள் தென்பட்டாள்? அவளுடைய பெயரும் என் டைரியில் இருக்க வேண்டியது தான்.

மறுபடியும் டைரியை எடுத்து 'மேனகா' என்ற பெயருக்குக் கீழே 'விஜயா' என்று குறித்துக் கொண்டேன். அதற்கடியில் 'சாரதா' என்றும் குறித்துக்கொள்ள நான் மறக்கவில்லை!

சாரதாவின் பெயரை எதற்காகக் குறித்துக் கொண்டோம் என்பது எனக்கே வியப்பாகத்தான் இருந்தது. அவள் பன்னிரண்டு வயதே நிறைந்த சிறு பெண்ணாக இருந்தாலும் அவளது குறுகுறுப்பான பார்வையில் ஏதோ ஒரு மந்திர சக்தி இருந்ததாகத்தான் எனக்குப் பட்டது. மேலும், மேனகாவின் பெயரும் விஜயாவின் பெயரும் என் டைரியில் இடம் பெற்றிருக்கும்போது, அங்கு சாரதாவின் பெயர் இல்லாமலிருப்பது எனக்கு அவ்வளவு உசிதமாகப் படவில்லை. ஒரே சமயத்தில் நான் பார்த்த இந்த மூன்று பெண்களும் என் வாழ்க்கையில் என்றும் ஞாபகத்தில் இருக்க வேண்டியவர்களாகத் தான் எனக்குத் தோன்றியது. இந்த மூவரில் ஒருவருக்கொருவர் வயதிலும், அழகிலும், குணத்திலும் வித்தியாசமுடையவர்களேயாயினும், இம் மூவரும் என்னால் மறக்க முடியாத உருவங்களாகி விட்டனர்.

என் கண்கள் 'டைரி'யில் வரிசைக் கிரமமாக எழுதப்பட்டிருந்த 'மேனகா, விஜயா, சாரதா' என்ற பெயர்களையே இமை கொட்டாமல் பார்த்தவண்ண மிருந்தன. இந்நிலையில், நான் உட்கார்ந்திருந்த நாற்காலிக்குப் பின்புறமாக வந்து பாலு நிற்பதை நான் கவனிக்கவேயில்லை.

பின்னுலிருந்த படியே அவன் டைரியிலுள்ளதை 'மேனகா, விஜயா, சாரதா' என்று உரத்த குரலில் படித்து விட்டு, "என்ன அண்ணு, இது? இவர்களுடைய பெயர்களையெல்லாம் டைரியிலே எதற்குக் குறிக்கணும்? வண்ணுன் உருப்படியைக் குறித்தாலும் பிரயோசனமுண்டு!" என்ருன்.

"வண்ணுன் உருப்படியெல்லாம் வேருெரு பக்கத்திலே குறித்திருக்

கிறேன்; இந்தப் பெயர்களை யெல்லாம் என்னுடைய ஞாபகத்திற்காகக் குறித்துக் கொள்கிறேன்!'' என்றேன்.

'' எங்கள் அப்பா டைரியிலே ஞாபகத்துக்காக இப்படியெல்லாம் பெண்களின் பெயர்களை எழுத மாட்டார். வண்ணான் உருப்படி, நெய்க் கணக்கு இதெல்லாம்தான் எழுதுவார். அம்மா ஒழிந்த பொழுது அந்த டைரியிலேயே 'ஸ்ரீராம ஜெயம்' எழுதுவாள். நான் கூட அப்பா டைரியிலேதான் 'எனக்குக் கிட்டு நாலு பலப்பம் தரணும்'னு எழுதி இருக்கேன்!'' என்றான்.

'' சரிதான்......'' என்றேன் எங்கோ ஞாபகமாக.

ஆனால் பாலு என்னை இலேசில் விடுகிறவனாயில்லை. அவனுக்குச் சாயந்திரத்திலிருந்து என் மீது அசாத்தியக் கோபம். அவனைக் கன்னத்தில் அடித்த மேனகாவை ஓராணுக் கொடுத்து ராட்டின ஊஞ்சலில் ஏற்றிக்கொண்டது தவறு. அதோடுமட்டுமல்ல; அவளோடு சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண் டிருந்தது இன்னும் பெரிய தவறு. இவைகளை என் மீது உள்ள கோபத்தில் அவன் தன் தாயாரிடம் வந்து சொல்லாமலிருக்க வேண்டுமே என்ற திகில் எனக்கு ஆரம்பத்திலேயே இருந்தது. இதை அவன் வீட்டில் சொல்லாமலிருந்தால் மறுநாளும் அவனை ராட்டின ஊஞ்சலுக்கு அழைத்துப் போவதாகச் சொன்னேன். இந்த உறுதிமொழியின் பேரில் அவன் எனக்குச் சற்று மனமிறங்கினான். இருந்தாலும் பாலுவுக்கு நான் மேனகாவிடம் கொண்ட மோகம் துளிக்கூடப் பிடிக்கவில்லை. அவன் என் மனதிலிருந்த ஆசையைச் சரியாகக் கண்டு பிடித்து விட்டவன் போல், ''எனக்குத் தெரியும், உனக்கு அவளைக் கல்யாணம் செய்து கொள்ளணும்னு ஆசை, இல்லையா?'' என்று ஆரம்பத்திலேயே கேட்டு விட்டான்.

விவாகத்தின் பூரண தத்துவமும் தெரியாமல் மகா மேதைகளெல்லாம் திணறும்போதுஇவன் மணவாழ்க்கையின் மர்மத்தைப் பற்றி எவ்வளவு தூரம் தெரிந்து கொண்டிருக்கப் போகிறான்? ஆனால் மண வாழ்க்கையின் உள் தத்துவம் எப்படிப்பட்டதாயிருப்பினும் வாழ்க்கையின் அடிப்படையான 'கணவன்-மனைவி'என்ற துவந்துவம் குழந்தைகளின் மனதில் கூடப் பதிந்து விடுகிறது. என்னைப்போன்ற வாலிப வயதுடைய ஒருவன் ஒரு பெண்ணைப் பார்த்துச் சிரித்தால்—நெருங்கி நின்று பேசினால்—அறிவில் தெளிந்த பெரியோர்களின் மனதில் கூட விகல்பமும் விஷமத்தனமான நினைப்பும்தான் முதலில் தோன்றும். அவ்வளவு தூரம் விஷய ஞானம் இல்லாத சிறு பையன் இத்தகைய காட்சியைக் கண்டால் அவன் மேளங்கொட்டித் தாலி கட்டும் படாடோப வெளிச் சடங்கைத்தானே தன் பச்சை உள்ளத்தால் படம் பிடித்துப் பார்க்க முடியும்?

நான் அவனுடைய கேள்விக்கு அந்தச் சந்தர்ப்பத்தில் 'ஆமாம்' என்று தலையசைக்கத்தான் வேண்டியிருந்தது. ஆனால்

அவனுக்கு நான் மேனகாவை விவாகம் செய்து கொள்ள நினைப்பதில் துளிக்கூட விருப்பமில்லை. நான் சாரதாவைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் விஜயாவை மணம் செய்து கொள்ள வேண்டும் என்பது அவனுடைய விருப்பம். அவனுடைய விருப்பத்திற்கு நான் இணங்க முடியுமா?

சாரதா அவனுடைய பள்ளிக்கூடச் சினேகிதி. அவளைப் பற்றி அவனுக்கு நல்ல அபிப்பிராயம். அன்று சாயந்திரம் வீட்டுக்கு வரும்போது வழியெல்லாம் அவளைப் பற்றித்தான் வர்ணித்துக் கொண்டு வந்தான். என்னுடைய நினைவெல்லாம் மேனகாவின் பேரிலேயே இருந்ததால் அவன் வார்த்தைகளுக்கு நான் செவி சாய்க்கவில்லை. இப்பொழுது அவன் என்னை நாடி வந்திருப்பதும் தன் அனுபவத்தில் கண்ட சாரதாவின் நல்ல குணங்களை வர்ணிக்கத்தான் என்று எனக்குத் தோன்றியது. மெதுவாக அவனிடமிருந்து விடுதலை பெற நினைத்தேன். நல்ல வேளையாக அவனுடைய தாயாரே அவனைக் கூப்பிட்டாள். போய் விட்டான்.

நான் பாயை விரித்துப் படுத்துக் கொண்டேன். எனக்குத் தூக்கம் வரவில்லை. என் நினைவெல்லாம் மறுநாள் மேனகாவைச் சந்திக்க முடியுமா? எங்கே சந்திக்கலாம்? மறுநாளும் ராட்டின ஊஞ்சலுக்கு வருவாள் என்பது என்ன நிச்சயம்? இன்று அவள் பட்ட அனுபவத்தில் மறுபடியும் ராட்டின ஊஞ்சல் பக்கம் வர அவளுக்குத் துணிவு ஏற்படுமா? எனக்கு ஒன்றும் புரியவில்லை.

அவள் வீடு எங்கே? சாரதா பக்கத்துத் தெருவிலிருப்பதாக பாலு சொன்னான். சாரதாவோடுதானே அவள் வந்தாள்? ஆகையால் சாரதாவின் வீட்டிற்குப் பக்கத்தில் தான் அவள் வீடும் இருக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் பாலுவின் மூலமாகவே அறிந்து கொள்ள வேண்டும்.

சிறுவர்கள் சித்திரக்கதைப் புத்தகம்
பின் பக்கம் அட்டையில் ஸ்கேல் இருக்கிறது

வாடாமலர் பதிப்பகம் மாம்பலம்...சென்னை.17.

இந்த முடிவுக்கு நான் வந்ததும் அப்படியும் இப்படியுமாகப் புரண்டு புரண்டு படுத்தேன். மேனகாவின் நினைவிலேயே தூக்கத்திற்கு அடிமையானேன்.

திடீரென்று யாரோ என் முதுகில் அறைந்து எழுப்புவது போல் இருந்தது. வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தேன். சித்தப்பா நடுங்கும் கையில் ஏதோ ஒரு கடிதத்தை வைத்துக் கொண்டு நின்ருர். அவருக்குப் பக்கத்தில் சின்னம்மா அரிக்கன் விளக்குடன் 'கோ'வென்று அழுது கொண்டு நின்ருள். நான் கண்களைத் துடைத்துக் கொண்டு பயத்தோடும் பதட்டத்தோடும், "என்ன?" என்று விசாரித்தேன்.

"என்னவா! அண்ண உன்னையும் என்னையும் அனதையாக விட்டுவிட்டுப் போயிட்டாண்டா! எமதூதன் மாதிரி இந்தத் தந்தி வந்திருக்குடா!" என்று அலறிக்கொண்டே, தந்திக் காகிதத்தைத் தம் கையிலிருந்து நழுவ விட்டார். அடுத்த நிமிஷம் அவர் கீழே உட்கார்ந்து விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டார்.

நடுங்கும் கைகளுடன் தந்தியை எடுத்தேன். அதைப் படிப்பதற்குள் என் கண்களில் நீர் பொங்கிப் பெருக்கெடுத்தது. 'தகப்பனர் இறந்து விட்டார்' என்ற செய்தியை அறிந்த எந்த மகனின் நெஞ்சம்தான் நெகிழாது? நானும் அப்படியே குப்புற விழுந்து விக்கி விக்கி அழுதேன்.

நான்காம் அத்தியாயம்

பெஜவாடா வாசம்

மறுநாள் காலை வண்டியிலேயே சித்தப்பாவின் குடும்பத்தினரோடு நான் என் சொந்த ஊருக்குத் திரும்பினேன். என் தகப்பனருக்குச் செய்ய வேண்டிய ஈமக் கிரியைகளையெல்லாம் செய்து முடித்ததும் குடும்பப் பொறுப்பு என் தலை மீது விழுந்தது. எங்கள் குடும்பத்தில் என்னேடு இருந்தவர்கள் விவாகமாகாத ஒரு சகோதரியும் என் தாயாருமேயானலும் அவ்விருவரையும் நான் சம்பாதித்துப் போஷிக்க வேண்டியிருந்தது. ஆகவே, நான் படிப்பை எஸ். எஸ். எல். சி. யோடு முடித்துக் கொண்டு உத்தியோகத்திற்காகப் பிரயத்தனம் செய்யலானேன்.

என் சித்தப்பாவின் சிபாரிசினல் வட இந்திய முதலாளி ஒருவரின் வியாபார ஸ்தாபனத்தில் எனக்கு வெகு சீக்கிரத்திலேயே வேலை கிடைத்தது. ஆனல் அந்த உத்தியோகம் சொந்த ஊரில் வசிக்கத் தகுதியானதாக இல்லை. பெஜவாடாவிலுள்ள ஒரு கிளை ஸ்தாபனத்தில் என்னைக் குமாஸ்தாவாக இருக்கும்படி முதலாளிகள் பணித்தார்கள். என் குடும்பத்தினருடன் நான் பெஜவாடாவுக்குக் கிளம்பினேன். ஊரை விட்டுக் கிளம்பும்போது என் மனம் துடித்தது. ஒரு தடவையாவது குடந்தைக்குப் போய்

'மேனகா'வைப் பார்த்துவிட்டு வரமாட்டோமா? என்றாவது ஒரு நாள் அவளை மறுபடியும் பார்த்து நம் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ள மாட்டோமா?—இதே சிந்தனையில் ஒவ்வொரு நாளும் இரவு நெடுநேரம் வரை எனக்குத் தூக்கமே வருவதில்லை. அவளை நினைந்து நினைந்து உருகுவேன். சில சமயம் டைரியைப் பிரித்து 'மேனகா, விஜயா, சாரதா' என்று குறித்திருக்கும் பக்கத்தைப் புரட்டிப் பார்த்துப் பெருமூச்சு விடுவேன். ஆரம்பத்தில் எனக்கு மேனகாவின் நினைவு மாத்திரம் இருந்தாலும் அதைத் தொடர்ந்து விஜயாவின் நினைவும் சாரதாவின் நினைவும் வரும். மேனகா என் கையிலிருந்து துரதிருஷ்டவசமாக நழுவி விட்டாலும் விஜயா இருக்கிறாள் என்று ஒரு சமாதானம் ஏற்படும். விஜயாவும் கிடைக்கா விட்டால்? சாரதா......!

சாரதாவா! இன்னும் அவளுக்குப் பன்னிரண்டு வயதுகூட ஆகவில்லை. குழந்தை போன்ற அவள் பேச்சிலும் பார்வையிலும் நம்மை வசீகரிக்கும் அழகு ஏதேனும் இருக்கிறதா? இல்லா விட்டால் என்ன? இன்று மொட்டாயிருப்பது நாளை மலராதா? பெண்களின் அழகும் வளர்ச்சியும் இன்று பார்த்தபடியே நாளையும் இருப்பதில்லையே! இன்னும் இரண்டு மூன்று வருஷங்கள் கழித்து அவள் மேனகாவை விட அழகியாக இருக்கக் கூடாதா?

போகட்டும்; இந்த மூன்று பெண்களைத் தவிர உலகத்தில் வேறு பெண்களா இல்லை?

இந்தக் கேள்வியைக் கேட்டு என் மனதே என்னைச் சோதிக்க நினைத்தது.

உலகத்தில் எத்தனையோ பெண்கள் உண்டு. ஆனால் என் இளமையின் இன்ப நினைவில் முதன் முதல் விதை ஊன்றியவள் மேனகா. அதற்கப்புறம் விஜயா. அப்புறம் சாரதா.........

இதைப்போல் இன்னும் காந்தா, ஹேமா, நளினி என்ற பெயர்களுடைய பெண்கள் கிடைத்தாலும் என் டைரியில் குறித்துக் கொள்ள இடமா இல்லை?—இல்லாமலென்ன? இந்த டைரி தீர்ந்து விட்டால் இன்னொரு டைரி கூட வாங்கிக் கொள்ளலாமே!

அப்படி யென்றால் என் சித்தப்பா தம் டைரியில் வண்ணான் கணக்கு எழுதுவதற்கும், என் சித்தி ஸ்ரீராமஜயம் எழுதுவதற்கும், பாலு கிட்டுவிற்கு நாலு பலப்பம் கொடுத்ததை எழுதுவதற்கும் நான் அழகான பெண்களின் நாமதேயங்களை எழுதுவதற்கும் ஏதேனும் வித்தியாசம் உண்டா?

உலகத்தில் உயிர்வாழ நினைப்பவன் அரிசி கிடைக்கா விட்டால் சோளத்தையோ, அல்லது வேறு எதையோ சாப்பிட்டு ஜீவித்திருக்கத்தான் பார்க்கிறான். அம்மாதிரி சமயங்களில் அவன் தத்துவத்தையும் லட்சியத்தையும் பெரிதென நினைப்பதில்லை. பசிக்கின்ற நேரத்திற்கு அவனுக்கு ஏதேனும் வேண்டும். பசியைப் போலத்தான் உணர்ச்சி. இந்த உணர்ச்சி தென்றலைப் போலிருந்தால் காதலாக மலரலாம். புயலாக இருந்தால் அது மிருக உணர்ச்சியாக மாறலாம். புயலிடையே அகப்பட்ட துசந்தனமரமாயிருந்தாலென்ன, கருவேல மரமாயிருந்தாலென்ன—புயலுக்குப் பலியாக வேண்டியதுதானே? காதல் புனிதமானதுதான். ஆனால் அது யோகிகள் காணும் மெய்ஞ்ஞானம் போல லட்சியவாதிகள் காணும் இன்பம். ஆனால் உணர்ச்சியில் உருண்டோடும் சக்கரமாய் இருக்கும் நான் அந்தக் காதலை என் வாழ்வின் நிலைக்களமாக வைத்து ஜீவிக்க முடியுமா என்பது சந்தேகந்தான்.

பெஜவாடா போன்ற ஊர்களில் தமிழ் நாட்டவர் போய் வாழ்வது சிறிது சிரமம். பல அசௌகரியங்களுக்கு நான் அங்கே ஆளாக வேண்டியிருந்தது. ஆரம்பத்தில் எங்கள் குடும்பத்தை ஓரிடத்தில் ஆரம்பிப்பது கடினமாய் இருந்தது. என் தாயார் மிகவும் ஆசாரப் பாங்குடையவள். அந்த ஊரில் அவள் தன் ஆசார அனுஷ்டானங்களையெல்லாம் சிறிது தளர்த்திக் கொள்ள வேண்டியிருந்தது. என் மனதில் எவ்வளவோ போராட்டமும் நிம்மதிக் குறைவும் இருந்தாலும் உத்தியோக ஸ்தாபனத்தில் நல்ல பெயர் எடுத்தேன்.

எப்படியோ ஒரு வருஷம் ஓடி விட்டது. நாளடைவில் பெஜவாடா சொந்த ஊரைப் போலாகி விட்டது. எனக்கு உத்தியோக உயர்வும் சம்பள உயர்வும் கிடைத்தன. சம்பளம் உயர்ந்ததும் என் தாயார் என் தங்கை லலிதாவுக்குச் சீக்கிரத்திலேயே கல்யாணம் செய்து விட வேண்டும் என்று துடித்தாள். லலிதாவுக்கு வயது பதினாறுக்கு மேலாகி விட்டது; கல்யாணம் செய்துவிட வேண்டியதுதான். ஆனால் என் தாயார் என்னுடைய கல்யாணத்தைப்பற்றி நினைக்காமல் முதலில் லலிதாவின் கல்யாணத்தைமுடிக்கப் பதட்டப்

படுவானேன்? சுயநலத்தினால் எனக்கு ஏற்பட்ட பொருமையாக இதைச் சொல்லக் கூடாது. விருப்பத்தின் துடிப்பினால் எழுந்த எண்ணம். தாயாரின் தூண்டுதலினால் லலிதாவிற்கு வரன் தேடுவதில் முனைந்தேன். அவள் அதிர்ஷ்டமோ, எங்கள் பொருளாதார மதிப்போ எந்த வரனும் அவ்வளவு சீக்கிரத்தில் கிடைக்கவில்லை.

இதற்கு மத்தியில் பெஜவாடாவில் எவ்வளவோ அழகிகளை நான் பார்க்க முடிந்தது. அவர்களைப் பார்க்கப் பார்க்க என் கண்களும் மனமும் சொக்கிச் சுழன்றன. ஆனால் ஆசை மட்டும் இருந்தால் போதுமா? அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ளுவதற்குத் துணிவு வேண்டாமா?—எனக்கு எந்த வழியும் புலனாகவில்லை.

நல்ல வேளையாக, பெஜவாடாவில் எனக்கு உற்ற நண்பன் ஒருவன் கிடைத்தான். அவன் பெயர் கணபதி—தமிழ் நாட்டைச் சேர்ந்தவன்தான். அவனிடம் ஒருநாள் என் மனதில் மண்டிக் கிடந்த துக்கத்தையெல்லாம் வாய்விட்டுச் சொன்னேன். அவன் எனக்கு ஆறுதல் சொன்னான். கடைசியில் அவ்வூரிலுள்ள கங்கம்மா என்னும் தாசியைப் பற்றிப் பிரமாதமாக வர்ணித்தான். அவனுடைய வர்ணனை கங்கம்மாவின் பெயரையும் என் டைரியில்

ஆபரேஷன் இல்லை; பத்தியமில்லை,

உத்ரதிவாதத்துடன் சுகப்படுத்தப்படும்

மூலம், பவுத்திரம், எத்தனை முளைகள், எத்தனை துவாரங்கள், சீழ், ரத்தம் வந்து கொண்டிருந்தாலும் கவலை வேண்டாம். நேரில் வந்து வைத்தியம் செய்துகொள்ள வேண்டும். பெண்களுக்கு பெண்களைக் கொண்டே சிகிச்சை செய்யப்படும். ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசு பெற்றவர்.

கந்தன் மூலபவுத்திர ஆஸ்பத்திரி

137, தங்கசாலைத் தெரு, — சௌகார்பேட்டை, சென்னை-1.

குறித்துக்கொள்ளும்படி தூண்டியது. அவனிடமே அவளுடைய தெரு விலாசத்தையும் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அன்று முதல் அடிக்கடி அந்தத் தெருவழியாக போவதும் வருவதுமாக இருந்தேன். ஆனால் அந்தக் கங்கம்மா என்ற ரூப சுந்தரியை ஒரு முறையாவது என் கண்கள் காணக் கொடுத்து வைக்கவில்லை.

ஒருநாள் என் பையில் கொஞ்சம் பணமிருந்தது. அந்தப் பணத்தைக் கங்கம்மாவைப்பரிச்சயம் செய்து கொள்ளும்வகையில் செலவிட நினைத்தேன். ஒரு நாள் இரவு மணி ஒன்பது இருக்கும். பகல் வேளையில் குறிப்பாக வீட்டைப் பார்த்து வைத்திருந்ததால் இரவில் சுலபமாக அந்த வீட்டைக் கண்டுபிடிக்க முடிந்தது. ஏனோ தெரியவில்லை—அந்த வீட்டை நெருங்கியதும் நெஞ்சு பட பட வென்று அடித்துக் கொண்டது. எப்படியோ சமாளித்துக் கொண்டு அந்த வீட்டின் தாழ்வாரத்திற்கு வந்து விட்டேன். தாழ்வாரத்தில் ஒரு கிழவி உட்கார்ந்திருந்தாள். அவள் என்னைக் கண்டதும் எழுந்து ஏதோ தெலுங்கில் சொன்னாள். நானும் எனக்குத் தெரிந்த தெலுங்கில், "கங்கம்மா எக்கட?" என்றேன். அவள் மாடிப்படியைக் காட்டினாள். நான் தயங்கியபடியே மாடிப் படியில் ஏறினேன். அந்தக் கிழவியும் என் பின்னால் வந்தாள். மாடிப்படி ஏறியவுடன் கிழவி எனக்கு முன்னால் வந்து வழிகாட்டி அழைத்துப் போனாள். அவள் என்னை ஓர் அறையில் விட்டுவிட்டு வெளியே சென்றாள். நான் வேறு ஏதோ ஒரு உலகத்துக்கு வந்து விட்டவன் போல் அந்த அறையில் நின்ற இடத்தில் நின்றபடி சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். திடீரென்று ஓர் இனிமையான குரல் கேட்டது. எனக்கு எதிரே ஒரு பெண் வந்து நின்றாள். அவளுக்கு வயது பதினாறு, பதினெட்டா—அல்லது பத்தொன்பதா என்று முடிவாகச் சொல்ல முடியாது. பார்ப்பதற்கு அழகாக இருந்தாள். அதற்கேற்றாற் போல் அலங்காரமும் செய்துகொண்டிருந்தாள். அவள் என்னை வரவேற்கும் தோரணையில் ஏதோ தெலுங்கில் சொன்னாள். தெலுங்கும் ஓர் அழகான மொழிதான் என்று அப்பொழுதான் எனக்கு விளங்கியது. நானும் தமிழ் கலந்த தெலுங்கில் ஏதோ சொன்னேன். எங்கள் இருவருடைய சம்பாஷணையும் அவ்வளவு முக்கியமானதா யிருக்க வில்லை. ஏனெனில் என் விருப்பத்தை என்னுடைய கண்கள் அவளிடம் சொல்லி விட்டன. அதே மாதிரி அவளும் தன் சம்மதத்தைத் தன்னுடைய கண்களாலேயே தெரிவித்து விட்டாள். அடுத்த நிமிஷம் என்சட்டைப் பையிலிருந்த ஐந்து பத்து ரூபாய் நோட்டுகள் அவள் கைக்குப் போயின. அவள் என்னைத் தன் விழுங்கும் விழிகளால் பார்த்துக் கொண்டே ஒவ்வொரு நோட்டாக எண்ணினாள். நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட மனமில்லாதவள் போல் கிழவி வந்து எங்களுக்கிடையே நின்றாள். கங்கம்மா அவளிடம் பணத்தைக் கொடுத்து, ஏதோ சொல்லி அனுப்பினாள். பிறகு அவள் என் கரத்தை அன்போடு பற்றி எங்கோ அழைத்துப் போனாள். ஊரிலேயே பிரசித்திபெற்ற ஒரு தாசியின் சயன அறையின் அழகைப்

பற்றியும் சுகத்தைப் பற்றியும் வர்ணிக்கவா வேண்டும்?—இந்தப் புதிய அனுபவத்தால் என் ஆற்றாமைக்குச் சிறிது ஆறுதல் ஏற்பட்டது. மனதினால் சிந்தித்து உருகிய இன்பத்தை அனுபவத்தின் மூலம் நன்கு கண்டு விட்டேன்—ஆனால், அத்துடன் ஆசை தீர்ந்து விட்டதா? அது அணையாத நெருப்பாக இருந்தது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேளையும் பசி தீரச் சாப்பிடுவது, களை தீரத் தூங்குவது போல என் உடலோடு ஒட்டிய உணர்ச்சிக்கு நான் என்ன செய்ய முடியும்? தாசி கங்கம்மாவின் வீட்டிற்கு ஒவ்வொரு நாளும் போகலாம். அவளது சிரிக்கும் இதழும், அணைக்கும் கரமும் வேண்டுமென்றால் பணமல்லவா வேண்டும்?.........

ஆகவே கங்கம்மாவின் ஆசையை மறக்க வேண்டியதுதான் என்ற தீர்மானத்துக்கு நான் வந்தேன். ஆனால் எதையும் என்னால் மறக்கவே முடியவில்லை.

வருடம் மூன்றாகி விட்டது. நான் உத்தியோகத்திலிருந்த ஸ்தாபனத்தின் முதலாளிகள் தமிழ்நாட்டில் ஒரு கிளை ஸ்தாபனம் ஏற்படுத்த விரும்பினர். அவர்களுக்கு என்னுடைய யோசனை அப்பொழுது அவசியமாகப் பட்டது. அதற்கு ஒரு சரியான ஊரைச் சொல்லும்படி என்னைக் கேட்டனர். 'குடந்தைதான் சரியான இடம்' என்று நான் சொன்னேன். அவர்களுக்கு என் யோசனை சரி என்று பட்டதால் அதன்படியே குடந்தையில் இன்னொரு கிளை ஸ்தாபனத்தைத் திறப்பதாக முடிவு செய்து அதற்கு மானேஜராக என்னை நியமித்தனர். இதனால் மறு மாதமே நான் குடந்தைக்குப் போக வேண்டியதாயிற்று.

என்னுடைய ஆனந்தத்திற்குக் கேட்க வேண்டுமா? என் மனதில் எவ்வளவோ இன்பக் கனவுகளெல்லாம் எழுந்தன. மேனகா, விஜயா, சாரதா—இவர்கள் மூவருடைய முகங்களும் அலைகளிடையே தோன்றித் தோன்றி மறையும் கட்டுமரங்களைப் போல என் மனக்கண் முன்னால் தோன்றித் தோன்றி மறைந்தன.

—தொடரும்.

ஸ்ரீமதி எம். சரோஜனி எழுதிய

தெய்வச் சிலம்பு

என்னும் தொடர் கதை

அடுத்த இதழில் ஆரம்பமாகிறது.

யார் அந்தப் 'பாசி'?

ஏ. கே. பட்டுசாமி

எல்லப்பன் ஒரு பிரபல எழுத்தாளர். தாம் பிரசித்தி பெற்றவர் என்பதில் அவருக்கு எப்போதுமே சந்தேகம் உதித்தது கிடையாது. அவரது கற்பனை வாயு வேக மனோ வேகத்தில் பறக்கும். இரவு பகல் எந்த நேரத்திலும் ஓய்ச்சல் ஒழிவின்றி சளைக்காமல் எதையாவது எழுதித் தள்ளிக் கொண்டே யிருப்பார். அவரது தனி நடையின் அழகை வர்ணிக்க அவரைத் தவிர மற்ற எவராலும் இயலாது.

அவர் ஒரு கதையை எழுதி முடித்தவுடனேயே ஏதாவதொரு மேனாட்டு சஞ்சிகையைப் பிரிப்பார். அதில் அதே போன்ற ஒரு கதை இருப்பதைக் கண்டதும் அவருக்கு எரிச்சல் வந்து விடும். 'சட்! இந்தப் பயல் என் கற்பனையைக் காப்பி யடித்து விட்டிருக்கிறான்' என்று மனம் வெதும்புவார்.

அடிக்கடி—அதாவது ஆறு மாதம் அல்லது எட்டு மாதத்திற்கொரு முறை—அவரது கதையை ஏதாவதொரு பிரபலமான பத்திரிகை (அவரது அபிப்ராயப்படி) பிரசுரித்தே தீரும். அவரது கதையைத் திருப்பியனுப்பும் பத்திரிகைகள் வெறும் குப்பைகள் என்பதும் அவற்றின் ஆசிரியர்கள் வெறும் கூளங்கள் என்பதும் அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது.

சந்தைப் பேட்டையில் அவரைத் தெரியாதவர்கள் கிடையாது. ஆனால் ஒரு வேளை முகஸ்துதி செய்வதாக எண்ணி அவர் கோபித்துக் கொண்டால் என்ன செய்வதென்ற பயத்தினாலோ என்னவோ ஒருவராவது இது வரையில் அவருடைய கதையைப் பற்றி அவரிடம் புகழ்ந்து கூறத் துணிந்ததில்லை.

அன்றைய தினம் வழக்கம் போல் அவர் பேனாவும் கையுமாக உட்கார்ந்திருந்தார். அப்போது தான் அவருடைய மூளையில் ஒரு அருமையான கற்பனை உதயமாகிக் கொண்டிருந்தது. அதே போன்ற கதையொன்றை பெர்னார்ட் ஷா எழுதியிருப்பது நினைவுக்கு வந்ததும், 'கடைசியில் அந்தப் பெரியவர் கூடவா நம் கற்பனையைக் காப்பி யடிக்க வேண்டும்?' என்று வியந்த வண்ணம் உட்கார்ந்திருந்தார் அவர்.

திடீரென்று அறைக்கு வெளியே செருப்புச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து ஒரு சலசலப்பு. வாசலிலிருந்து வீசிய இலேசான காற்று ஒரு அற்புதமான சுகந்தத்தை அள்ளிக் கொண்டு வந்தது. வருவது ஒரு ஸ்திரீ என்பதைக் கண்டு கொள்ள நம் எழுத்

தாளருக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.

அடுத்த விநாடி ஒரு நாகரீக வனிதை வாசற்படி யருகில் வந்து நின்றாள். எல்லப்பனின் அனுமானம் தவறுமா?

"தாங்கள் தானே மிஸ்டர் எல்லப்பன்?"

எல்லப்பன் வந்தவளை ஏற இறங்க ஒரு முறை பார்த்தார். (அவர் பிரம்மசாரி என்பதைக் கூற மறந்து விட்டேன். மன்னிக்கவும்.) இது வரையில் அவரை எந்தப் பெண்ணும் தனிமையில் இப்படி வந்து சந்தித்ததில்லை. ஹூம்! இது என்ன பிரமாதம்? அவரது எழுத்தின் சக்தி இதைப் போல் ஒரு டஜன் பேர் வழிகளை இழுத்து வராதா? கதாசிரியர் சமாளித்துத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "ஏன்?" என்று கேட்டார்.

"தாங்கள் தானே, சொல்லுங்கள். இந்த அறையையும் தங்கள் முகத்தையும் பார்த்தால் தாங்களாகத்தான் இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது!"

என்ன இருந்தாலும் ஆண் பிள்ளைகளை விட இந்தப் பெண்களுக்கு புத்தி எவ்வளவோ மடங்கு அதிகம் தான்.

எல்லப்பன், முகத்தில் ஒரு சிறிய புன்னகையை வரவழைத்துக் கொண்டு "தங்களுடைய அனுமானம் ரொம்ப சரி; உட்காருங்கள், என்ன விசேஷம்?" என்று கேட்டார்.

அந்த நங்கை மரியாதையாக நாற்காலியில் ஒடுக்கிக் கொண்டு உட்கார்ந்தாள். முகத்தில் நாணம் தவழ அவள் கூறியவற்றை எல்லப்பன் ஆர்வத்துடன் செவி சாய்த்துக் கேட்டார்.

"நான் சந்தைப் பேட்டை மாதர் சங்கத்தின் காரியதரிசி. என் பெயர் லீலா. எனக்கு இலக்கியத்தில் அபாரப் பற்றுதல். இலக்கிய கர்த்தாக்களைக் காண்பதில் எனக்கு விசேஷப் பிரியம்........"

எல்லப்பனின் உள்ளம் குளிர்ந்தது. கடைசியில் சந்தைப் பேட்டையிலும் கூட அவரது எழுத்தின் மகிமையை உணரக்கூடிய ஆத்மா ஒன்று இருக்கிறது!

"இதென்ன இந்த அறையில் இத்தனை புஸ்தகங்கள்?"

"எல்லாம் என் தொழிலுக்குத் தேவையானவை" என்றார் அவர் மந்தகாசமாக.

பேதை! எழுத்தாளனின் தொழிலைப் பற்றி அவளுக்கு என்ன தெரியும்?

"தங்களுடைய புனைப் பெயரை நான் அறியலாமோ?"

எல்லப்பன் நகைத்தார்.

"புனைப் பெயரில் நான் எழுதுவதே இல்லையே!"

வனிதை அவர் கூறியதை நம்பவில்லை.

"தாங்கள் உண்மையை மறைக்கிறீர்கள்; புகழை விரும்பாத தன்னடக்கமுள்ள பெரியோர்களில் தாங்களும் ஒருவர். 'பாசி' என்பது தாங்கள் தானே?"

"பாசியா? இல்லையே! நான் பாசியுமில்லை; ஒட்டடையுமில்லை! என் சொந்தப் பெயரில் தான்..."

லீலாவின் முகத்தில் அவநம்பிக்கைக் குறி படர்ந்து கொண்டே போவதை எல்லப்பன் கண்டு கொண்டார்.

"என்னால் நம்ப முடியாது; தங்களைத் தவிர வேறு யாரும் அந்தப் பிரசித்தி பெற்ற 'பாசி'யாக இருக்க முடியாது. 'பாசி' என்பவர் நமது பேட்டையில் தான் வசிக்கிறார் என்பது மட்டும் எனக்குத் தெரியும். ஆனால் இதுவரையில் அவர் யாரென்று தெரியாமலிருந்தது. சந்தைப் பேட்டையில் தங்களைத் தவிர பிரபல எழுத்தாளர் ஒருவரும் கிடையாது. ஒப்புக் கொள்ளுங்கள், தாங்கள் தானே 'இருள்' என்ற அந்த அற்புதமான நவீனத்தின் ஆசிரியர் 'பாசி?'"

எல்லப்பன் எவ்வளவோ மறுத்துக் கூறியும் லீலா ஒப்புக் கொள்ள வில்லை. அந்த 'இருளின்' பிரதாபத்தையும், 'பாசி'யின் பேனா வன்மையையும் அவள் வாய் மொழியாகக் கேட்கக் கேட்க நமது ஆசிரியருக்கு ஒருக்கால் தாமே தான் அந்த மகா இலக்கியத்தின் கர்த்தாவான பாசியோவென்று சந்தேகம் தோன்றிக் கடைசியில் ஒப்புக் கொள்ளும் பாவனையில் தலையையும் ஆட்டி விட்டார்.

லீலா திருப்தி யடைந்தாள்.

"எனக்குத் தெரியும் தாங்களாகத் தான் இருக்க வேண்டுமென்று. ஆஹா! இருள்! என்ன பொருத்தமான தலைப்பு! இன்றைய வரையில் எந்த ஆசிரியனும் சிருஷ்டிக்காத மகத்தான தொரு சிரஞ்சீவி இலக்கியம்! கற்பனையின் சிகரமல்லவா அது?"

வலிய வரும் புகழை விட்டுவிட யாருக்குத் தான் மனம் வரும்? எல்லப்பன் எட்டைத் திருப்பிப் படித்தார்!

"அஞ்ஞான இருளை அகற்றி ஞான ஒளியைப் பரப்பும் காந்த விளக்கல்லவா எனது இருள்!" என்று ஒத்துப் பாடி வைத்தார்.

லீலா திகைத்தாள்.

" தாங்கள் எதைக் கூறுகிறீர்கள்? இருள் ஒரு மனமுருக்கும் காதல் சித்திரமல்லவா? ஏதோ வேதாந்த விஷயத்தைக் கூறுகிறீர்களே!"

எல்லப்பன் இதற்கெல்லாம் சளைப்பாரா?

"காதல் என்பது என்ன? காதலே வேதாந்தம்! வேதாந்தமே காதல்!" என்று மடக்கினார்.

அவர் லீலாவின் மதிப்பில் இன்னும் ஒரு படி உயர்ந்தார்.

"இன்று தங்களைச் சந்தித்ததில் எனக்குப் பெருமகிழ்ச்சி. தங்கள் புகழை வானளாவப் பாடுவதையே என் வாழ்க்கையின் லட்சியமாகக் கொள்ளுவேன்!" என்ற சபதத்துடன் லீலா ஒருவழியாக வெளியேறினாள்.

லீலா சென்ற திக்கை எல்லப்பன் நெடுநேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பிறகு எழுத உட்கார்ந்தார். கற்பனை ஓடவில்லை. மனதைத் தளரவிடாமல் திடப்படுத்திக் கொண்டு சிந்தித்துப் பார்த்தார். லீலாவின் உருவம் தான் அவர் மனக்கண்ணெதிரே நின்றது. ஏதாவதொரு தலைப்பை முதலில் கொடுத்துவிட்டு அதை வைத்துக் கொண்டு எழுதலாமென்றால் அவரது அருமைப் பேனா 'லீலா' என்று தான் எழுதியது. வேறு எழுத்தை எழுத அதற்குச் சக்தியில்லை. சரிதான், லீலாவின் மேல் தமக்குக் காதல் பிறந்து விட்டதென்று அவருக்குப் புரிந்து விட்டது.

வாத்தியார் :—"ஸார்! நீங்க உங்க பையனுக்கு விட்டுக் கணக்கைப் போட்டுக் கொடுக்கிறீங்களே, அதெல்லாம் ரொம்பத் தப்பு ஸார்......"

"ஏன்? எல்லாம் ரைட்டாத்தானே போட்டுக் கொடுத்துண்டுவரேன்..."

"அதைச் சொல்லலே ஸார்! பையனுடைய கணக்கை நீங்க போட்டுக் கொடுப்பது சுத்தத் தப்புன்னு சொல்றேன்."

லீலா எப்படி மாதர் சங்கத்தின் காரியதரிசியோ அதேபோல் எல்லப்பன் சந்தைப் பேட்டை சோஷல் கிளப்பின் அங்கத்தினர். மாதர் சங்கத்தின் விவாகமான அங்கத்தினர்களின் கணவன்மார்கள் அத்தனை பேரும் சோஷல் கிளப்பில் அங்கத்தினர்களாயிருந்தார்கள்.

மறு தினம் நமது ஆசிரியர் கிளப்புக்குப் போன போது அவரைச் சுற்றி ஒரு சிறிய கூட்டமே கூடி விட்டது.

"ஏன் ஸார், இத்தனை நாள் எங்களிடம் சொல்லவேயில்லையே! நீங்களா அந்தப் பாசி?"

"ஏன் ஸார், விஷயமே தெரியாதே! நீங்களா ஸார் அந்த இருளின் சிருஷ்டி கர்த்தா?"

"ஏன் ஸார், கேள்விப் படுகிறேனே, வாஸ்தவமா?" என்று ஒரே சமயத்தில் அங்கத்தினர்கள் அவரைப் பிய்த்து விட்டனர். லீலாவின் பிரசாரம் ஆரம்பமாகி விட்டது என்று உணர்ந்து கொண்டார் எல்லப்பன். ஆனால் இவர்களுக்கு என்ன பதில் சொல்லுவது? ஆமாம் என்பதா, இல்லை என்பதா?

இரண்டுமில்லாமல் குறுக்கும் நெடுக்குமாகத் தலையை ஆட்டி வைத்தார்.

"என்ன புஸ்தகம் ஸார் அது, 'இருள்' என்று? அப்படி என்ன

தான் எழுதியிருக்கிறீர்கள் அதில்?'' என்று கேட்டார் ஒரு பெரிய மனிதர். மற்றவர்கள் எதிர்பாராத விதமாக மௌனம் சாதித்தனர். எல்லப்பனுக்கு தர்ம சங்கடமாக இருந்தது. கூட்டத்தில் யாராவது கதையின் சாராம்சத்தை அந்தப் பெரியவருக்குச் சொல்லக் கூடாதோ?

''என்ன தான் ஸார் சாராம்சம்! கொஞ்சம் சொல்லுங்களேன்.''

எல்லப்பன் அந்தப் புஸ்தகத்தைக் கண்ணால் கூடப் பார்த்தது கிடையாதே! மற்றவர்கள் வாயில் என்ன கொழுக்கட்டையா?

இதற்குள் கூட்டத்தில் ஒரு குரல்,

''இந்த உம்மணா மூஞ்சி எழுதியிருக்காதையா, எழுதுகிற மூஞ்சியைப் பார்!'' என்றது.

அவ்வளவு தான். ஒரே குழப்பம், ஒரே ரகளை! அங்கத்தினர்கள் இரண்டு கட்சிகளாகப் பிரிந்தனர். ஒன்று நமது எல்லப்பன் கட்சி. மற்றது அதற்கு எதிர்க் கட்சி.

''அந்த அற்புதமான கற்பனை எணி வைத்தால் கூட இவர் மூளைக்கு எட்டாது'' என்றனர் எதிர்க் கட்சியினர்.

''இவர் நீறு பூத்த நெருப்பு; இவர் தான் அதை எழுதியவர்!'' என்று சத்தியம் செய்தனர் அவருடைய கட்சியினர்.

குழப்பம் வலுத்தது. சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு மெதுவாக அங்கிருந்து நழுவினர் எல்லப்பன். அவருக்கு என் வீண் வம்பு. ஆனால் 'உண்மையில் யார் இந்தப் பாவிப் பயல் பாசி?' என்ற கேள்வி அவரது மூளையின் ஒரு மூலையை அரிக்கத் தொடங்கியது.

மறு தினம் லீலா வந்தாள். எல்லப்பன் விசேஷமாக உபசரித்தார். அன்று அவளது ஒவ்வொரு அங்கத்தையும் அப்படியே அணு அணுவாகத் தமது மனத் திரையில் படம் பிடித்து வைத்துக் கொண்டார்.

''நேற்று உங்கள் கிளப்பில் ஏக ரகளையாமே!''

''கிடக்கிறான்கள் பரதேசிப் பயல்கள்! பெரிய மனிதர்கள் எல்லோருக்குமே எதிர்ப்பு ஏற்படுவது உலக நியதி தானே!'' என்றார் ஆசிரியர்.

''ஏன் அவர்களுக்கு உங்கள் மதிப்பில் இந்த சந்தேகம்?''

''எல்லோருக்குமே சந்தேகம் இல்லையே! சில பொறாமைக்கார நாய்களுக்குத் தான்!''

லீலா சிறிது நேரம் அளவளாவி விட்டுச் சென்றாள்.

அதன் பிறகு சுமார் ஒரு வாரம் வரையில் கிளப்புக்குப் போகவில்லை. குழப்பத்திற்குப் பயந்தல்ல, வேலை மிகுதியால் தான்!

எட்டாவது நாள் அவர் அங்கு போன போது சிவராமன் என்ற ஒரு புது அங்கத்தினர் அவரை நோக்கி வந்தார்.

''ஹல்லோ மிஸ்டர் பாசி! நீங்கள் தான் பாசியா?'' என்று கேட்டார் அவர்.

எப்படி இருக்கிறது பரிகாசம்? 'பாசி' என்று கூப்பிட்டு விட்டு நீங்கள் தான் பாசியா என்றால் கோபம் வருமா வராதா?

எல்லப்பன் அவரை ஒரு தடவை அலட்சியமாகப் பார்த்தார்.

"ஓ! கோபப்படக் கூடாது, பாசி தாங்கள் தானல்லவா! ஆமாம்; அப்படித் தானே கேள்விப் பட்டேன்!" என்று கூறிவிட்டுக் கண்களை ஒருவிதமாகச் சிமிட்டினார் சிவராமன்.

"இப்போது என்ன அதற்கு?" என்று தூக்கி எறிவது போல் கேட்டார் எல்லப்பன். மனுஷனுக்கு உறைத்தால் தானே!

"ஒன்றுமில்லை மிஸ்டர் பாசி! இருள் என்பது என்ன துப்பறியும் கதையோ?"

"கத்தரிக்காய்!" என்று கோபத்துடன் சொல்லி விட்டு அங்கிருந்து நடந்தார் கலைஞர்.



"இன்னிக்கு ஒரு நாள் எனக்கு லீவு வேணுங்க ;......கச்சேரிக்குப் போகப் போறேன்..."

"என்னடா திடீர்னு கச்சேரிக்குப் போக ஆரம்பிச்சுட்டே? சங்கீதத்திலே வேறே ஞானம் வந்துட்டுதா உனக்கு?"

"அதெல்லாம் இல்லைங்க; கோர்ட்டு கச்சேரிக்குப் போவணுங்க. என் விட்டு எதிரிலே இரண்டு பேரு சண்டை போட்டாங்க. அதுக்கு போலீஸ்காரங்க என்னை சாட்சியாப் போட்டிருக்காங்க."

அன்று அந்தி மங்கும் நேரத்தில் அவர் வீடு திரும்புகையில் சாலையில் அதிவேகமாகச் சென்று கொண்டிருந்த சிவராமனின் மோட்டாரைத் தற்செயலாக அவர் கவனிக்க நேர்ந்தது. அவரது நெற்றி சுருங்கியது. காரணம் உள்ளே சிவராமனுடன் உட்கார்ந்திருந்த பெண்ணின் உருவம் லீலாவைப் போலிருந்தது தான்.

மறு தினம் லீலா அவரைப் பார்க்க வந்த போது "இருளை எழுதியது நிச்சயமாக நீங்கள் தானே?" என்று கேட்டாள்.

ஏன் இவளுக்கு இப்படித் திடீரென்று சந்தேகம் வரவேண்டும்? முன் தினம் அவர் கண்ட மோட்டார் காட்சி அவருடைய நினைவிற்கு வந்தது.

"லீலா! நேற்று நீ மோட்டாரில் சென்றாயா?" என்று கேட்டார்.

"இல்லவே இல்லை" என்று சாதித்தாள் லீலா.

"போகிறது; உனக்குச் சிவராமனைத் தெரியுமா?"

லீலா சிரித்துக் கொண்டே "எனக்குச் சிவராமனையும் தெரியாது; விஷ்ணு ராமனையும் தெரியாது!" என்றாள்.

எல்லப்பனுடைய மனதிலிருந்து ஒரு பெரிய பாரம் இறங்கியது. மூச்சும் சரியாக வரத் தொடங்கியது.

அவள் போன பிறகு அவர் ஆழ்ந்து யோசித்தார். என்ன சமாதானப் படுத்தியும் மனம் சாந்தி அடையவில்லை. மோட்டாரில் கண்ட காட்சி நிமிஷத்துக்கொரு முறை அவரது மனக்கண்

முன் தோன்றி அவரை அலைக் கழித்தது.

அன்றிரவு முழுவதும் நம் கதாசிரியர் தூங்கவில்லை. லீலா இல்லாமல் அவரால் வாழ்க்கை நடத்த முடியாது! அவள் அருகிலில்லாமல் அவருக்கு இனிமேல் கற்பனை ஓடாது. அவர் உடல், அவள் உயிர்! தூக்கம் வராததற்கும் அவள் தான் காரணம் என்பதை அவரது மனம் அறிவுறுத்தியது.

காலையில் எழுந்ததும் பல்லைக் கூடத் தேய்க்காமல் தமது இருதயத்தை அப்படியே பிழிந்து காட்டி லீலாவுக்கு ஒரு உருக்கமான கடிதத்தை எழுதித் தபாலில் சேர்த்தார்.

லீலா இரக்கமற்றவள் அல்ல. மேலும் அவருடைய எழுத்தின் மேலும்—என், அவர் மேலுங் கூட—அவளுக்குச் சொல்ல முடியாத பிரேமை! அவருக்கு வாழ்க்கைத் துணைவியாவதை விட இவ்வுலகில் அவள் அடையக்கூடிய பாக்கியம் வேறொன்றும் இருக்க முடியாது என்பது அவருக்குத் தெரியும்!

நாட்கள் நான்கு ஆமை வேகத்தில் நகர்ந்தன. லீலாவிடமிருந்து கடிதமே இல்லை. அவளாவது நேரில் வந்து ஒரு வார்த்தை சொல்லக் கூடாதோ? அதுவும் இல்லை. இந்த நாலு நாட்களாக அவர் பட்ட துயரம் அவருக்குத் தான் தெரியும். பாவம்! அந்த நாலு நாளும் அவர் ஊணுறக்கமின்றித் தமது அறையிலேயே அடைந்து கிடந்தார். பேனாவைத் தொட்டு ஒரு எழுத்து எழுதியவரல்ல. பழங் காவியங்களில் காணப்படுவது போல் ஏதாவது காரையையோ மேகத்தையோ தூது விடலாமா என்று கூட யோசித்தார்.

ஐந்தாம் நாள் அவருக்கு நற்செய்தியைக் கொண்டு வந்தது. லீலா வராவிட்டாலும் அவளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

"இன்றைக்குத் தங்களைத் தங்களது கிளப்பில் சந்திக்கிறேன்.

இப்படிக்கு, லீலா."

ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது? அவருடைய கிளப்பில் சந்திக்கிறாளாமே! அந்தச் சனியன் பிடித்த கிளப்புக்கே இனிமேல் போகக் கூடாதென்று அவர் தீர்மானித்திருக்கிறாரே! அங்கே என்ன வேலை இவளுக்கு? மேலும் அவருடைய கடிதம் சேர்ந்ததாக அதில் ஒரு வார்த்தையைக் கூடக் காணோம்!

கடிதத்தை ஒரு டஜன் தடவை திருப்பித் திருப்பிப் படித்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டார். உண்ணா விரதத்தைக் கலைத்து ஒரு பிடி அன்னம் உண்டார். என்றாலும் அந்தக் கடிதத்தில் அவர் "அன்பே, ஆருயிரே!" என்று ஏதாவது ஒரு வார்த்தையை எழுதி யிருந்தால் அவருக்கு எவ்வளவு ஆறுதலாயிருக்கும்?

அன்று மாலை. நேரம் தாழ்த்தாமல் எல்லப்பன் கிளப்புக்குச் சென்றார். அங்கே அவர் கண்ட காட்சி அவரைத் திகைக்கச் செய்தது. பந்தடி மைதானத்தருகே புல் தரையில் ஒரு மேஜையினருகில் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் உட்கார்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தனர். அவர்கள் வேறு யாருமல்ல; லீலாவும் சிவராமனும் தான்.

எல்லப்பன் உற்றுக் கவனித்தார். ஒரு வேளை பிரமையோ?

இல்லை; உண்மையே தான். அதோ லீலாவே அவரைக் கவனித்து விட்டாள்.

"வாருங்கள் மிஸ்டர் பாசி!" என்று வரவேற்றாள் லீலா.

"ஓ. இவர் தானா பாசி? யாரோ வென்று நினைத்தேன்!" என்றார் சிவராமன். என்ன அகம்பாவம்! அவனுடன் இவளுக் கென்ன வேலை?

எல்லப்பனுக்கு இந்த வேடிக்கையெல்லாம் பிடிக்காது. அவர் எப்பொழுதும் கண்டிப்பான பேர்வழி. அவரிடம் எதுவும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு தான்.

"லீலா! என் கடிதம் கிடைத்ததா, இல்லையா?"

பிரமுகர்:— "என்ன பாகவதர்வாள்! சங்கீத சபைக் காரியதரிசி வீட்டுக்கு நடையா நடந்தீரே. இந்த 'ஸீஸன்'லே ஏதாவது 'சான்ஸ்' தட்டினீரா?"

பாடகர்:— "ஒண்ணுமில்லே; ஒரு 'ஸீஸன் பாஸ்' கொடுத்தார். அவ்வளவு தான்..."

"கிடைத்தது; இப்படி உட்காருங்கள்."

"நான் உட்காருவதற்கில்லை. நீ இங்கே ஏன் வரவேண்டும்?"

"தங்கள் கடிதத்தைப் பற்றிப் பேசுவதற்காகத் தான்."

"என்ன லீலா, குழந்தை போல் பேசுகிறாய்? நம் சொந்த விஷயத்தை அந்நியர் எதிரிலா பேசுவது?"

இதற்குள் சிவராமன் குறுக்கிட்டான். "ஏன் லீலா, இவர் அந்த இருளின் ஆசிரியர் பாசியா, அல்லது வேறு பாசியா?"

அவனது குரலில் பரிகாசம் தொனித்ததைக் கண்டு கொண்டார் எல்லப்பன். அதற்கு மேல் அவரால் பொறுக்க முடியவில்லை.

"யாராயிருந்தால் உமக்கென்னய்யா? ஏன் லீலா, உனக்கு இவரைத் தெரியவே தெரியாது என்று சொன்னாயே?" என்று கோபத்தோடு வினவினார்.

"அட ராமா! நீங்கள் இவரைப் பற்றியா கேட்டீர்கள்? வேறு யாரையோ என்று நினைத்தேன். இவரைக் கொஞ்ச நாளாக எனக்குத் தெரியும். இவரிடம் எனது விவாக விஷயத்தைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தேன்" என்று குறும்பாகச் சிரித்துக் கொண்டே கூறினாள் லீலா.

"உன் விவாக விஷயமா?" என்று பதறினார் எல்லப்பன்.

"ஆமாம், நான் யாரைக் கல்யாணம் செய்து கொள்ளுவேன் என்று தங்களுக்குத் தான் நன்றாகத் தெரியுமே!"

எல்லப்பனின் முகத்தில் நம்பிக்கையும் அவநம்பிக்கையும் மாறி மாறிப் பிரதிபலித்தன.

"யாரை ?"

" சந்தேகமென்ன? இருளின் உன்னத ஆசிரியர், ஈடில்லாத எழுத்தாளர் ஸ்ரீமான் பாசி அவர்களைத் தான் !"

"சபாஷ்! அப்படிச் சொல்லு!" என்று சந்தோஷத்தால் ஒரு துள்ளுத் துள்ளினர் எல்லப்பன்.

" என்ன மிஸ்டர் சிவராம்! நமது பாசிக்கு ஒன்று கொடுங்களேன் " என்று கூறி விட்டு எல்லப்பனை விஷமமாகப் பார்த்தாள் லீலா.

எல்லப்பன் என்னவோ என்று திகைத்தார். சிவராமன் சட்டென்று பையிலிருந்து ஒரு விவாக அழைப்புக் கடிதத்தை அவரிடம் நீட்டி, "இந்தாருங்கள் மிஸ்டர் பாசி! கோபிக்கக் கூடாது. கட்டாயம் விவாகத்திற்கு வரவேண்டும்" என்ருன்.

எல்லப்பன் அதை உற்று நோக்கினர். அதில்,

"மிராசுதார் தி. பாலசுப்ரமணியத்தின் குமாரன் சிரஞ்சீவி பா. சிவராமன் என்னும் எழுத்தாளர் 'பாசி'க்கும் சௌபாக்யவதி மிஸ். லீலாவுக்கும்..." என்று மேலும் என்னென்னவோ அச்சடித்திருந்தது. அதற்கு மேல் அவரால்

" அதோ அவங்க இரண்டு பேரும் யார் ஸார்? ஒரேயடியாத் தலைகால் எல்லாத்தையும் போர்த்துண்டு நிக்கருளே !"

" அவங்க நாளைக்குக் கச்சேரி பண்ணப் போற வித்வான்கள் ஸார்! பனியில் தொண்டை கெட்டுப் போயிடும்னு இப்படிப் போர்த்துண்டு இருக்கா."

எதையும் படிக்க முடியாதபடி அவரது தலை சுழன்றது.

• • •

அன்று விதுரன் வில்லை முறித்துப் போட்டதுபோல், இன்று எல்லப்பன் தமது கட்டைப் பேனவை முறித்துப் போட்டார். இலக்கிய உலகத்திற்கு ஈடுசெய்ய முடியாத நஷ்டம்! எழுத்தின் மேலும், பெண் குலத்தின் மேலும் அவருக்கு மீளாத வெறுப்புத் தோன்றி விட்டது. அவர் இமயமலைச் சாரலுக்குச் சென்று விட்டதாகப் பிரஸ்தாபம். அவரைப் போன்ற ஒரு பிரபலஸ்தரின் மனதைப் புண்படுத்திய பாவம் வீண் போகாது. அப்படிச் செய்தவர்களைக் கடவுள் சும்மா விடவே மாட்டார்.

நமது இலங்கை ஏஜண்ட்

பீபிள்ஸ் நியூஸ்—
—ஏஜன்ஸீஸ்

50-7, கன்ரைத் தெரு
கொழும்பு — இலங்கை

மகிழங்கோப்பு மோகினி

"ஸ்ரீஜனி"

காலை மணி ஐந்திருக்கும். கிழக்கு வெளுத்து விட்டது. 'சில்' லென்ற காற்று முகத்தில் வீசிய போது விவரிக்க வொண்ணா இன்பமாக இருந்தது. மேழி பிடித்த இருஉழவர்கள் கிலி பிடித்த மெல்லிய குரலில் சம்பாஷித்த வண்ணம் வயலுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள்.

''கந்தப்பா! நான் சொல்வது நிஜம் தான். நேரில் நானே என் கண்ணாரக் கண்டேன்.''

''அது சரி அண்ணே; நீ சொல்வது பொய் யென்று சொல்லவில்லையே; இப்படியே எல்லோரும் அதைப் பற்றி பேசுவதோடு விட்டுட்டா எப்படி? அதை விரட்டி அடிக்க வேணாமா?''

''மோகினிஎன்றால்லேசாதம்பி! அதுக்கு சரியான ஆளைப் பிடிச்சுப் பூசை போட்டு விரட்டி அடிக்கணும்! ஊரிலே எல்லாரையும் கலந்து பேசி மோகினியை விரட்ட ஏற்பாடு செய்வோம்!'' என்றான் பெரியண்ணன்.

விடுமுறையை நிம்மதியாகக் கழிக்கத் தன் அத்தை வீட்டிற்கு விஜயம் செய்திருந்த ராமுவினால் முதலில் இந்தச் செய்தியை நம்பவே முடியவில்லை. வீட்டு வேலைக்காரன் பெரியண்ணன் தானே நேரில் கண்டதாகச் சத்தியம் செய்து தன்னுடன் வந்தால் மோகினியைக் காட்டுவதாக உறுதி கூறினான். எனவே, மறுநாள் காலை மூன்று மணிக்குராமு பெரியண்ணனுடன்மகிழங்கோப்பருகில் போய் உட்கார்ந்து கொண்டான். வெளிக்கு பயமில்லாதவனைப் போல் காட்டிக் கொண்டாலும், ராமுவுக்குச் சற்று உதைப்பாகவேதான் இருந்தது. பெரியண்ணன் மோகினி வரும் வழியை உற்றுப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான்.

'ஹா!' என்றான் பெரியண்ணன். விடியற்கால நேரத்தின் மங்கிய ஒளியில் ஒரு பெண்ணுருவம் மகிழங்கோப்பிலிருந்து வெளியே வருவது தெரிந்தது. அவள் உடுத்தியிருந்த புடவையின் நிறம் மஞ்சள் என்பது இருட்டுக்குப் பழக்கப்பட்ட ராமுவின் கண்களுக்கு நன்கு புலனாயிற்று.

அன்று மாலை ராமு வெளியே உலவிவிட்டு வரக் கிளம்பினான். வயிற்றில் பசி இருந்ததாலோ என்னவோ, அவனை அறியாமலேயே அவன் கால்கள் அந்த ஊருக்குச் சற்று தூரத்திலிருந்த பாழடைந்த மண்டபத்தை நோக்கி நடந்தது. காரணம் அங்கே ஒரு கிழவி பட்சணக் கடை ஒன்று வைத்திருந்தாள். அங்கே அவன் கண்ட காட்சி அவனைத் தூக்கி வாரிப் போட்டது. அவன் கண்களையே

அவனால் நம்பமுடியவில்லை. அந்தக் கிழவிக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவள் யார்? ஒரு முறை கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு பார்த்தான். அப்படியும் அவன் சந்தேகம தீர்ந்த பாடில்லை. தான் காண்பது கனவோ என்ற சந்தேகம் தோன்றிவிட்டது. கனவல்ல; நிஜம்தான். அன்று காலை அவன் மகிழந்தோப்பிலிருந்து வெளிப் பட்டபோது பார்த்த அதே மோகினிதான் அந்தப் பாட்டியின் அருகில் நின்று கொண்டிருந்தாள். ஒரு கணத்தில் மோகினிமறைந்து விட்டாள். இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்பதை அறிந்துகொண்ட அவன் அந்த இரகசியத்தைத் தெரிந்து கொள்ள விரும்பினான். மெதுவாகப் பாட்டியிடம் பேச்சுக் கொடுத்தான். கிழவி முதலில் விஷயத்தைச் சொல்ல மறுத்த போதிலும் வரவர ராமுவின் பேச்சிலும் தோற்றத்திலும் அவளுக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

"பாட்டி! பயப்படாமல் என்னிடம் எல்லாவற்றையும் சொல்லு. நான் உங்களுக்கு உபகாரம் செய்வேனே தவிர அபகாரம செய்ய மாட்டேன்" என்று உறுதி கூறினான் ராமு. அதன் பிறகு கிழவி கூறிய விவரங்களை நேயர்களின் சௌகரித்தை முன்னிட்டு என்னுடைய சொந்தப் பாணியில் கீழே தருகிறேன்.

★

அந்தக்கிராமத்திலேயே மிகவும் அழகி அஞ்சலை. அவளுடைய துணிகரமான சுபாவமும், கலகலப்பான பேச்சும், குறு குறுப்பான முகமும், வேலனின் கள்ள மற்றநெஞ்சைக் கொள்ளைகொண்டது. வேலன்தான் என்ன? அழகில் குறைந்தவனா? அவனுடைய கம்பீரமான உருவமும், முகத்துக்கே தனி அழகு தரும் அரும்பு மீசையும், தலையில் சுற்றிய முண்டாசும் அஞ்சலையை வசீகரித்து விட்டன. அஞ்சலை, வேலப்பன் இருவருடைய காதலுக்கும் இடையூறாக அந்த ஊர்

நாட்டாண்மைக்காரன்மகன் மாணிக்கம் தோன்றினான். மாணிக்கம் பெயருக்கு எற்ற குணமும், உருவமும் படைத்தவன். அன்று அவன் முகத்தைக் காணும்போதே அஞ்சலைக்கு ஒருவித நடுக்கமும், வெறுப்பும் தோன்றியது. வேலப்பனின் அழகும், அன்பு ததும்பும் முகமும் எங்கே? மாணிக்கத்தின், கிருதா மீசையும், காம விழிகளும்எங்கே? மாணிக்கத்தினிடம் அதிகாரமும், பணமும் இருந்தது. வேலப்பனிடம் பணம் இல்லை. முகத்தில் அழகும், அகத்தில் காதலும் இருந்தது. அஞ்சலையின் பெற்றோர் மாணிக்கத்தின் பணத்துக்கு அடிமையாகிப் பகுத்தறிவைப் பறி கொடுத்து விட்டனர். மகளுக்கு நன்மை செய்வதாக எண்ணிக்கொண்டு பணத்தாசை காரணமாகக் கிளியை வளர்த்துப் பூனையிடம் தரச் சம்மதித்து விட்டனர்.

பாவம்! அஞ்சலை அழுதாள். மாணிக்கத்தை மணக்க முடியாதென அடம் பிடித்தாள். உயிரை மாய்த்துக் கொள்வதாகவும் பயமுறுத்தினாள்.

அவள் தந்தை "இதோ பார் அஞ்சலை! மாணிக்கம் ஊர் நாட்டாண்மைக் காரரின் மகன். நிறையச் சொத்து இருக்கிறது. இவனைக் கல்யாணம் செய்து கொண்டால் நீ ஆயுசு பூராவும் சுகமாக இருக்கலாம். வேலப்பன் நம்மை விட எழை. அன்றாடம் கூலி வேலை செய்து காலத்தைக் கழிப்பவன். அவனை மணந்து கொண்டால் நீதான் கஷ்டப் படணும்."

"பரவாயில்லை; நான் வேலப்பனையே.........!"

"நீ கஷ்டப்பட்டால் என்ன, நாங்க கஷ்டப்பட்டால் என்ன? நீ மாணிக்கத்தைக் கட்டிக்காமல் போனா நான் தூக்குப் போட்டுக் கொள்வேன், ஆமாம்!" என்றான் தந்தை முடிவாக.

அஞ்சலை பதில் பேசவில்லை. திருமணத்திற்கான எற்பாடுகள் வெகு துரிதமாக நடைபெற்றன.

திருமணத்தன்று அஞ்சலையைக் காணவில்லை. எங்கோ மாயமாக மறைந்து விட்டாள். அஞ்சலை வேலப்பனுடன் ஓடிவிட்டாளோ என்று எண்ணுவதற்கும் இல்லை. ஏனெனில் வேலப்பனும் அஞ்சலைக்காக அழுது புலம்பிக் கொண்டிருந்தான்.

'அஞ்சலை உயிருடன் இல்லை. எங்கோ சென்று உயிரை மாய்த்துக் கொண்டாள்' என அவள் பெற்றோரும், உற்றாரும், ஊரார் உள்பட முடிவு கட்டி விட்டார்கள். ஆனால் அஞ்சலை அவர்கள் எண்ணியதுபோல் இறந்துபோகவில்லை. அவள் பத்திரமாக உயிருடன் தான் இருந்தாள். அஞ்சலை உயிருடன் இருக்கிறாள் என்கிற விஷயம் வேலப்பனுக்கும் பட்சணக் கடைப் பாட்டிக்கும் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

வேலப்பனும் அஞ்சலையும் தாங்கள் அநியாயமாகப் பிரிக்கப்படுவதைக் கண்டு அளவிலா மன வருத்த மெய்தினர். எங்காவது ஓடி விடலாம் என்றால் எங்கு போவது? வேலப்பன் பிறந்தது முதல் சொந்த ஊரை விட்டுப் போனவனல்ல; அஞ்சலையின் விருப்பத்திற் கிணங்க பட்சணக் கடை பாட்டியை நெருங்கினான். கிழவியிடம் தன் தர்ம சங்கடமான நிலையை விளக்கினான். பாட்டி அஞ்சலையைத்தன்னுடன் தன் வீட்டில் விட்டுவிடும் படியும் தான் அவளை வெளியே காட்டாமல் வைத்திருப்பதாகவும் தெரிவித்தாள். ஊருக்குச் சற்று தூரத்தில் உள்ள பாழடைந்த கோட்டைதான் கிழவியின் வீடு. கோட்டையில் சற்று சுமாராக இருந்த ஓர்இடத்தைக் குடிசையாகக் கட்டிக் கொண்டு வாழ்ந்து வந்தாள். பாட்டிக்கு ஜீவனம் பட்சணங்கள் விற்பது தான். பகல் நேரத்தில் அநேகமாக, வீட்டில் இருக்க மாட்டாள். பட்சணக் கூடையுடன் வியாபாரம் செய்ய ஊர்ப் பக்கம் போய் விடுவாள். எனவே, அவள் வீட்டிற்கு ஒருவரும் வர மாட்டார்கள். அஞ்சலையை வேலப்பன் இரவு நேரங்களில் மகிழந் தோப்பில் வந்து சந்தித்துப் பேசி விட்டுப் போவாள். விடியற்காலம் ஐந்து மணிக்குள்ளாக அஞ்சலை மகிழந் தோப்பிலிருந்து வெளியேறி விடுவாள். அந்த நேரத்தில் குடியானவர்கள் உழவு செய்ய வயல் வெளிக்குச் செல்வார்கள். அந்தச் சமயத்தில் தான் ஒரு நாள் அஞ்சலையை ஒரு குடியானவன் பார்த்து விட்டு மோகினி என்று நம்பிவிட்டான். அவ்வளவுதான்; மகிழந் தோப்பில் 'மோகினி' இருப்பதாக ஊர் பூராவும் வதந்தி பரவி விட்டது.

கிழவி சொன்ன மேற்படி கதையைக் கவனத்துடன் கேட்டு வந்த ராமுவுக்கு அது எல்லை இல்லாத வியப்பை அளித்தது. அந்தக் காதலர்களுக்குத் தன்னாலியன்ற உதவியைச் செய்வதென்று அப்போதே முடிவு கட்டினான். தன் தீர்மானத்தைக் கிழவியிடமும் கூறினான்.

"பாட்டி! இப்படியே அவ்விருவரும் எத்தனை நாட்கள் காலம் தள்ள முடியும்? நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். அதன்படி செய்தால் நல்லது" என்றான்.

"சொல்லு தம்பி! 'ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு

கலியாணத்தைச் செய்து வைக்க வேணும்' என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். அஞ்சலைக்கும் வேலப்பனுக்கும் முடி போட்டு விட்டால் உனக்குக் கோடி புண்ணியம் உண்டு" என்று கூறினாள் பாட்டி.

"அஞ்சலையையும், வேலப்பனையும் என்னோடு பட்டணத்துக்கு அனுப்பி விடு. அங்கே வேலப்பனை எனக்குத் தெரிந்த சிநேகிதர் ஒருவர் வீட்டில் தோட்ட வேலைக்கு அமர்த்தி விடுகிறேன். அஞ்சலையும் வீட்டு வேலை செய்து பிழைத்துக் கொள்ளுவாள்" என்று கூறினான் ராமு.

"ஆமாம் தம்பி! அதுதான் சரியான யோசனை; அப்படின்னா இராத்திரிக்கே அஞ்சலையையும், வேலப்பனையும் பட்டணத்துக்கு ரயில் ஏற்றி விடுகிறாயா?" என்று கேட்டாள் பாட்டி.

"இன்றைக்குமுடியாதுபாட்டி! நாளைக்கு நானே போறேன். அப்போது என்னுடன் அஞ்சலையையும்,வேலப்பனையும் தயாராக இருக்கச் சொல்" என்றான். "அப்படியே அப்பா! நீ மகாராஜனாயிருக்கணும்" என்று பாட்டி ராமுவுக்கு விடை கொடுத்து அனுப்பினாள். அங்கே அவன் அத்தை சொன்ன விஷயம் அவனுக்குச் சிரிப்பை மூட்டியது.

"மகிழந்தோப்பு மோகினியை விரட்ட ஊரார் எல்லாம் சேர்ந்து பணம் போட்டு அடுத்த கிராமத்திலுள்ள பூசாரி முனியாண்டியை அழைத் திருப்பதாக அத்தை கூறினாள். இதைக் கேட்ட போது அவனுக்குச் சிரிப்புத் தாங்க வில்லை.

குறிப்பிட்ட தினத்தில் கிளிகள் இரண்டும் கூட்டை விட்டுப் பறந்து விட்டன. காதலர்கள் இருவருரையும் ராமு கவனித்துக் கொள்வானாகையால் அவர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய தில்லை.

★

பூசாரிமுனியாண்டியின்மந்திரத்துக்கு நல்ல சக்தி உண்டு என்றும் தாங்கள் செலவழித்தது வீண் போகவில்லை என்றும் மகிழந்தோப்பு மோகினி ஊரை விட்டுத் தொலைந்து போயிற்றென்றும் ஊர் மகா ஜனங்கள் குதூகலப்பட்டார்கள்!

ஆயில் என்ஜின்கள்

பம்பு, எலக்ட்ரிக் மோட்டார்கள் முதலியவற்றை வாங்கும் போது எங்களைக் கலந்து கொள்ள மறவாதீர்கள்.

D. S. S. ராஜன் & கம்பெனி

296, லிங்கிசெட்டித் தெரு :: ஜி. டி. மதராஸ்.

பஞ்சதந்திரக் கதைகள்

223948
-600 008

மித்திர பேதம்

சிங்க ராஜனும் சஞ்சீவகன் என்ற எருதும் சிநேகம் பூண்டு வாழத் தொடங்கியது முதல், மந்திரி குமாரர்களாகிய இரு நரிகளுக்கும் காட்டில் இஷ்டம்போல் திரிந்து வாழவும், இரைதேடவும் முடியாமல் போய் விட்டது. எனவே, இரண்டு நரிகளும் சேர்ந்து, ஆலோசிக்கத் தொடங்கின.

"சிங்கமும் எருதும் சிநேகிதமாயிருப்பதை உடனே கலைத்தாக வேண்டும். இல்லாவிட்டால் நமக்கு இந்தக் காட்டில் இரை அகப்படுவதே திண்டாட்டமாகிவிடும்" என்றது தமனகன் என்ற நரி.

"எல்லாம் உன்னால் வந்ததுதானே? நீதானே அவையிரண்டுக்கும் வலியப் போய் சிநேகம் செய்து வைத்தாய்?" என்று கூறியது கரடகன் என்ற நரி.

"இப்போது அவ்விரண்டின் நட்பையும் பிரித்து விட்டால் போகிறது!" என்றது தமகனன்.

"அது அவ்வளவு சுலபமா? அவ்விரண்டு பலம் பொருந்திய மிருகங்களும் மிகவும் ஒற்றுமையாக அல்லவா இருந்து வருகின்றன. அவற்றைப் பிரிப்பது எப்படி? வைரத்தினின்றும் சுடரைப் பிரிப்பது முடிகிற காரியமா?" என்று கேட்டது கரடகன்.

தமனகன் "என்ன சொல்லுகிறாய்? பராக்கிரமத்தினால் ஆகக் கூடாத காரியங்களை உபாயத்தினால் செய்து விட முடியும். ஒரு சின்னஞ் சிறு காகம் மாபெரும் சர்ப்பம் ஒன்றைத் தன்னுடைய உபாயத்தினால் சுலபமாகக் கொன்றுவிட வில்லையா?" என்றது.

"அதெப்படி? அந்தக் கதையை எனக்குச் சொல்!" என்று தமனகன் கேட்டது. தமனகன் சொன்ன கதை வருமாறு :—

"ஒரு மரத்தில் ஒரு ஆண் காகமும் பெண் காகமும் வாழ்ந்து வந்தன. அந்த மரத்தில் ஒரு பொந்து இருந்தது. அந்த பொந்துக்குள் கிருஷ்ண சர்ப்பம் என்றொரு பெரிய பாம்பு வந்து சேர்ந்தது. காகம் இடுகிற முட்டைகளைப் பாம்பு விழுங்கிக்கொண்டே வந்தது. பாம்பின் அக்கிரமத்தைப் பற்றி காகங்களிரண்டும் ஒரு நரியினிடத்தில் போய்க் கூறி முட்டைகளைக் காப்பாற்ற யோசனை கேட்டன.

"இந்தப் பட்டணத்தில் உள்ள அரச குமாரி தினமும் நதிக்கரைக்குக் குளிக்கச் செல்கிறாள். அவள் ஸ்நானம் செய்யும்போது தன் முத்து மாலையைக் கழற்றிக் கீழே வைக்கிறாள். அங்கே போய் அவள் ஏமாந்திருக்கும் சமயம் பார்த்து அந்த மாலையைத் தூக்கி வந்து மரப்பொந்துக்குள் போட்டு விடுங்கள். காரியம் சுலபமாகி விடும்" என்று யோசனை கூறியது நரி.

காகங்கள் நரியின் யோசனைப்படி மாலையைத் தூக்கி வந்து பொந்துக்குள் போட்டுவிட்டன. அரச குமாரியின் மாலையைத் தேடி வந்த அரண்மனை வேலைக்காரர்கள் மரப்பொந்தைப் பிளந்தார்கள். பொந்துக்குள்ளே யிருந்த பாம்பு சீறி வந்தது. உடனே அதைக் கொன்று போட்டார்கள். காகங்களின் எண்ணம் நிறைவேறியது. அதைப்போல் நாமும் நம்முடைய உபாயத்தினால் சிங்கமும் எருதும் சிநேகமா யிருப்பதைப் பிரித்து விடலாமல்லவா?"

"அப்படியானால் சிங்கத்தினிடம் போய் என்ன உபாயத்தைக் கையாளப் போகிறாய் நீ?" என்று கேட்டது கரடகன்.

"சிங்கம் தனிமையிலிருக்கும் சமயம் பார்த்து அதை அணுகி சஞ்சீவகன் எருதைப் பற்றி தப்பபிப்ராயம் ஏற்படும்படி போதனை செய்துவிட்டு வருகிறேன் பார்!" என்று புறப்பட்டது தமனகன்.

சிங்கம் தனித்திருப்பதைக் கண்ட தமனகன் "சிங்கராஜனே! தங்களிடம் ஒரு முக்கிய விஷயம் பேச வேண்டும். என் காதுக்கு ஒரு விஷயம் எட்டியது. அதை நான் சொல்லாவிட்டால் ராஜவிசுவாச மற்றவனாவேன். சஞ்சீவகன் என்ற தங்களுடைய நண்பன் தங்களிடம் சிநேகமாயிருந்த போதிலும்

தங்களுக்குத் தெரியாமல் இந்தக் காட்டின் அரசாட்சியை அபகரிக்க இரகசியமாகத் திட்டம் போட்டு வருகிறான். இதைத் தாங்கள் பொய்யென்று நினைக்கலாம். ஆனாலும் நான் என் கடமையைச் செய்துவிட்டேன். சஞ்சீவகனுக்குத் தாங்கள் சம அந்தஸ்து கொடுத்ததுடன் தங்களுடைய பிரதான மந்திரியாகவும் ஆக்கிக் கொண்டீர்கள். இதன் காரணமாக சஞ்சீவனுக்குக் கர்வம் அதிகமாகித் தங்களுக்கே துரோகம் செய்ய எத்தனிக்கிறான். இதற்கு உடனே தாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்றது. சிங்கராஜா கோபம் கொண்டு ''நான் ஒருவனுக்கு அபயம் அளித்துச் சிநேகிதனாக அடைந்த பிறகு அவனுக்குக் கெடுதல் செய்யமாட்டேன். அத்துடன் நீ சொல்லுவதை நான் எப்படி நம்ப முடியும்?'' என்று கூறியது சிங்கராஜா. தமனகன் சிரித்துவிட்டு, ''அரசனே. எந்தச் சமயத்திலும் தங்களைக் கொல்லத் தயாராயிருக்கிறான் சஞ்சீவகன்'' என்று கலகம் செய்தது.

—தொடரும்

உதவி செய்யுங்கள்



ராமுவின் காற்றாடி நூலில் அதிக சிக்கல் ஏற்பட்டு விட்டது. மேலே உள்ள நான்கு நூல் முனைகளில் எது நிஜமான காற்றாடியின் முனை என்பதை உங்களால் கண்டு பிடித்து ராமுவுக்கு உதவி செய்யுங்கள்.

வேடிக்கைக் கணக்கு



சென்ற இதழில் எந்த நேர்க் கோட்டிலுள்ள மூன்று எண்களைக் கூட்டினாலும் 19 வந்ததல்லவா? அதே மாதிரி எந்த நேர்க் கோட்டிலுள்ள மூன்று எண்களைக் கூட்டினாலும் 26 வரும்படி எண்களை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டிருந்தோம். இப்போது எதைக் கூட்டினாலும் 26 வருகிறதா என்று பாருங்கள்.

அருமையான ஐந்து நூல்கள்

கனி கொய்தல்

உலகப் புகழ் பெற்ற கவி இரவீந்திரரின் உள்ளத் துடிப்பும் சிந்தனையின் சிறப்பும் செறிந்த கவிதை கனி கொய்தல். அதை மிகமிக அழகாகத் தமிழாக்கித் தந்திருக்கிறார் திரு V. RM. செட்டியார். உயர்ந்த பதிப்பு விலை ரூ. 2 8 0

ஜீவாவின் கதைகள்

"சிறு கதை என்றால் அதில் உயிர்ப்பும் வாழ்க்கைப் பண்பாடும் நிறைந்திருக்க வேண்டும்." அந்த இலக்கியத் துக்குச் மறிதும் புறஞ் சொல்லாத கதைகள் ஜீவாவினுடையவை. நல்ல விறுவிறுப்பான நடை. விலை ரூ. 3 0 0

வாழ்க்கைத் தோணி (மூன்றும் பதிப்பு)

வாழ்க்கையிலே இன்பம் துன்பம் இரண்டும் ஏற்படுகின்றன. அவை எந்தெந்த உருவிலோ வருகின்றன. எல்லாவற்றையும் எப்படிச் சமாளிப்பது? அதைத்தான் இந் நூல் மூலம் எடுத்துரைக்கிறார் திரு க. நாராயணன்.

விலை ரூ. 2 0 0

புயல் (இரண்டாம் பதிப்பு)

இளம் உள்ளத்திலே புயல் அடிக்கத் தொடங்கி விட்டால் அதுவும் காதல் புயலாக இருந்து விட்டால், அப்பப்பா! அதன் நிலைமை எப்படியிருக்கும்? ரகுநாதன் எழுதிய இந்த அருமையான நாவலைப் படித்தால் புரிந்துகொள்ள முடியும்.

விலை ரூ. 1 8 0

நான்கு கவிமணிகள்

கவிஞர்களின் உள்ளம் எப்படிப்பட்டது? அவர்களுடைய கவிதை மணிகள் எவ்வாறு உருவாகின்றன? கவிஞன் என்பவனே எப்படிப்பட்டவன்? உலகப் பெருங்கவிஞர்கள் நான்கு பேர்களை வைத்துக் கொண்டு ஆராய்ந்து முடிவு காண்கிறார் அறிஞர் V. RM. செட்டியார்.

விலை ரூ. 1 4 0

STAR PUBLICATIONS

BIG STREET,

TRIPLICANE — MADRAS—5.

Printed by Sriram at Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras 1. Published by S. S. Mani Iyer at Vadamalar Path ippagam, Thyagarayanagar, Madras 17. Editor : M. S. Visvanathan (Savi)

Regd No. M.

ரூபாய் 200 பரிசு

நல்ல காலம் பிறக்குது!
அதிர்ஷ்டம் வருகுது!
பரிசு வரப்போவுது!

வாடாமலர் அதிர்ஷ்ட நம்பர் பரிசுத் திட்டம்.
பரிசுத் தொகை ரூ. 200

வாடாமலர் ஜனவரி இதழிலிருந்து இந்த திட்டம் ஆரம்பமாகிறது. இதற்கு நீங்கள் செய்ய வேண்டிய தெல்லாம் ஆறணக்கொடுத்து ஒரு வாடாமலரை வாங்கிக் கொள்ள வேண்டியதுதான்.

நீங்கள் வாங்கும் வாடா மலரில் உள்ள நம்பர் ரூபாய் நூறு பெறக் கூடிய அதிர்ஷ்ட நம்பரா யிருக்கலாம்.

வாடாமலர் அதிர்ஷ்ட நம்பர் பரிசுத் திட்ட விவரங்களை உள் பக்கத்தில் காணலாம்.

அழகிய மூவர்ண அட்டையுடன் —

— இரண்டாம் பதிப்பு தயாராகிவிட்டது

விலை ரூ. 1 12 0

வாடாமலர்—மாம்பலம்—சென்னை 17.